L:4:6
~~M80~~
114824

பரப்பிரம்மணேநம:

மகாமகத்வம்பொருந்திய
அகஸ்திய மஹாமுனிவர் முதலிய
மஹனீயர்களருட்செய்த ஆயுள்வேத நூல்களையும்
இதரசுருதிகளையும் ஆதாரமாகக் கொண்டு
இயற்றப்பட்ட

# வைசூரிகாவஜ்ரதண்டம்.

இஃது.
ஸ்ரீரிசிரபுரம்.
ஆயுள்வேத பாஷ்கரராகிய
கெம்பீர குருசாமிநாயுடு அவர்களின் புத்திரன்
உதகமண்டலம்,
நீலகிரியைச்சார்ந்த வெலிங்டபுரியில்வசிக்கும்
ஆயுள்வேதபாஷ்கரர்

## டி. ஜி. வெங்கிடசாமிநாயுடு

அவர்களாலியற்றப்பட்டு
இராணிப்பேட்டைக்கடுத்த காரையில் வசிக்கும்
ஆ. முனியப்பமுதலியாரவர்கள் குமாரராகிய
ஆ. வையாபுரிமுதலியாரவர்களினுதவியின்பேரிலும்
காஞ்சிவரம்.
குநாதமுதலியாரவர்கள் குமாரராகிய
வித்வான் கா. ஆறுமுகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு

சென்னை:
சி. பாஸ்ட்டர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1880.

REGISTERED COPY-RIGHT.

# விளம்பரம்.

இதனுல் சகலமானபேருக்குந் தெரிவிப்பதியாதெனில், மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டில் ரிஜிஸ்ட்டர் செய்திருக்கப்பட்ட இப்புத்தகத்தைப் பதிப்பித்த அச்சுக்கூடத்தலைவர் அன்றி யாதாமொருவர் அச்சிடுவாராகில் அவ்வச்சுக்கூடத் தலைவர்களும் இதைப்பதிப்பித்துக்கொள்பவர்களும் 1867-ம் வருடத்திய (25-வது) ஆக்டின் (20-வது பிரிவில்) (6-வது) விதியின்படி மேற்படி நஷ்டத்துக்கு உத்திரவாதிகளாவர்களென்றறியவும்.

1869
615
114839



இஃது

1-வது வைசூரிவிளக்கப்பிரகரணம்,

2-வது ஊழிக்காற்று விளக்கப் பிரகரணமென்றும்,

3-வது பிண்போற்பத்தி விளக்கப் பிரகரணமென்றும்,

ஆகிய விம்மூன்று பிரகரணங்களடங்கிய

இந்நூலானது

வைசூரிகாவஜ்ரதண்டம் :

என்னும்

பெயர் பெற்றது.

1880-ம் வருடம் ஜெனவரிமாதம் ௯-ம் தேதி.

இப்புத்தகம் வேண்டியவர்கள் வெலிங்டன் தெண்டாயுதபாணி சுவாமிகோவிலுக்கடுத்த சைனபஜாரில் ஷாப்புகடை வைத்திருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, டி. ஜி. இராமசாமிபிள்ளையவர்களிடத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| கையொப்பக்காரர்களின் பெயர்........................ | க |
| வைசூரியினுற்பத்தி விபரம்........................ | கக |
| இந்நூலச்சிட்டவர் கருத்து........................ | ௬ |
| ஷை தேகலக்ஷண விபரம்........................ | க௩ |
| வைசூரியினுற்பத்திவிபரம்........................ | கக |
| வைசூரியின் குணானுபவங்கள்........................ | க௫ |
| வைசூரியாகிய சுரமென்றறியவேண்டிய விபரம்........ | க௯ |
| குருபற்பம்........................ | உ௰ |
| குருதண்டாமணக்கெண்ணெயை காச்சல்கண்டமூன்று நாளவசியங்கொடுக்கவேண்டிய விபரம்........ | உக |
| வைசூரியெனுமம்மை கண்டிருக்குவதற்குமுன் அதிசாரபேதிகாணில்........ | உ௭ |
| வைசூரியின் பேரில் சீதமொத்தக்கடுப்புகண்டால்........ | |
| அதிசாரபேதிக்கு........................ | |
| கலைமான்கொம்பு பஸ்பஞ்செய்யும் விதம்........ | உ௮ |
| தொண்டைக்கம்மலுக்கு........................ | உ௯ |
| மாதளம்பூவுகியாழம்........................ | |
| சுரத்திற்குகியாழம்........................ | ௩௰ |
| சகலவித அம்மைகளுக்குந்தாகத்துக்கு குடிநீர்........ | |
| மலச்சட்டிற்குவெண்ணெ........................ | ௩க |
| வைசூரிகண்டவர்கட்கு கண்ணுக்கு ஒத்திடசெய்யவேண்டிய விபரம்........ | ௩உ |
| வைசூரிகண்டவர்கட்கு ஆசியினும் நீர்த்தாரையினும் ரெத்தம் காணுகிறவர்கட்கு மருந்து........ | ௩௩ |
| குலக்கிமருந்து........................ | ௩௪ |
| ஷை குலக்கி வேறுபிரயோகம்........................ | ௩௫ |
| சூராதபுண்ணிற்கு மருந்து........................ | ௩௬ |
| வைசூரியெனுமம்மை எரக்கங்கண்ட ஏழாம்நாள் உள்ளுக்கு கொடுக்கவேண்டிய மருந்துகளின் விபரம்.. | |

முதலாவது ஆரோக்கியஸ்நானஞ்செய்வித்து வைக்க வேண்டிய விபரம்........ ௫௧
இரண்டாவது ஸ்நானஞ்செய்வித்த பின்பு மூன்றாவது ஸ்நானஞ்செய்துவைக்கவேண்டிய விபரம்........ ௫௪
நான்காவது ஸ்நானஞ்செய்விக்கவேண்டியவிபரம்........ ௫௭
வைசூரியினால் நேரிட்ட இரணங்களுக்கு பூசவேண்டிய விபரம்........ ௫௭
மருமுள்காணுதற்குகாரணம்........ ௫௭
வைசூரியினால் கண்ணில் பூவிழுந்தால்........ ௫௮
வைசூரியெனுமம்மைகண்டு ஸ்நானஞ்செய்துவைப்பதற்கு முன்னதிசுதாகங்கண்டால்........ ௫௮
வைசூரிக்கு பத்தியம்........ ௫௮
பத்தியங்களுக்காகும் பதார்த்தங்கள்........ ௫௯
ஆகாப்பதார்த்தங்கள்........ ௫௯
சாமளாதேவியென்று மூழிக்காற்றினற்பத்தியு மதின் குணனுபவமும்........ ௬௦
அதேபதிக்கு மருந்து திரிவிதவிஷபேதிகளில் ஒவ்வொன்றிற்குமுபசாந்தியாய்க்கொடுத்துப்பார்க்கவேண்டிய விபரம்........ ௬௫
இவிதபேதிக்கும் வேறுபிரயோகம்........ ௬௯
மூன்றிற்குங்கியாழஞ்செய்து கொடுக்கவேண்டிய விபரம்........ ௭௧
லவிதபேதிகளினாலுண்டாகும் வாந்திகட்குமருந்து........ ௭௨
விஷபேதிக்கு சண்டமாருதக்குளிகை........ ௭௩
கொம்பனெனும் விஷபேதிக்கு........ ௭௪
கூடற்பவெனுக்கு யொழுவிபரம்........ ௭௫
அக்காரத்திற்கு யொழுவிபரம்........ ௭௫
வார்திபேதிக்கு குளிகை........ ௭௬
பத்தியம்........ ௭௭
விஷபேதியினால் அதிசுதாகங்கண்டவர்கட்கு யொழும்........ ௭௮
பேதிகண்டுசௌக்கியமடைந்தவர்கட்குதேகபலனுக்காக சேர்க்கவேண்டிய புலால் காய்கறிமுதலியவிபரம்........ ௭௯
பிண்டோற்பத்தி விளக்கப்பிரகரணம்........ ௯௨
சரீரசூக்ஷ்மம்........ ௯௨
கருப்போற்பத்தி........ ௯௩
சாமளாதேவியெனும் மூழிக்காற்றுகிய யுகபேதியின் திரிகுணலக்ஷணம்........ ௯௪





கொம்பனென்னும் பேதியின் குணனுபவம் கூடற்பவென்னும் பேதியின் குணனுபவமும்........ ௬௧
அக்காரமெனும்பேதியின் குணனுபவம்........ ௬௨
பொதுக்குணங்கள்........ ௭௨
வேறுவிதமாகிய சகல பொதுக்குணங்களின் விபரம்........
பிண்டோற்பத்தி........ ௯௯
கருத்தரிக்கும்விதம்........ ௯௯
கருப்பகருவுற்பத்தி விபரம்........ ௯௦
சரீரத்தினளவு பிரமாணங்களின் விபரம்........ ௯௧
தேகக்கட்டளை விபரம்........ ௯௩
நாடிபத்திற்கு விபரம்........ ௯௪
கெற்பஸ்திரீகட்கு (க0)மாதத்திற்கும் வரும்நோயும் அதற்கு அவுழத விபரமும்........ ௯௬
கெற்பஸ்திரீகட் குபயோகப்படுத்தவேண்டிய பத்தியத்திற்கான பதார்த்தங்கள்........
பத்தியத்திற்காகாப் பதார்த்தங்கள்........ ௭௨
கெற்பஸ்திரீகள் ஐந்தாமாதத்திலும் ஏழாம்மாதத்திலும் சாப்பிடவேண்டிய எண்ணெய்........ ௭௩
கெற்பஸ்திரீகட்கு காணும் சுரத்திற்கு........ ௭௫
கெற்பஸ்திரீகட்கு கல்லடைத்தால்........ ௭௪
பிள்ளைபெற வருத்தப்பட்டால்........ ௭௭
பிள்ளைபெற்றதில் வயிறுபழுத்தால்........ ௭௮
கெற்பத்தில் செமரித்த பின்னங்கள் மலட்டுச்சின்னங்கள்........ ௭௯
கெற்பஸ்திரிக்கு நீரடைத்தால்........ ௭௯
வயிற்றில் செத்தபிள்ளைவிழ........ ௭௯
பச்சையுடம்பில் வயிறுபொருமிவலிகண்டால்........ ௭௯
கர்ப்பந்தரித்தல்........ ௮0
அகஸ்தியமகாமுனிவரருளிச்செய்த காவியம் ஆயிரத்தைத்தாறிற்கூறிய மலட்டுச்சின்னங்களின் விபரமும் அதற்கு சிகிச்சையாகிய மருந்துகளும்........ ௮௧

வைசூரிகா வஜ்ரதண்டமென்னு மிப்புத்தகம் கையொப்பம் வைத்தவர்கட்கு ரூபா ஒன்றாகவும் கைவிலைக்கு ரூபா ஒன்றேகாலாகவும் கொடுக்கப்படும்.

இங்ஙனம்,

டி. ஜி. வெங்கிடசாமி நாயுடு,


ஆயுர்வேதபாஷ்கரன்,

## வெலிங்டன்

## கையொப்பக்காரர்களின் பெயர்.

| பெயர்கள். | புத்தகம். | பெயர்கள். | புத்தகம். |
|---|---|---|---|
| ஆ. வையாபுரி முதலியார். | 4 | கா. ஓ. முகம்மது மொய்தீன்சாயப். | 1 |
| யம். வி. இராமாநுசலு நாயுடு. | 3 | யன். ஐதர்சாயப். | 1 |
| டி. யென். முத்துசாமிபிள்ளை. | 2 | சி. குப்பசாமிமுதலியார். | 1 |
| சி. மீனாட்சிசுந்திரம்பிள்ளை. | 2 | சி. முனிசாமிபிள்ளை. | 1 |
| சி. தாசுநாயுடு. | 1 | பி. இரங்கசாமிநாயுடு. | 1 |
| பி. இராமசாமிநாயுடு. | 1 | டி. இராமசாமிபிள்ளை. | 1 |
| டி. கே. இராமசாமிபிள்ளை. | 1 | டி. யன். முத்துசாமிபிள்ளை. | 2 |
| சி. வாசுதேவராவ். | 1 | டி. ஜி. ஏகாம்பரம்பிள்ளை. | 1 |
| எஸ். சுப்பையர். | 1 | டி. எம். அப்பாசாமிபிள்ளை. | 1 |
| ஓய். சுப்பிரமணிய ஐயர். | 1 | பெள்ளிகவுடர். | 1 |
| இரகுநாத ஐயர். | 1 | டி. ஆர். காத்தபெருமாள்பிள்ளை. | 1 |
| மகாதேவையர். | 1 | ஜி. க. வைத்தியலிங்கம்பிள்ளை. | 1 |
| ஸ்ரீகண்டையர். | 1 | ப. முத்துசாமிபிள்ளை. | 1 |
| எம். இரத்தினசாமி ஐயர் | 1 | வெங்கட்டன்செட்டியார். | 1 |
| துரைசாமிநாயுடு. | 1 | அனுமந்தசெட்டியார். | 1 |
| டி. கே. இராமசாமிபிள்ளை. | 1 | ஸ்ரீனிவாசலு நாயுடு. | 1 |
| ஜி. சபாபதிபிள்ளை. | 1 | கோ. பாலையா. | 1 |
| கா. கிருஷ்ணராஜமுதலியார் | 1 | | |
| மொஹிதீன்சாயப் | 1 | | |
| ஷேக்மஹமத்சாயப் | 1 | | |

| பெயர்கள். | புத்தகம். |
|---|---|
| **குன்னூர்** | |
| சி. இரங்கசாமிநாயுடு. | 2 |
| டி. முத்துசாமிபிள்ளை. | 2 |
| டி. வைத்தியலிங்கம்பிள்ளை. | 2 |
| டி. வைரபெருமாள்பிள்ளை. | 2 |
| முனிசாமிநாயுடு. | 2 |
| நஞ்சப்பராவ் அண்டபுருேதர்ஸ். | 1 |
| குப்பமுத்துபிள்ளை | 1 |
| வை. கந்தசாமிபிள்ளை | 1 |
| இராமாநுஜராவ் | 1 |
| சின்ன. வேலாயுதம்பிள்ளை. | 1 |
| கந்தசாமிபிள்ளை. | 1 |
| நல்லதம்பிசெட்டியார். | 1 |
| ஆறுமுகசாமிமுதலியார். | 1 |
| பீமபிள்ளை. | 1 |
| தி. மருதைநாயகம்பிள்ளை. | 1 |
| மு. இரங்கசாமிகோனர். | 1 |
| நா. கிருஷ்ணசாமிநாயுடு. | 1 |
| சி. ரா. சுப்பராயபிள்ளை. | 1 |
| குட்டியாபிள்ளை. | 1 |
| தி. பெ. நாராயணபிள்ளை. | 1 |
| ஆ. நா. இரங்கசாமிபிள்ளை. | 1 |
| மூ. கருப்பண்ணகோனர். | 1 |
| இராஜலிங்கம்பிள்ளை. | 1 |
| டி. வி. கோவிந்தம்பிள்ளை. | 1 |
| தி. ந. முத்துக்ருஷ்ணசாஸ்திரி. | 1 |
| நா. அண்ணாசாமிஆசாரி. | 1 |
| உ. வெங்கடசாமிநாயுடு. | 1 |
| வெங்கடசாமிஆசாரி. | 1 |
| பி. குமாரசாமிபிள்ளை. | 1 |
| தி. நா. வீரபத்திரபிள்ளை. | 1 |
| தி. மு. மருதைநாயகம்பிள்ளை. | 1 |
| தி. நா. வேணுபிள்ளை. | 1 |
| முருகேச முதலியார். | 1 |
| தி. சி. சிவநாராயணபிள்ளை. | 1 |
| தி. சந்திரசேகரம்பிள்ளை. | 1 |
| தி. மருதையாபிள்ளை. | 1 |
| பி. இராமசாமிபிள்ளை. | 1 |
| வி. வெங்கடராமைய செட்டியார். | 1 |
| எம். ஆர். ஆதிமூலஇராமாநுஜதாசர். | 1 |
| சா. ஜோசப்பொட்லர். | 1 |
| மூக்காப்பிள்ளை. | 1 |
| சி. இரங்கசாமிபிள்ளை. | 1 |
| தி. செங்கப்பெருமாள் பிள்ளை. | 1 |
| அண்ணாப் பிள்ளை. | 1 |
| **உத்தகமண்டு.** | |
| எம். ஸ்ரீனிவாசநாயுடு. | 2 |
| எ. சி. முத்துசாமிமுதலியார். | 1 |
| ஆ. கா. முத்துசாமிமுதலியார். | 1 |
| எ. பொன்னம்பலமுதலியார். | 2 |
| எம். இராமாநுஜநாயுடு. | 1 |
| சி. வைத்தியலிங்கம்பிள்ளை. | 1 |
| எம். சி. முத்தையா. | 1 |
| டி. கிருஷ்ணசாமிநாயுடு. | 1 |
| அ. சேஷாசலநாயுடு. | 1 |
| பி. முத்துசாமிபிள்ளை. | 1 |
| சுந்திரம்பிள்ளை. | 1 |
| வெங்கடராமபிள்ளை. | 1 |
| தி. சுப்பாபிள்ளை. | 1 |
| வெங்கடராமமுதலியார். | 1 |
| கணபதிமுதலியார். | 1 |
| இராமசாமி ஐயர். | 1 |
| கோதண்டராமசாமிநாயுடு. | 1 |
| டி. இரங்கசாமிபிள்ளை. | 1 |
| டி. எம். இரங்கசாமிபிள்ளை. | 1 |
| வெங்கடசாமிநாயுடு. | 1 |
| நாராயணநாயுடு. | 1 |



பிரம்மரிஷி சீடர்களுடன் அகத்தியமகாமுனிவர்.

புக்கொளியூரெனும் அவிநாசி

வித்வான் தங்கமுத்துப்பிள்ளை

மாணாக்கரிலொருவராகிய

அ. இ. வெங்கிடசாமி முதலியாரா லியற்றியது.

# சிறப்புப்பாயிரம்.

## ஆசிரியப்பா.

வண்டார்பூவின் வாசனைநேரா ... ... ... ய்
அண்டமெல்லாம் வேறற்றோர்க் ... ... ... து
வாக்கொடுசிந்தையால் வன்புகழேற் ... ... ... ற
நோக்கமொன்றா நூல்களுக்கெட் ... ... ... டா
நித்தமாய்நிற்கும் நிர்மலவீடா ... ... ... ய்
சித்தாயெல்லான் நிறம்பெறத்தருகு... ... ... ங்
கொண்டுவன்னக் கோடீர்ஞானமா ... ... ... ய்
விண்டாய்நின்று மேலொன்றைந்தாய் ... ... த்
தொல்பூவாக்கித் திரியாத்துடைத்து ... ... ம்
மல்சீர்சித்தருண் வினையோனருளா ... ... ... ற
றேன்றுவிக்கும் பூச் சோமறைதற்றுள்ளி ... ... ச்
வான்பழிக்குங்குழன் வாட்கண்ணுள்ளி ... ... ... ர்
மலைமகட்குறைந்த மாசறுமண் ... ... ண
ணிலைபெறுமாயுன் வேதபெருநீழுமுத ... ... க்
கடலின்முகண்டக கருத்தினிற்றெளிந்த ... ... த்
தடவரையுலவிற் றுகடீருளா ... ... ல
வாணிலாபுத்தோன் மாய்வோர்க்கமு ... ... த
வான்பொருத்தன்ன வைகுரியல்லெ ... ... ம
சாமளாதேவி யெனச்சண்டமாருத ... ... ப்
பூமிசையுற்ற பிண்டோற்பத்திபெ ... ... ங்
ருண்டோர்களா தமைத்தபிரகா ... ... ண
மூன்றுமூவா சிட்டைசகுருட ... ... னே
வான் வைகுரிகா வஜ்ரதண்டமெ ... ... ன

தேன்படுபேராற் செந்தமிழ்வல் ... ... ... லா
ரல்லர்சொல்லாற் றெரிவாயுண ... ... ... ர
வெல்லிங்கட்ட புரியுண்வழு ... ... ... வா
வைத்தியர்தங்கட் கமுதமென் ... ... ... ன
வைத்தியமாநூ னவின்றுனன்று ... ... ... ன்
விண்படும்பண்ணுற மழிகளுறும்பூ ... ... ... ந
தண்படுஞ்சோலையுந் தாப்படுமன்ன ... ... ங்
கண்படுகஞ்சக் காரிகுவாவியு ... ... ... ம்
விண்படுசோமன் விரியொழிர்பறப்பன ... ... க்
கரும்புமரைசங்கின் றுன்றொழித்தோங்கு ... ... ந
தருவாட்பறப்புஞ் சேர்பெறுநூலெலா ... ... ந
திறிவாவுணர்ந்த சடமுறுஞானமா ... ... ... ங்
குருசாமியெனுவேள் கூறுவள் ... ... ... ள
லறுவாப்பயனெலா மணைந்தவமைந்த ... ... ன
தங்குமால்பூதவித் தேசமாய்வாய்ந்தோ ... ... ன்
சுந்தராம கடங்கியநாவோ ... ... ... ன்
நீர்றுநோய்களை நலக்குமவிழ்த ... ... ... ன்
றுங்கபூமகட் பொங்கியதோர்ம ... ... ... ன
வெங்கிடசாமியெனும் வீருறவே ... ... ... ழே.

சிறப்புப்பாயிரம் முற்றியது.

---

## சாற்றுக்கவிகள்.

---

திரிசிரபுரம் முத்துவீரக்கவிராயர்
மாணாக்கரிலொருவராகிய
தி. செ. காத்தபெருமாள்பிள்ளையவர்களால்,
இயற்றியது.

### நிலைமண்டில ஆசிரியப்பா.

திங்கள்சுற்சடையோன் றேவியம்பிகைக்கு
தங்கவாயுண் வேதஞ் சாற்றினரிதாய்ச்
சாற்றியவேதந் தனைமிகவுணர்ந்து



சாற்றியகருணையி னின்பஞ்சுரந்து
வானிடுவின்னென மறைவுறுதேசத்
தோற்றிடுமாந்தர் துன்புறுவண்ணம்
மறைத்திடுமலத்தின் பக்குவமோர்ந்து
நந்திக்கருள்செய நவகோடிசித்தர்
தங்கவரதிந்நூற் றவமதுமேலாய்ப்
பாஸ்கரராகிப் பாடியசாஸ்திரம்
பனிரெண்டுலட்சத்துண் வைகுரிபதினெண்மரையும்
வழுத்தினர்மறைவாய்ச் சடுதியிலுற்பவிக்குருஞ்
சாமளோயுழிழுவெனே வுரைத்தனர்முனிவோர்
பயன்றாக்காதுகம்தேயப் பண்டிதரியாவருஞ்
சிகிட்சைகளாகாதெனச் செப்பியேயெவரும்
உற்றதோரம்மைச் குறித்தானவள்மாரி
மற்றதோர்பேதிக்கு மாகாளிதுணையென
வழக்கமாய்மொழி வழங்கினர்வெகுகால
மாசற்றவறிவதை வழக்கமென்னிருண்மூடி
தூசுற்றின்றதை துலக்கவைப்பதற்கு
வைசுடிகளிகாத்து வழுதலறப்பான்
செப்பியவைசூரிகா சிறப்புறுங்கோர்வை
யாதெனின்னா னறந்திடுவண்ணஞ்
சிகிட்சைப்புகழொடிறைவனருளாற்
றிங்குறுதென்படுதெஞ் சித்தத்தின்வண்ணம்
அருளினளின்றூலை யன்பின்மிகுத்த
வெங்கட்டசாமியெனும் வெகுகுண சீலன்
உரைத்தனனின்றூலை யுற்பனமுவாய்
தப்பிதமில்லாச்சண்டமாருத ஊழிக்காற்றுற்பனமுவாம்
அங்கமதுளாதிட்ட வம்மைதன்பதினான்குக்கும்
மங்கையற்கற்ப மகவுற்பத்தியின்
திங்கள்பதினாட் சிறந்திடுநோய்களின்
பாலுவைக்கடப் பனியெனவொதுங்கி
தீர்த்திடுவண்ணஞ் செப்பினனிழந்த
மிப்பெருதவிக் கிணையாரொன்றில்லை
வளவன்றனக்கு வன்மைச்செலுத்தி
வழிப்படுகிடவீர வணங்கிவாழ்த்துவாம்.

இஃது

திருத்தஞ்சைமாநகரம் கருந்திட்டாக்குடி

## த. ப. பெரியசாமிபிள்ளையவர்களாலியற்றியது.

எண்சீர் ஆசிரியவிருத்தம்

சாற்றுக்கவி.

சீர்கொண்டபுவிமீது கனமேகமேசென்று
செப்பரிய மூயன்முகந்து
செகதலந்தழைக்கவே கனமழைசேர்ந்துமே
செந்நெற்குமுறன் முதலாய்
வாடிபபயிர்கட்கு குறைதீரப்பொழிந்துமே
வைகஞ்செழிக்கு மாப்போல்
மாகுருவைசூரி வஜ்ரகாதண்டமெனுமாமேகமாயெழுதுவே
மாயுருவன்னை வருஷித்தனன்வசூரிவன்மைநூலே.

## இந்நூலச்சிட்டவர்கருத்து.

மாக்ஷிமை தங்கிய சிநேகிதர்களே! யிவ்வுலகத்தின்கண் அனேக சித்தமகா புருஷர்கள் திருவாய்மலர்ந்தருளிய மூன்று லக்ஷங்கிரந்தங்களில், வைத்தியகிரந்த மிரண்டுலக்ஷமென்றும் வர்ததிரந்த மொருலக்ஷமென்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்களல்லவா.

ஆனாலவர்கள் செய்த சரித்திரங்களோ மறைவாயிருக்கின்றன. மேலுந் தற்காலம் பண்டிதாள் முதலியபிரமுகாக்களுக்கு மற்றவர்களுக்கு முபயோகமாக அகஸ்திய மாமுனிவர் மற்றுமுதலிய மகரிஷிகளால் திருவாய்மலர்ந்தருளிய நூல்களை ஆதாரமாகக்கொண்டு, வைசூரிவிளக்கப்பிரகரணமென்றுஞ் சாமானதேவியின், உழிக்காற்று விளக்கப்பிரகரணமென்றும் பிண்டோற்பத்தி விளக்கப் பிரகரணமென்றும், இம்மூன்றுபிரகரணங்களடங்கிய, மாசூரி, கா, வஜ்ர, தண்ட, மென்னும் பேர்பெற்ற வின்னூலைப்பாவலர்களு மெளிதிலுணரும் பொருட்டுயென்றெளிவாகிய நடையிற்சொல்லமுயன்றனன்.

I-வது. நமது தேசங்களில் வைசூரியென்னும் அம்மையினால் பெரும்பாலும் குழந்தைகளுக்குஞ் சிற்சில பெரியவர்களுக்குங் கெர்ப்ப ஸ்திரீகளுக்குஞ் சிகிச்சைசெய்ய யேதுவிருந்துஞ்செய்ய தயில்லாமையால்



அனேகமனேகமாய்ச் சேதமாகின்றார்கள். ஏனெனில் நமதுதேசத்தில், எவ்விதக்கொடிய அம்மைகள் கண்டபோதிலும், அதற்கியாதாமொரு அனுகூலமாகிய சிகிச்சைகளைச்செய்யக்கூடாதென்றும் அல்லது யின்னதைச்செய்ய வேண்டுமென்றுந் தெரியாமையாலுந் தெரிந்தவிவேகிகளாகிய பண்டிதாள் முதலியவர்கள் சொல்லியபோதிலும் அதுகளை அங்கீகரிக்காதவர்களாயும், அம்மைகண்டவர்களுக்கு யாதாமொரு சிகிச்சைசெய்யின் பிரதிகூலப்படுமென்று, முதியோர்கள் சொல்வதுவழக்கமாயிருக்கிறது. இப்பேதமையாகிய அவிவேகமானது அனுகூலமாகிய சிகிச்சைகளைசெய்யப் பிரியப்படுகிறதில்லை. ஏனென்றால், ஒளஷதமுதலியசிகிச்சைகளை, செய்விக்கும் விஷயத்தில், டைவசூரிக்குரித்தாகிய மாரியம்மனென்னுந் தேவதையால் பெரியகுற்றம் நேரிட்டபட்டதினால் பிரதிகூலமுண்டாகுமென்று மெல்லாவற்றிற்கும் அந்தமகமாயியேதுணையென்றும் அவளெப்படிச்செய்தாலுஞ் சரியென்று மவள் பேரிற் பாரம்பழியைப் போட்டுவிட்டாலவள் ரக்ஷிப்பாளென்று மவளாலுண்டாகிய வெல்லாத் துன்பங்களையுமவளே கைக்கொள்ளுவாளென்றுஞ் சொல்லுவதுமன்றி அம்மைகண்டவர்களின் வீட்டிலெண்ணையிட்டு ஸ்நானஞ் செய்யப்படாதென்றும் ஏழைகளிரக்கத்துடன் கூவிப்பிச்சை கேட்டால் அம்மன்வீட்டிலிருக்கிறபடியாற் பிச்சையிடப்படாதென்றதற்றும் பெரியவழியினரும் அம்மைகண்டவர்களுடைய வீட்டிலிருக்கிறவர்களி லியாதாமொருவர் பிரதேசத்திற்குப் போகப்பிரயாணப்பட்டாற் கட்டமுடி முதலியவைகளுக்குணவுகட்கொண்டுபோகக்கூடாதென்றும் பின்னும் வைசூரிகண்டு காலஞ்சென்ற குழந்தைகளல்லது பெரியவர்களுக்காகத் துக்கிக்கவு மித்திரபந்துக்கள் முதலிய சிநேகிதர்களுக்குத் தெரியப்படுத்தக் கூடாதென்றும் பிறவல்லாமல் முக்கியந்திட்டுத் தடக்குகண் மட்டுமாகாது மற்றொரு தப்புகள் நடந்தாலும் அவளங்கீகரித்துக் கொள்ளுவாளென்றுசொல்வது மாத்திரமல்ல நீங்களியார் தொன்றுக்கு மஞ்சவேண்டாமென்று பெரும்போக்காக ஸ்தாபித்துப்பேசுவது நமதுதேசத்துவழக்கமாயிருக்கிறது. முக்கியாங்கடவுளால் நமக்குக்கிருபை செய்யப்பட்ட விவேகமென்னும் ஞானத்தாலிவ்வைசூரியைப்பற்றி சித்தர்கடொடங்கிருஷிகளைசூரியென்னும் வியாதியோ மற்ற மற்ற,வியாதிகளுக்கெல்லா மிதுகுரோவென்றும் போகட்டுமென்றும் வைசூரியென்றும் அம்மையென்றும் நமதுயிர் பிரியுங்காலமட்டும் நம்மைவருத்துமென்று முனிவர்கள் கூறியிருக்கின்றமையால் நமது இத்தேசங்களின்குழந்தைகளாகிய விருக்ஷிக்க கடவுள்ளதால் மக்கு

கொடுக்கப்பட்டிருக்கும் விவேகமென்னும் ஒளியினலிவ்வஞ்ஞான விருளைநீக்கி இக்கொடிய வியாதிகட்கு தகுந்தசிகிச்சையாகிய வின்னாலையாவர்களுங் கைக்கொண்டு இதிநுணர்த்துமாறு ஷெவியாதிகளைச்சிகிட்சிக்கத் தொடங்குவீர்களாகிற் பரமனருளாலிவ்வியாதிகட்கு நன்மையை விளைவிக்குமென்பது கருத்து.

II-வது.... நமதன்பர்களே இக்கொடிய வைசூரிக்கு மேற்பட்ட வேறுவிதமாகிய ஓர்விதவிஷக் காற்றானது நமதுதேசத்தில் நீடுழிகாலமாய் வியாபித்தநேக பட்டணங்களிலுங் கிராமங்கள் முதலியபலவிடங்களைப் படுகூரணப்படுத்துவதை நாமநிர்தமட்டில் கண்டிருக்குறோமல்லவா அக்கொடிய வியாதியாகிய சாமளாதேவி யெனுமூழிக்காற்றினலனேகர் சடுதிமரணத்திற்குப் பாத்திரர்களாகுகின்றார்களல்லவா? இக்கொள்ளை நோயானது கண்டால், கண்டவர்கள் வினைப்பயனால் நூற்றுக்கு இருபத்தைந்து ஜீவிப்பார்களென்பதே சந்தேகம். இச்சண்டாள நோயானதுகண்ட தக்ஷணஞ் சிகிச்சியாமல் வாய்வானபதார்த்தங்களை புசித்ததாகவும், மந்தத்தினு லுண்டாகிய தென்றும் உஷ்ணஅதிகத்தாலுண்டாயிற்றென்று மமதையாயிராமல் அதற்குத் தகுந்தசிகிச்சைகளை வுடனேசெய்யாமல் அலக்ஷியமாய் விட்டுவிட்டு, பிந்திசெய்யப்பிரியப்படுவதினல் ஷெயூழியினுடைய விஷமானது நாகசர்ப்பந்தீண்டினு லவ்விஷமானது கடிவாயினின்று இரத்தத்தாரையி லெப்படியேறுகின்றதோ அதைப்பார்க்கிலும் பதின்மடங்கதிகமான துரிதத்தில் நல்ல இரத்தத்தை முறித்துத் தரீரக்கி வாதபேதி யதிகரித்துச் சடுதிமரணத்திற்கேதுவாக்குகின்றது ஆகையால் ஷெவிஷபேதியானது கண்டவுடனே, காலபேதமாகிய குறைனுபவத்தா லறிந்துக்கொண்டு கூடியசீக்கிரத்தில்தகுந்தசிகிச்சையாகிய அவிழ்தத்தைப்பிரயோகிக்கின்; ஈஸ்வர அநுக்கிரகத்தால் பெரும்பாலுமனேகர் சௌக்கியப்படுவார்களென்பதுமுக்கியகருத்து.

III-வது கர்ப்பத்தின் கிருபையினும் கருத்தரித்துத் தசமாதங்களிலு முண்டாகியசிற்சில விம்சைகளுக்குத்தகுந்த சிகிச்சைகளை யெடுத்துரைக்கும்வண்ணமாது.

ஸ்ரீகள் கெற்பமாகிய முதற்றிங்கண் முதற்பத்துதிங்கள் வரைக்குமவர்களுக்கொவ்வொரு மாதங்களிலும்நேரிடும்பிணிகளுக்குத்தகுந்தசிகிச்சைகளிருந்தும் பெரும்பாலுமவைகளுக்கு சிகிச்சைசெய்யாமல் விட்டுவிடுகிறபடியினாலும் பிந்தி அனேகவிம்சைகளுக் காதாரமாயிருக்கின்றது. ஏனென்று லெப்போதைக் கப்போது காணும் நச்சுவலிமுதலிய நோய்களுக்குத்தகுந்த சிகிச்சைசெய்வதினாலுண்டாகு மனுகூலத்தைத் தெரிந்துசெய்ய ஏதுவில்லாமல் கெற்பஸ்திரீகளுக்கு மருந்துகளுள்ளுக் குபயோகப்படுத்துவோமாகில் கெற்பத்திற்கு விக்கினம் நேரிடுமென்று சிகிச்சைசெய்யாமல் விட்டுவிடுவது வழக்கமாயிருக்கின்றதாகையால், அக் கெற்பஸ்திரீகளுக் கொவ்வொரு மாதங்களிலும் நேரிடுஞ் சிற்சில விம்சைகளுக்குந் [illegible] தகுந்த சிகிச்சைகளையு மின்னுஞ் சில நுட்பமாகிய [illegible] விபரங்களையும் யானென் னனுபவத்தினுற் றெரிந்தமட்டுஞ் சொல்லப்புகின்றனன்.

ஏனென்று லிதனு லனேக ஜனங்களுக் குபயோகமாக சௌக்கியமுண்டாகும்பொருட்டடியேன் யிம்மாதிரியான யேற்பாட்டை அதிநுட்பமாயுங், குழந்தைகளின் பரிதாபம் குழந்தைகளைப் பெற்றோர் மயங்காமல் வசிஷ்டரைப்போல் பொறுமை பூண்டினனாலேத்துவக்கமுதல் முடிவுவரையிற் பெரும்பாலும் யாவர்களும் வெளிதிலறியும் பொருட்டடியேன் சொல்லப்படு மிச்சிறுபுத்தகத்தின் விபரத்தை சகலரு மங்கீகரித் தெழுத்துக்குற்றஞ் சொற்குற்றம் பொருட்குற்றமேதிருக்கினு மங்கீகரிப்பர்.

இங்ஙனம்:

டி. ஜி. வெங்கடசாமிநாயுடு,
ஆயுள்வேதபாஷகரன்.

---

கடவுள் துணை.

## விருத்தம்.

திரிபுரத்தை யெரித்த பதிபவிலைப்போற் ... ... றி
ஜனகாதி ரிஷிகள்பதினெண்பேர் போற் ... ... றி
கருத்தரித்த பிந்துகமலபதம் போற்... ... ... றி
சங்கரத்னதீபசுழி முனையைப்போற் ... ... ... றி
மருமலர்மயிகைஞானகுருவைப் போற் ... ... றி
மதிகஜருண்டலிக பதிபதமேபோற் ... ... ... றி
நிருபமணிமகுடமுடிவானஜோ ... ... றி
நிர்மலத்தாய்பதம்பணிந்து நிகழ்த்தவே... ... ... வே.

### எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அரும்பொருளாயண்ட பிண்டமதிரவியாயான்மாவா ... ய
அருமறைகள் புகன்பராத்தரும்பிரம்மத் தடிகள்போற்... ... றி

சுரும்புகளார் மாலைகந்தனடிக்கமலம் போற் ... றி
துகளிலர்நாமகட்டன் மீதேருங்கழல்கள் போற் ... ... றி
உரம்புகள்சிறெழிலோங்கு மான்றாள்கள் போற் ... றி
யொப்பரியதிருமார்பன் பொன்னடிகள் போற் ... ... றி
தருமபுயலறல்கழிந்த குழற்கௌரிபதங்கள்போற் ... றி
துய்யவைகுரிகாவஜ்ரதண்டஞ் சாற்றுவே ... ...னே.

## திருமுனிதிருக் காப்பு வெண்பா.

வள்ளலர்கடா முளைத்தவழுவிலா வாயுண்ணு ... ... லை
விள்ளவகை நாயேற்கு விளங்கவுரை • உள்ள ... ... மே
என்வினையைநீக்கு மிறைகுருமுனியின் ... ... ற
றன்பொற்சதங்கைதாள் காப் ... ... பு.

## பரசிவவணக்கம்.

கலிவிருத்தம்.

பூதலமனைத்தும் புகழ்தடி யேற்றி ... ... ... ... டீ
எவுலகனைத்தும் எந்தியாள்கடவு ... ... ளை
அணிந்துநாள் சூட்டியவருமலர்க்கெ... ... ... லா
வணங்கிவாழ்த்திட வருந்தமிழைந்து ... ... மே

## பராசத்திவணக்கம்.

வெண்பா.

அட்டவுருவுமைக் தொழிலுமாசை வடிவும்பயனு ... ம்
எட்டரியபூரணமு மெட்டுரவும் கிட்டைகரு ... ம்
தன்னிடமாகியின்பந்தரவே யதித்தொடுக் ... கு
மன்னருட்சத்திமை யடிபணிந்தேற்றுவா ... ம்

## சித்தபுருஷர்கள்துதி-வெண்பா.

ஆற்றலண்ணலமைந்திடவின்று ... ... ல்
ஆற்றலுற்றவகத்தியன்போதவ ... ... ம்
ஆற்றலோங்குமந்தணர் நூலுணர ... ... ர்
ஆற்றவிற்பனரடிதலைக் கொள்குவ ... ... ம்

## அவையடக்கம்,

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேராழி சூழுலகிலாயுள்வேத பெருக்கட்டுளன்னைர்க் ... த
பெரியோர் நீருர் முன் தமிழேனைப்பாற் ... ச



வைசூரி கண்டவனுக்கு.—ஈய்க்கள் மொய்க்காமல் ஓர் விதவையினுடைய கையில் வேப்பிலை கொத்தைவைத்துக் கொண்டு விசிறியபாவனையாகவும் டி அம்மை கண்டவனு டைய கையில் வாழைப்பழமும் அவன் படுக்கையில் கரும்பு இளநீர் பழையசாதமுமிருக்கும் பாவனையாக இந்தப்படம்.



சீரழியெனவைசூரிகாவஜுரதண்டநூற் ... ச்
செப்புகிற முற்றதனைத்தெழுந்து நோக்கி ... ப்
பாரழிவெண்டிகை மேய்ந்து விசும்படைந் தெழிலவனா... ப்
பாரிதபேய்ந்தார்ரகிப் பறவைசிறவிப்பேனென் ...றே
சீருழிக்காலன்ன லூரிசெல்தகமை யொத்ததாய் ... ச்
செந்தமிழ் நடையிலின்றூற் செப்புவே ...னே.

கடவுள்துணை.

## வைசூரிகாவஜர தண்டம்.

### முதலாவது.

# வைசூரிவிளக்கப்பிரகரணம்.

### விருத்தம்.

ஆதி- நடு- ஈறாகி - அறுதியாகி, அருணிறைந்த பரமாகி அருளொளியாய்ச் சோதியாய் நின்றிலங்கும் பாதம்போற்றி. வேதனைசெய்யெழிரண்டு வைசூரிவருமாறு அதின்னேர்மையுங், கூிலாவவித்தமருமவருந் தெளிவாகச் செப்புவேனே.

## முகவுரை.

### வைசூரியுற்பத்திவிபரம்.

சகலபுவன கர்த்தாவாகிய நிர்விகாரனால் சிருஷ்டிக்கப்பட்ட வின்னெடியகடலசூழ்ந்த யிவ்வுலகின்கண்ணுற்பவித்த ஜீவர்கள் தங்கள் தங்களின் கர்மானுபவத்திற் கேற்பவநுபவித்தற் கேதுவாகியவியாதிகட்குள்ளே கொடிய வியாதியாகிய வைசூரியென்னும், அம்மைகளுற்பவிக்குங்காரணஞ்சரீரத்தில் உஷ்ணாதிகரித்து தேகாதியந்தம் பரவியவெக்கையானது சிரசிலதிவேகங்கொண்டு அதினால் கபாலத்திலிருக்கு மூளைகளைக்கொதிப்புமீறி மூளையை உருகச்செய்து முதுகின்தண்டெனும் புத் திவாரவழியாக திரேகத்திற்கிறங்கி எலும்புகளை ஊடுருவதனாலாத்தி கரத்தை யுண்டாக்கி தேகாதிபரியந்தம்பரவிய குடானது; அதுமுதலுக்குமேல் கொப்புளங்களாய்த் திரண்டு குருநோவென்றும், போகடமென்றும், அம்மையென்றும், வைசூரியென்றும் நான்குவிதபெயரை

குத்த பதினுன்குவிதரோகங்களாய்க் காண்பதுடன் ஷை அம்மைகளா
னது அதிககொரோமாய்க்காணப்பட்டு வருந்துவோர்களை மற்றவர்கள்
தங்கள்நேத்திரங்களால் பார்த்துமனதில் பயஞ்சனித்து இருதயத்திற்றி
ரமில்லாதவர்கட்கு உந்திக்கமலத்தில் கொதிப்புண்டாகி மேற்கண்ட
வண்ணமே வைசூரிகாண்கிறதுமுண்டு பின்னு மிக்கொடியவியாதியா
கிய வைசூரிகண்டு சீழ் நிறைந்த கொப்பளங்களின்பேரில் மொய்த்த
ஈக்களானது மற்றவர்பேரில் இரெக்கத்தாரையை ஓட்டி அழுந்தமொ
ய்க்குமாயின் அவர்களுக்கும் அதுவன்றி ஷை அம்மைகளின் தூர்வா
டையானது சமீபத்திலுள்ள சிறுகுழந்தை முதலியவர்களுக்குந் தாக்கி
னும் வைசூரிகாணும்.

ஏனென்று ஷ்கொடிய வைசூரியாகிய அம்மைகண்டவர்களுக்
குத் தகுந்த சிகிச்சைகளைச்செய்ய யேதுவிருந்து மில்லாமையினற்
சிலசமையங்களிற் கண்ணில் சிலருக்கு பூ விழுகிறதுங் குருட்டு விழி
யாகிறதுங் குஷ்டம் சேர்கிறதுங் கால், கை, முடக்கி விடுகிறதுங் கை
கால்களில் கறுசெட்டுவதும் நாசியிலொன்று பின்னப்படுதலுங் காது
செவிடாகிறது மூலம்ந்தவிகாரப்படுதலும் இரண்டு நேத்திரங்களுஞ்
சிலருக்கு அழுகிப்போகிற காரணத்தினு லதிக மனவியாகூலமும்
யிதுவன்றி அம்மை கண்டவர்கட்கு அதிசாரமென்னும் ஓர் விதபேதி
யினுலும் ஆராத குழிப்புண்கள் விழுகிற காரணத்தினுலும் மறு
முன்று காணுவதினுலும் மல ஜலக்கட்டாலும் சுரத்தாலும் தொண்
டைக்கம்மலாலுங் கொந்தலென்னும் வேறுவிதமான ரோகங்களுண்
டாகிறதினுலுஞ் சேர்க்கத்தக்க பதார்த்தங்களைத்தெரியாமையினுல்விட்
டுவிட்டு சேர்க்கத்தகாத பதார்த்தங்களை புசிப்பதினுல் ஜலக்கழிச்சலும்
அல்லது அடிக்கடி பேதியாகிறதினுலுஞ் சிதொத்தக்கழிச்சலாலும் மற்
லும் பலவித அசாத்தியமாகிய வியாதிகளுற்பத்தியாகிறது மல்லாமல்
கருப்பிணிக்கையென்னும் வைசூரிகண்டாலாருத குழிப்புண் தன் விழு
கிறதினுல் மரணமும் ஸ்திரீகள் [illegible] காலத்தில் ஷை
அம்மைகண்டால் அவசியம் மரணத்திற்கேதுவா[illegible].

இதுவன்றி மூக்குறித்தவியாதிகள் சிலருக்குகாணுகின்றமையால்
கண்டவர்கட்கு தகுந்தசிகிச்சை யில்லாவிடில் அம்மை கண்ட 3-நா
ளாவது 4-நாள் அல்லது 5-6-7-8-9-10-11-12-13-14-15-16-17-18
19 20-21-22-23-24-25-26-27-28-29 இந்த நாட்களில் சிலனாசே
தப்படுத்தி விடுகிறதுமுண்டு.



பின்னுமிந்தவைசூரிகண்ட 29-நாளைக்கிமேல் சௌக்கியப்பட்டு
ஆறுமாசத்திற்குள் வேறு வியாதிகளுணுகில் அவர்களுக்கு தகுந்த சிகி
ச்சை செய்யாமல் பிரயோசனமற்ற சிகிச்சைகளைச் செய்வதினு லவர்
களுக்கவசியமரணம் னேரிடுகிறதுமுண்டு யேனென்று லாதியில் அம்
மைகண்ட நாட்டுடங்கி ஆறுமாசம்வரையி லம்மைகண்டோர்களின்,
சரீரத்திலுண்டாகிய நல்ல இரெக்தமியாவும் வேறுபட்டிருப்பதினுலும்
பலஹீனத்தினுலுஞ் சிலருக்குத்தகுதியான அன்னபானதிகள் சௌக்கியத்
தாகுமியினுல மின்னும்பலவித அசௌக்கியங்களினு லிருப்பதைத்தெ
ரிந்தவைகளுக்கேற்ற சிகிச்சையைச்செய்யவேண்டுமென்பது கருத்தா
யிருந்தபோதினும் ஆறுமாசத்திற்குள் வேறுவிதமான வியாதிகளுணுகி
னலவர்களுக்கு அக்காலபேத குணமறிந்து இரசம், ஜாதிலிங்கம், கெ
ந்தகம், பாஷாணதிநுசுகள், வீரம், பூரம், ஊமத்தை, கருநாபி, சித்திர
மூலம்வேர் பின்னுங் கொடுமையான சரக்குகள் சேர்ந்த மருந்துகளை
யாவது அல்லது வேறு பிரயோகங்களாகிய அதிக காரசாரமான யிதர
பச்சிலைவகையறு சேர்ந்த கியாழங்களையாவது கொடுக்கப்படாதென்
பது அடியேனுடைய முக்கிய கருத்து.

## இதுவன்றி வைசூரிகண்டவிவேகிகள்.

ஓராண்டு பரியந்தம் போக விர்த்திக்கிச்சைவைக்கக் கூடாதென்ப
துதான் பிரதானகருத்தாயிருந்தபோதினு மிதையாவருங்கவனிக்குக.

## தேகலக்ஷணவிபாம்.

### வாதகேகவைசூரிலக்ஷணம்.

இவர்கட்குடம்பெங்குங் கறுத்தநிறமுடைய கொப்பளங்களா
கியவம்மைகள்தோன்றி அதினுலடிக்கடி பலவிதவுபத்திரவ முண்டாகி
சீழ்கோர்ப்பதுமல்லாமல் காக்குலர்தலுஞ் சரீரத்தில் வலியுண்டாகுத
லுங் கை, கால் முதலிய அவயவங்களின் சந்துகளில் திமிர்தலுண்டாகு
தலுஞ் சிரசிலும் நேத்திரங்களிலுங் குத்தல்காணுதலும் நாசியடைப்பு
ண்டாக்குமாதலா லிவ்விதசெய்கைகளுண்டாயிருப்பது வாதகேகி
யினுடைய வைசூரிலக்ஷணம்.

### பித்தகேகவைசூரிலக்ஷணம்.

தேகத்திலெரிச்சல் காணுவதுங் கடுகுபிரமாணங்களாக அம்மை
கள்தோன்றி அவைகளிலுடனே சீழ்கோர்க்கும்.

### சிலேட்மதேகவைசூரிலக்ஷணம்.

சரீரமுழுவதுங் கருணைக்கிழங்கு முளைகளைப் போலத்தடித்த அம்மைகளுண்டாகி அவைகளில் நாட்சென்று சீழ்கோர்க்கும்.

### வாதபித்ததேக வைசூரிலக்ஷணம்.

மேற்சொன்ன வாதபித்தமென்னு மிரண்டுவகை வைசூரிகள் கலந்திருக்கும்.

### வாத சிலேட்மதேக வைசூரிலக்ஷணம்.

மேற்சொன்ன வாத சிலேட்மமென்னுமிரண்டுவித வைசூரிகள் கலந்திருக்கும்.

### சிலேட்மபித்த தேகவைசூரிலக்ஷணம்.

மேற்சொன்ன சிலேட்மபித்த தேகத்துக்குரிய வைசூரிகள் தோன்றும்.

### பொதுக்குணம்.

வாதபித்த சிலேட்மதேக வைசூரிகளைப்போலத் தோன்றினும் அதுகளைப்போலுடனே தேகமுழுவதுமம்மைகாணாமல் ஆரம்பத்தில் யாதாமோரிடத்திற்றோன்றி தேகமியாவும் பரவுகிறது மல்லாமல் சிலது சிகப்புநிறம்பொருந்திய அம்மைகள்தோன்றி அதிக காந்தலும் கமைச்சலுமுண்டாயிருக்கும் இதுவே பொதுக்குணமென்றறிந்துக் கொள்க.

---

கடவுள் துணை.

## வைசூரியின் நாமங்கள்.

வெண்பா.

கடுகுவெள் நெய்க்கல்லுதரிசொன்மிள கு
கொடிபால்விச்சிரிப்புபயர்தவளை சடமலிக் ங்
கரும்பனிச்சைப்பு நீர்க்கொளுவன் பனைமுக ரி
வருதரிசிரோன் வைசூரியா ம்

### ஒவ்வொன்றின் குணாகுணங்கள்.

### (1.) கடுகம்மையின் குணானுபவம்.

இவ்வைசூரியெனு மம்மையானது காய்ச்சல் கண்ட மூன்றும் நாளில் ரோகில் கடுகுபோலம்மை தோன்றி சரீரமியாவு மரப்பிக்கக் கண்டு தோன்றைட்டுடன் குறல்கம்மறுமடிக்கடிவயற்றால் போகு தலுமாகிய விக்ணங்களை யுடைத்தாயிருப்பதால் கடுகம்மையெனப் பெயர்பெற்றது தகுந்தகிரிகைகூ செய்யின் 7-ளுன் அல்லது 9-ளுனா ரோக்கியஸ்நானஞ்செய்விக்கலாம்.

### (2.) வேந்தய அம்மையின் குணானுபவம்.

இவ்வைசூரியெனு மம்மையானது காச்சல்கண்ட மூன்றும் நாளில் ரோகிலம்மை தோன்றியேழாம் நாளில் நீர்கோர்த்து ஒன்பதாம் நாளிலிரங்கு மாகையால் மேற்படி அம்மை கண்டவர்களுக்கு பதினைந்தாநாளி லாரோக்கியஸ்நானஞ் செய்விக்கவேண்டும் குளிர்ச்சியான பதார்த்தங்களைக் கொடுக்கலாம்.

### (3.) பாசிப்பயற்றம்மையின் குணானுபவம்.

இவ்வைசூரியெனு மம்மையானதுகாய்ச்சல் கண்டவுடனே பித்தமுண்டாகி மூன்றுநாள் ரோகிலம்மைதோன்றியேழாம்நாள் நீர்கோர்த்து ஒன்பதாநாளிறங்குமாகையால், பதினைந்தாநாளிலாரோக்கியஸ்நானஞ்செய்வித்து நீர்மோர்சாதங்கொள்ளவும் அதினால் சரீரத்திற்குசௌக்கியமுண்டாகும்.

### (4.) கொள்ளம்மையின் குணானுபவம்.

இவ்வைசூரியெனு மம்மையானது காய்ச்சலுடன் பித்தமுஞ் சரீரமுழுது மரிப்புண்டாகுதலுமாகிய ஜன்னிதோன்றி அத்துடன் வலிப்புகண்டு ரோகிலம்மைதோன்றிய மூன்றும்நாளிறங்குமாகையால், அதுகளுக்கடுத்த கிரிகைகளை முந்தியேசெய்வித்து பதின்மூன்றும் நாள் ஆரோக்கியஸ்நானஞ்செய்வித்து வைத்தபோதிலும் அதிகுளிர்ச்சியான பதார்த்தங்களை சேர்க்கக்கூடாது. மெத்த ஜாக்கிரதையாய் 29-ளுன் பரியந்தம் பாதுகாக்க லமாயிருக்கு மென்பதே அடியேனுடைய முக்கியகருத்து.

### (5.) மிளகம்மையின் குணானுபவம்.

இவ்வைசூரியெனுமம்மையானது காய்ச்சலிரண்டொருதினமிதமாய்க்காய்ந்து ரோகில் குருவென்று சொல்லும்படிக்கான அம்மைதோன்றி மூன்றும்நாளில் மிளகுபிரமாண வடிவமாய்க்காணுதலால், கறுத்தநிறத்தை யுடையதாயும் மேற்படி அம்மையின் முத்துகள் உலர்ந்த மிளகின்மேலிலுள்ள புள்ளிகளைப்போல விருக்கின் மிளகம்மையின்

குணமென்ற்றிவதுமல்லாமல் மேற்படி அம்மை கண்டவர்களுக்கு கண்ட நாலாம் நாள் சரீரமெல்லாமதிகவேதனையாகிய கடுப்புதோன்றி யிடுப்புவணங்காமலுஞ் சரீரமுழுவதும் வீக்கங்காணுவதுடன் சுவாசமானது அதிகமாய்க் காணுகிறதினாலும் நாலாம்நாள்முதல் ஆறுநாள்வரையிலும் மாதிரியான உபத்திரவமுண்டாகி ஏழாம்நாள் மரணத்திற்கேதுவானதுமாகும் ஆனலிந்தவிளகம்மை யென்பது கண்டால் பிழைப்பதரிதே.

ஆயினு மிவ்வம்மை முற்கூறிய குணத்தையனுசரித்து மிளகுபிற மாண முருவுகாணு முன்னமே வேண்டியசிகிச்சைகளை முந்தியேசெய்வோமாகி லவனருளால் சிலசமைய மனுகூலத்திற்கேதுவானதுமாகலாம். கடவுளினனுக்கிரகம்வேண்டும்.

## (6.) பாலம்மையின் தனுனுபவம்.

இவ்வைசூரியெனு மம்மையானது அதிக ஜாஸ்தியாய் காய்ச்சலடித்து மூன்றும் நாளில் சிரசிலம்மைதோன்றி சரீரத்தில் கடுப்புண்டாகி ஏழாம்நாளில் மேற்படி அம்மைகளில் நீர்க்கோர்த்து ஒன்பதாநாளிலிரங்குமாகையால் பதினோராம் நாள் ஆரோக்கிய ஸ்நானஞ் செய்விக்கலாம்.

## (7.) தவளையம்மையின்தனுனுபவம்.

இவ்வைசூரியெனுமம்மையானது அகோரமாகிய காய்ச்சல்காணுவதுடன் நடக்கவொட்டாமல் செய்வதுஞ் சூலையைப்போல முழங்கால் முழங்கை இந்தவிடங்களி லிருக்கும் நரம்புகளைதியிரச்செய்வதினால் மேற்படி ஸ்தானங்களில் வலியுண்டாகுதலுஞ் சாப்பாடு முதலிய வுணவுகள் செல்லாமல் செய்வித்து மூன்றும்நாளில் சிரசில் அம்மை தோன்றி ஒன்பதாநாளிரங்கு மாகையால் 11—13—அல்லது பதினேந்தாநாளாரோக்கிய ஸ்நானஞ்செய்விக்க வேண்டுமென்பது கருத்து. சூலையென்பது கை, கால் முடக்குதல் வலியுண்டா யிருக்குதலுமாம்.

## (8.) நீர்க்கோளுவனெனு மம்மையின்தனுனுபவம்.

இவ்வைசூரியெனுமம்மையானது காய்ச்சல் கண்ட மூன்றும்நாளில் சங்கம்பழத்தைப்போ லம்மைதோன்றி யேழாநாளி லிரங்குமாகையால் ஒன்பதாம்நாளி லாரோக்கியஸ்நானஞ் செய்வித்து அம்மை கண்டவர்களுக்கு கொடுக்கவேண்டிய குளிர்ச்சியான பதார்த்தங்களை உபயோகப்படுத்த தேகவெப்பந்தணியும்.



## (9.)—விச்சிரிப்பம்மையின் தனுனுபவம்.

இவ்வைசூரியெனு மம்மைகண்டால் காய்ச்சல் கண்டவுடன் கண்கள் சிவந்து மூன்றும்நாளில் சிரசி லம்மைதோன்றி தேகமியாவும் உமியைப்போ லம்மைகள் கண்டிறங்குமாகையால் ஏழாம்நாள் ஆரோக்கிய ஸ்நானஞ்செய்விக்கவேண்டும். ஏனென்றால் மேற்படி அம்மையினால் வயற்றுழவு உண்டாகுமாதலால் அதற்குவேண்டிய சிகிச்சைகளை யுடனுக்குடனே பிரயோகிக்க வேண்டுங்காரசாரமாகிய சாப்பாடுகளைக் கொடுக்கக்கூடாது. மேற்படி வயற்றுழவுநின்றவுடன் அடிக்கடி ஸ்நானஞ் செய்துவைக்கவேண்டிய முயற்சி யாதோ அதைத் தேடவேண்டியது முக்கியகடமை:—

## (10.)—பனைமுகரியம்மையின் தனுனுபவம்.

இவ்வைசூரியெனுமம்மையானது உபாயகாய்ச்சல் கண்டு தேகத்தில் கடுப்புதோன்றி கண்கள்சிவந்தும் கழுத்தில் வீக்கங்காணுதலும் மூக்கில் சுரப்பு தோணுதலும் நீர்த்தாரையில் இரத்தங்காணுதலுஞ் சரீரத்தி லரிப்புண்டாகுதலு மிதுகளால் பித்தமென்னும் ஜன்னிதோன்றுதலுமாகிய விக்குணங்களையுண்டாக்குதலா லதிகஜாஸ்தியாய் குளிர்ச்சியான பதார்த்தங்களை வுபயோகப்படுத்தக் கூடாதென்பதா யிருந்தபோதினு மச்சமையத்தில் பிரதானமாய்க் கொடுக்கவேண்டிய தகுதியான பதார்த்தங்களை யுபயோகப்படுத்துவதுமன்றி அதுகளுக்கடுத்த சிகிச்சைகளையுஞ் செய்யவேண்டுமென்பதே முக்கியகருத்து.

## (11.)—வாதசூரி அம்மையின் தனுனுபவம்.

இவ்வைசூரி யெனுமம்மையானது காய்ச்சலதிகமாய்க்கண்ட மூன்றும்நாள் அம்மைதோன்றி வாயிலிருந்து சிலசமையம் இரத்தம் விழச்செய்கிறதுமன்றி ஏழாம்நாளில் நீர்கோர்த்து பதினோராம் நாளிலிறங்குஞ் சிலசமையம் மேற்படி அம்மைகண்டவர்களுக்கு நீர்த்தாரையிலிருந்து இரத்தங்காணுகிறது முண்டு. நீர்த்தாரையிலிருந்து இரத்தங்கண்டவர்களுக்கு வாயினுலிரத்தங் காணுவதரிது. வாயிலிருந்து இரத்தங்கண்டவர்களுக்கு நீர்த்தாரை வழியாயுமிரத்தஞ் சிலருக்கு காணுவதுமுண்டு. சிலருக்கிரண்டுங் காணமலிருக்கிறதுமுண்டாகையால் மேற்படி அம்மைகண்டோர்களுக்கு அதிககுளிர்ச்சியான பதார்த்தங்களை வுபயோகப்படுத்துவது மல்லாமல் பதினேந்தானாவதியமாரோக்கிய ஸ்நானஞ் செய்விக்க வேண்டுமென்பது கருத்தாயிருந்தபோதினும் பிந்தி வேண்டிய அநுகூலமாகிய சிகிச்சைகளியாவுஞ்செய்ய தடையில்லையென்பதே பிரதானக்கருத்து.

## (12.)—கல்லுதரி அம்மையின் குணுபவம்.

இவ்வைகுரியெனும்மம்மையானது அதிககாய்ச்சல் காய்ந்து வயற்றுப் போகுதலும் வாந்திகாணுவது முண்டாகி மூன்றும்நாளில் சிரசிலம்மைதோன்றி எழாம்நாளில் சங்கம் பழத்தைப்போல் நீர்க்கோர்வையுண்டாகி பத்தாம் நாளிலிறங்குமாகையா லவ்வம்மைகண்டவர்கட்கு பதினோராம்நாள் ஆரோக்கிய ஸ்நானஞ்செய்விக்க வேண்டியது.

## (13.)—உப்புதரி அம்மையின் குணுபவம்.

இவ்வைகுரியெனு மம்மைகண்டால் காய்ச்சல்கண்ட மூன்றும் நாளில் சிரசிலம்மை தோன்றி உடம்பெல்லாம் உப்பைப்போன்ற நிறத்தையுடைத்தாகிய மதனுலேந்தாளுவில் நீர்க்கோர்த்து எழாம்நாளிறங்கும் ஆதலால் பதினோராம்நாளிலாரோக்கிய ஸ்நானஞ்செய்வித்து குளிர்ச்சியான பதார்த்தங்களை உபயோகப்படுத்தவேண்டும்.

## (14.)—கரும்பனிச்சை யெனுமம்மையின் குணுபவம்.

இவ்வைகுரியெனுங் கொடிய அம்மையானது காய்ச்சல்கண்ட நாலாம்நாளில் சிரசில் குருவென்று சொல்லும்படிக்கான அம்மைத டோன்றி அதிக கடுப்பினல் சரீரத்திலரிப்புமீறி தேகமியாவுங் கறுத்த நிறத்தையுண்டாக்கி மேற்படி அம்மையானது சரீரத்திற்குள் வியாபித்து அத்தாலதிகதுன்பப்படுவதும் மூர்ச்சைகாணுவதுஞ் சிலசமையம் மலஜலங்கட்டில்லாதபோதினும் பதின்மூன்றும் நாளிலிரக்க முகங்காணுவது மப்படியிறங்குவதற்கு முன் சரீரமியாவும் விரிந்து இறணமாகி அதினின்று கிருமிகளுற்பத்தியாகி பிரக்கினையற்று சுவாசமேல்நோக்குமாகையால் மேற்படி அம்மைகண்ட இருபத்தொரு நாளைக்குள் தகுதியான சிகிச்சைகளைச்செய்ய ஏதுவில்லாமல் அஜாக்கிரதையாயிருக்கின் அவசியம் மறணந்திருகு ஏதுவாகிறதுமுண்டு.

அதற்கேற்ற சிகிச்சைகளை செய்விக்கும் விஷயத்தில் கடவுளனுக்கிரகத்தினல் இருபத்தோராம் நாள்முதல் இருபத்தொன்பது நாளைக்குள் சௌக்கியத்திற் கேதுவாகிலுமாகலாம் ஆயினு மிவ்வம்மையானதுகண்டால் கண்டவர்கள் பிழைப்பதரிதே.

ஆனல் மேற்படி கரும்பனிச்சையெனு மம்மையானது புருஷர்களுக்குக்கண்டால் சுக்கிலத்தின் சத்துவைக் கெடுத்ததினு லப்புருஷர்கள் போகிக்கிறு மவர்களுக்குக் கருத்தரிக்கமாட்டாது. ஸ்திரீகளுக்கு வை



குரிகண்டால் சுரோணிதத்தின் சத்துவை கெடுத்தப்போவதினல் குழந்தைகள் தரிப்பதரிது.

* ஐந்து திங்களுக்குட்பட்ட கெற்பஸ்திரீகளுக்கு மேற்படி வைகுரிகண்டா லவ்வியங்கெர்ப்பத்தை யழிக்கப்பண்ணும். ஐந்து திங்களுக்கு மேற்பட்டதாயிருக்குமாயின் அச்சிசுவுக்கு மரணமேசம்பவிக்கும் சிலசமையம் மேற்படி வைகுரியினின்று ஸ்திரீகள் சௌக்கியப்பட்டபோதினும் அஸ்திரீகளுக் கெப்பொழுதுங் கருத்தரிக்க மாட்டாதென்பது முக்கியகருத்து.

## (சாத்யா, அசாத்யவைகுரியின் குணுபவம்.)

மேற்சொல்லிய பதினன்குவித வைகுரிரோகங்களில் முத்துகளென்கிற கொப்பிளமாகிய அம்மைகள் சீக்கிரத்தில் தோன்றி சடுதியில் மறைந்தாலு மல்லது முதலில் தோன்றும்பருப்பு பிரமாணங்கண்டு கண்டவடிவமாகவே யிராமல் கண்டப் பழத்தைப்போலப் பருத்து அவ்வம்மைகளின் முகங்களில் குழிகளுண்டானலு மல்லது கறுப்பு விழியைப்போல் கறுத்தாலுந் தேகமுழுதும் விரிந்து இரணமாகி சிந்தி நிறைந்து, அதினின்றுங் கிருமிகளுற்பத்தியானலும் அசாத்தியமென்றறிக.

சாத்தியமானவை முற்கூறிய குணங்களில்லாதிருக்கின் சாத்தியமென்றே சொல்லப்படும்.

## (வைகுரியாகிய சுரமேன் றறியவேண்டியவிபரம்.)

அதாவது முக்கியம் வெய்யிற்காலத்தில் உஷ்ணதிகத்தால் பெரும்பாலுங் குழந்தைகளுக்கல்லது பெரியவர்கட்கு முகம் மூக்கு மினுமினுப்பாயுங் காமு மத்துடன் தொண்டைகம்மலுங் கை, கால்களி [illegible] புமதினல் சரீர [illegible] ங்களுங் கண்கள் சிவப்பாயிருக்கிறதுடன் சரீரத்தி லரிப்புகாணுவதும் பின்னும் பலவிதமாகிய குணங்களை விருசித்து சுரங்கண்டவுடனே அடியிற்சொல்லப்பட்ட குருபத்தை காலை மாலை மத்தியானம் ஆகிய மூன்றுபொழுதுஞ் சுரமடித்த மூன்றுனள் காலையில் குழந்தைகட்கு மணக்கெண்ணெய் ஒரேயொருகாலமட்டில் கொடுக்கவேண்டும் மிந்த மந்த வியாதிகளுக்கேற்ற சிகிச்சையை செய்யப்பிரியப்படவேண்டுமென்பதே அடியேனுடைய முக்கியகருத்தாயிருந்தபோதினுங் காலபேதத்தாலுங் குணுபவத்தாலும் அம்மைகாணுவதற் காதாரமாகிய காய்ச்சலடிப்பதை மேற்சொன்ன பதினன்குவித வைகுரியெனு மம்மைகளின் குணங்களாலறிந்து

* ஐந்துதிங்களென்பது ஐந்துமாதம்.

காய்ச்சல்கண்டவுடனே சகலவித அம்மைகளுக்கும் பின்சொல்லப்பட்டிருக்கும் குருபற்பத்தை பிரமாணப்படி காலை மாலை மறுகாலை ஆகிய மூன்றுதடவை பிரயோகிக்கின் உந்திக் கமலத்திற்றுக்கிய கெற்பசகுடு முதலிய யாவையுங் குணப்படுத்துவதுமன்றி மேற்படி அம்மையானது தேகத்தி லதிகமாய் வியாபிக்கமாட்டாதென்றறிக.

இதுவே மேற்படிவியாதிகட்கு கன்மசாந்தி.

அகஸ்த்தியர் திருவடிகளே சரணம்.

(1-வது) குருபற்பம்.

முதலாவது காய்ச்சல்கண்டவுடனே கொடுக்கவேண்டிய விபரம்.

| வயது. | அடியிற் கண்ட பிரமாணப்படி நிறையிடை. | தண்ணீரி னளவு. | தேனின் யிடை. |
|---|---|---|---|
| 5-வயதுக் குட்பட்டவர்களுக்கு... | கால் ரூபா. | கால் டிராம். | கால் ரூபா. |
| 5-வயதுமுதல் 10-வயதுக்குட்பட்டவர்களுக்கு | அரை ரூபா. | அரை டிராம் | அரை ரூபா. |
| 10-வயதுமுதல்20-வயதுக்குட்பட்டவர்களுக்கு. | முக்கால்ரூபா | முக்கால்டிராம். | முக்கால்ரூபா |
| 20-வயதுக்கு மேற்பட்டயாவர்கட்கும்... | ஒரு ரூபா. | ஒரு டிராம். | ஒரு ரூபா. |

பழசான பாதரக்ஷை அதாவது வெள்ளாடு செம்பிலி ஆடு மான் அல்லது புலித்தோலைச்சுட்டு சாம்பலாக்கி மேற்குறித்த வயதுக்குத் தக்கபிரமாணமழவினிட பாகப்படிக்கி சுரங்கண்டவுடனே வெந்நீரில் காலை, மாலை, மறுகாலை ஆகிய மூன்றுபொழுது கொடுக்கவேண்டியது. வயற்றால் போனால்மட்டும் தேனில் கொடுக்கவில்லாவிட்டால் வெந்நீரிலேயே கொடுக்கவேண்டும். இதற்கு பத்தியமில்லை. சகஜமாய் மேற்படி அம்மைகளுக்கு கொடுப்பதற்கு உபயோகப்படுத்தலாம்.

இதுவுமது.

பிராமணாள் சைவர்கள் முதலியவர்கட்கு பிதனடியிற் கண்டபடிக்கி உபயோகப்படுத்தவும்.

வெள்ளை குங்குலியத்தையும், அவுரியிலைச்சாறும் வெந்நீரும் அடியிற்கண்ட பிரமாணப்படிக்கி வெந்நீரிலேயோ காலை, மாலை இரண்டுவேளை கொடுக்கவும்.



| வயது. | வெள்ளைக்குங்கிலியமிடை. | அவுரியிலைச்சாரிடை. | வெந்நீரினளவு. |
|---|---|---|---|
| 5 வயதுக்குட்பட்டவர்கட்கு | கால்விராகனிடை. | ஒரு விராகனிடை. | கால் டிராம் |
| 5 வயதுமுதல் 10 வயதுக்குட்பட்டவர்கட்கு. | அரை ஷை | இரண்டுஷை | அரை ஷை |
| 10 முதல் 20 வயதுக்குட்பட்டவர்கட்கு | முக்கால்ஷை | மூன்று ஷை | முக்கால்ஷை |
| 20 வயதுக்குமேல்பட்ட யாவர்கட்கும். | ஒன்று ஷை | நான்கு ஷை | ஒன்று ஷை |

இம்மாதிரியாக பிராமணாள் முதலியவர்கள் உபயோகப்படுத்த வேண்டும். ஏனென்றால் வைசூரியினால் பிந்தி நேரிடுந்துன்பங்கள் யாவும் நிவர்த்தியாகும், அல்லாமலும் மேற்படி வைசூரியென்னும் அம்மையானது திரேகத்தில் அதிகமாய் வியாபிக்கமாட்டாது இதற்கு பத்தியமில்லை.

(2-வது.) சகலவித அம்மைகட்கும் காய்ச்சல் கண்ட மூன்றுநாள்.

* குருதண்டாமணக்கெண்ணெயை காய்ச்சல்கண்ட மூன்றும் நாள் அவசியம் கொடுக்கவேண்டிய விபரம்.

| வயது. | எண்ணெயினளவு ரூபாயிடை. | ஈரவெங்காயரசத்தினிடை. | பனங்கற்கண்டினிடை. | மாசக்காய்த்தூளினிடை. |
|---|---|---|---|---|
| 5 வயதுக்குட்பட்டவர்கட்கு. ... | ½ ரூபாயிடைமுதல் 1 ரூபாயிடை. | இரண்டரையிடை. | கால்விராகனிடை. | இரண்டு குன்றிமணியிடை. |
| 5 முதல் 10 வயதுக்குட்பட்டவர்கட்கு. | 1 முதல் 1½ ரூபாயிடை | ஷை. நாலரை. | ஷை. அரை. | ஷை. மூனறு. |
| 10 முதல் 20 வயதுக்குட்பட்டவர்களுக்கு. | 1½ முதல் இரண்டு.... வ | ஷை ஆறரை | ஷை முக்கால் | ஷை. நாலு. |
| 20 வதுவயதுக்குமேல்பட்ட யாவர்களுக்கும் | 2 முதல் 2½ ரூபாயிடை வரையில். | ஷை எட்டரை. | ஷை ஒன்று. | ஷை ஐந்து.. |

சித்தாமணக்கெண்ணெயும் பனங்கல்கண்டும் ஈரவெங்காயரசமும் ஆகிய இம்மூன்றும் காய்ச்சல்கண்ட மூன்றும்நாளில் மேற்குறித்த

* குருவென்பது அம்மை கண்டவென்பது சித்திரைத்தல் பனைக்கெண்ணெயென்பது சித்தாமணக்கெண்ணெய் அல்லது விளக்கெண்ணெ.

பிறமாணப்படிக்கி, உள்ளுக்குவொரோதடவை மட்டுங்கொடுக்க காய்ச்சலுடன் பேதியுங்கண்டிருக்குமாகில் அவர்களுக்குமட்டும் மாசக்காயின்தூள் சேர்த்துகொடுக்கவேண்டும். பேதியில்லா விட்டால் மாசக்காயின்தூள் சேர்க்காமல்கொடுக்கவும். இதற்குபத்தியம் காய்ச்சாதபசுவின்பாலுடன் கொஞ்சம் வெள்ளைசர்க்கரைசேர்த்து புழுங்கலரிசி அல்லது பச்சரிசியை மாவாய்ச்செய்து கஞ்சிகாய்ச்சி வேண்டியமட்டுங்கொடுக்கலாம். கொடிமுந்திரிப்பழம் வாழைப்பழம் கொத்தமல்லிதுவையல் கருவேப்பிலைதுவையல் இதுகளைகாரமில்லாமல் கொடுப்பதுமன்றி சீரகம் மிளகு பழம்புளி எலுமிச்சங்காய் ஊருகாய் வெந்நீருசாப்பாடு துவரம்பருப்பு துவையல் நெல்லிக்காய் பனங்கற்கண்டு உலர்ந்த திராக்ஷப்பழம் காடை உடும்பு வெள்ளெலி ஊர்க்குருவி வாழைக்கச்சல் ஷை பூ அத்திப்பிஞ்சி குரவைமீன் வெள்ளாட்டுக்கறி ஷை வற்றல் இதுமுதலியதுகள்சேர்க்கலாம். ஏனென்றால் வைசூரிகண்டவர்கட்கு இதுகள்சேர்ப்பதினால் மெத்தசுகத்தைக் கொடுக்கும் முற்கூறியவெண்ணை கொடுப்பதினால் அம்மைகளுக்காதாரமான கெர்ப்பசூடு வயற்றில்ரெணம் நிர்மலம் தூர்நீர் வயற்றிலுள்ள கோர்வித கிருந்தல் முதலியவைகளியாவும் மலசலங்கழிவாகுதலினால் விஷநீர்வடிவழிந்து அம்மைகண்டவர்கட்கு கடவுளினது கிருபையால் பெரும்பாலும் சௌக்கியமடைவார்கள் இதுவன்றி அவ்வையின் வாக்கின்படி நோய்க்கிடங்கொடேலென்று சொல்லும்படிக்கான வாக்கியத்தை யனுசரித்து.

எந்தவியாதிகளா யிருக்கின் அதற்குடனே சிகிச்சைசெய்வதற்கு தடைவேண்டுவதேயில்லை நமதிந்துக்கள் சொல்லுந்தடைகளியாவெனில் பிறந்தநாளென்றுங் கிர்த்திகை நட்சத்திரமென்றும் ஏகாதசி திதியென்றும் வருஷப்பிறப்பு, மாதப்பிறப்பு அமாவாசை பௌர்ணமி பாட்டியம்மை சனிக்கிழமை சோமவாரம் புதன்கிழமை வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை செவ்வாய்க்கிழமை யென்றும் பின்னும் இரிகரென்று சொல்லும்படிக்கான தூர்விதவாயுவினா லுண்டாகுந் தும்மல்முதலிய அர்ச்சகுணங்களென்றும் மருந்துகளைக் கொடுக்கக்கூடாதென்கிற உபயோகமற்ற வீண்போக்குக்கேதுவாகிய வாக்கியங்களைச்சொல்லி அசட்டையாயிராமல் ஷை எண்ணையை கடவுளை முன்னிட்டு பிரயோகிக்கின் ஷை வியாதியானது சூரியனைக்கண்டபனியைப்போல நீங்குமென்பது அடியேனலனேகருக்கு கொடுத்து சுவாமியின் கிருபையாலனேகர் சௌக்கியமடைந்த ஓர்காரணத்தாலிதை யானென்னனுபவத்தால் சொல்லுங்கருத்து.



## வைசூரியென்னு மம்மைகண்டிருந்தவதற்குமுன்.

### அதிசாரமல்லது பேதிகளினில்.

I. இச்சியிலை பலம்ஒன்று அதாவது மூணுரூபா யிடைபுதுச்சட்டியிலிட்டு அரைப்படி ரோகாரத்தண்ணீர்விட்டு நன்றாயலசி மூன்றுபொழுது கொடுக்க மேல்கண்ட பேதிகளிற்கும்.

5 வயதிற்குட்பட்டவர்கட்கு ஒருசங்கு அதாவது அரைடிராம் 5 வயதுமுதல் 10 வயதிற்குட்பட்டவர்கட்கு இரண்டுசங்கு அதாவது ஒருடிராம் 10 வயதுமுதல் 20 வயதிற்குட்பட்டவர்கட்கு நாலுசங்கு அதாவது இரண்டுடிராம் 20 வயதிற்குமேற்பட்டோர்களியாவர்கட்கும் 3 டிராம் முதல் 4 டிராம் வரையில்கொடுக்கலாம் பத்தியமில்லை மொழகாகாரமட்டுங் கூடாது மற்றதை சமையம்போல் கொடுக்கலாம்.

### இதுவுமது.

II. சுக்கு வேப்பீர்க்கு இரண்டையும் இளவறுப்பாய் வறுத்து அரைப்படிசுத்தஜலம்விட்டு கால்ப்படியாக வற்றவைத்து ஷை கியாழத்தை மூன்றுபொழுது கொடுக்கலாம். அதினிடையாவன :—

சுக்கு விராகனிடை நாலு வேப்பீர்க்கு விராகனிடை 4-ஐந்துவயதுக்குட்பட்டு ஒருசங்கு அதாவது அரைடிராம் 5 முதற் 10 வரையில் இரண்டுசங்கு அதாவது ஒருடிராம் 10 முதற் 15 வயது வரையில் ஒன்னரைச்சங்கு ஒன்றேகால்டிராம் 16 வயதிற்குமேற்பட்டயாவர்கட்கும் மூன்றல்லது நான்குசங்குபுகட்டலாஞ் சீரலக்ஷணத்திற்குரியதாய்.

### இதுவுமது.

அத்திப்பட்டை ரூபாயிடை இரண்டு.
ஆலப்பட்டை ரூபாயிடை இரண்டு.
அரசம்பட்டை ரூபாயிடை இரண்டு.
ஒதியம்பட்டை ரூபாயிடை இரண்டு.
இச்சிப்பட்டை ரூபாயிடை இரண்டு.

இதுகள்மேற் சிராய்நீக்கியதாயுஞ் சதைப்பற்றான பட்டைகளாயிருக்கவேண்டும்.

அத்திவேலை ரூபாயிடை ஒன்று
சுக்கு ரூபாயிடை ஒன்று.

ஆகிய யிவ்வேழுகிறுசுகளையு மிடித்துப்போட்டு இரண்டுபடி ஜலம்விட்டு ஒருபடியாக வற்றவைத்து மூன்றுபொழுது அதாவது

காலை மாலை மறுகாலை ஆகிய மூன்றுவேளை அல்லது ஆறுவேளை கொடுக்கலாம். அப்படிக்கி கொடுத்தால் அதிசாரமென்னும்பேதி உடனே நிற்கு மிதுகளுக்கு பத்தியம் மொளகாகாரம் கடுகு நல்லெண்ணை முதலிய காரசாரமாகிய சாப்பாடுக ளுபயோகப்படுத்தக் கூடாது. மோர் ஈரவெங்காயம் கருகப்பிலை ஷை கொழம்பு மாங்கொட்டைப்பருப்பு வாளைக்கச்சல் ஆட்டுமாம்ச முதலியதுஞ் சேர்த்துக்கொள்ளலாம்.

## ஷை கியாழமருந்த வேண்டியவயதின் விபரம்.

5 வயதுக்குட்பட்டு ஒருசங்கு அதாவது அரைடிராம் புகட்டலாம் 5 முதல் 10 வயதுவரையி லிரண்டுசங்கு அதாவது ஒருடிராம் 10 முதல் 20 வயதுவரையில் மூணுசங்கு முதல் நாலுசங்குவரையில் கொடுக்கலாம்.

20 வது வயதுக்கு மேற்பட்டோர்கட்கு நாலுசங்கு முதலாறுசங்குவரையில் கொடுக்கலாம்.

இதுதவிர ஷை பேதிக்கி வெள்ளாட்டுப்பால் அல்லது பசுவின்பால் எருமைப்பால் ஷை தயிர் இதுகளில் தவிட்டு கொய்யாப்பிஞ்சு அல்லது ஷை கொழுந்து யிதைமேற்கண்ட யெந்தப்பால்கிடைத்தபோதிலும் அல்லது ஷை தயிர் கிடைத்தாலும் அதிலரைத்து மூன்று பொழுது கொடுக்கலாம். உடனே ஷை பேதி நிற்கும்.

ஒருபலந்தவிட்டு கொய்யாக்கொழுந்து அதாவது மூணு ரூபா யிடை.

அல்லது ஷை பிஞ்சு ஒருபலம் அதாவது மூணு ரூபா யிடை.

பசுவின்பாலல்லது யெருமைப்பால் வெள்ளாட்டுப்பா லிதுகளிலெதுகிடைத்தபோதிலும் கால்படிபாலிலரைத்துக் கலக்கி பெரியோர்களுக்கு மூன்றுபொழுது சிறியோர்களுக்கு ஆறுபொழுது சிறு குழந்தைகளாகவிருக்கின் ஒரு சிறியசங்குவீதம் ஆறுபொழுதும் பெரியகுழந்தைகளுக்கு பெரியசங்கு ஆறுபொழுதுமாக புகட்டலாம்.

முன்சொன்ன மருந்து கியாழம் இச்சியிலை சேகஞ்சேர்ந்த திறுசு ஒருதடவை தயார்செய்வித்ததை 3 அல்லது 6 பொழுதுபுகட்ட கியாழமாயிருக்கின்றதைமட்டும் காலை மாலை சுடவைத்துகொடுக்கவேண்டும். பின்னு மிதுகளில் முற்குறித்த யிடைபாகத்தின்படியே கொடுக்கவேண்டியது மல்லாமல் பெரியோர்களல்லது சிறியவர்களுடைய



வயது சரீரக்கூறுணர்ந் தேகபெலன் முதலியதைத் தெரிந்து குறைவாகவுமல்லது சாஸ்தியாகவும் கொடுப்பிக்கத் தக்கபடி கொடுக்கவேண்டுமென்பதே அடியேனுடைய முக்கியகருத்து.

## வைசூரியின்பேரில் சீதரெத்தக் கடுப்புகண்டால்.

முதிர்ந்த நாவற்பட்டையைக் கொண்டுவந்து ஷை பட்டையின் பேரிலிருக்கு முலர்ந்த செதுக்கலை நீக்கி சதப்பத்தாயிருக்கும் பட்டை பலம் ரெண்டு அதாவது ஆறுரூபா யிடையாகிய பட்டையை அரைப்படி பசுவின்பால் அல்லது யெருமைப்பால் அல்லது வெள்ளாட்டுப்பாலிலாவதரைத்து நாலுமணிநேர ஊறியபின்பு அதைப்பிசைந்து வடிக்கட்டி காலை மாலை மறுகாலை ஆகிய மூன்றுபொழுது கொடுக்கவும் ஷை இரத்தக்கடுப்பு நிற்காவிட்டால் அதையே ஆறுபொழுது கொடுக்கலாம் கடுப்பு சீதரெத்த மிதுகள் சொஸ்தப்படும்.

5—வயதுக்குட்பட்டவர்கட்கு 1—சங்கு புகட்டலாம்.

ஒரு சங்கென்பது அரைடிராம்.

5—முதல் 10—வயதுவரையில் 2—சங்கு.

அதாவது ஒருடிராம்.

10—வயதுமுதல் 20—வயதுவரையில் 3—சங்குமுதல் 4—சங்குவரையில்.

20—வயதிற்கு மேற்பட்ட யாவர்கட்கும் 4—சங்குமுதல் 5—6 சங்குவரையில் கொடுக்கலாம்.

## இதுவும் மேற்படி சீதரெத்த முதலியவைகளுக்கு.

உள்ளரம்பு நீக்கிய அத்திவேர்ப்பட்டை இரண்டுபலம் அதாவது ஆறுரூபாயெடை.

சுருளி மூணுரூபா யெடை.

சீரகம் ரெண்டுரூபா யெடை.

வெள்ளாட்டுப்பால் அல்லது யெருமைப்பால் படி அரையால் காரமில்லாத அம்மியை சுத்தப்படுத்தி யதிலரைத்து மைபோலரைத்து வடிகட்டாமல் காலை மாலை மறுகாலை மறுமாலை ஆகிய நாலுபொழுது கொடுக்க சீதரெத்தக்கடுப்பு முதலிய பிணிகள் சொஸ்தப்படும்.

5-வயதுக்குட்பட்டவர்கட்கு ஒருசங்கு அதாவது அரைடிறும் சில சமையம் கால்டிறும்கூடகொடுக்கலாம் அதிக சிறுகுழந்தைகளுக்கு.

5-வயது முதல் 15-வயதுவரையில் இரண்டுசங்கு அதாவது ஒருடிராம்.

16-வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மூனுசங்குமுதல் நாலு சங்குவரையில் கொடுக்கலாம்.

காரமாகிய சாப்பாடுமுதலிய வுணவுகள் கொடுக்கக்கூடாது.

## இதுவுமது சீதரெத்தக்கழிச்சலுக்கே.

ஈருள்ளி பலம் ரெண்டு அதாவது 6-ரூபாயெடை ஆவின் நெய் அல்லது யெருமைநெய் ரூபாயெடை ஆறில் ஈருள்ளியைப் பொடியா யரிந்து இருப்புகரண்டியில் விடி நெய்யைவிட்டு அரிந்த ஈரவெங்கா யத்தைப்போட்டு நன்றாய் பொன்னிறமாக வேகவைத்து 5-வயதுக் கு மேற்பட்டவர்களுக்கு மூன்றுநேரமும் 15-வயதுக்கு மேற்பட் டவர்கட்கு மூன்றுதடவை தயார்செய்து மூன்றுகாலைகொடுக்க சீத ரெத்தம் கடுப்புமுதலிய விம்சைகள் உடனே சௌக்கியப்படும். ஐந்து வயதிற் குட்பட்டவர்கட்கு மூன்றுகாலையில் விடி சீத ரெத்தக்கடுப்பு நில்லாவிடில் மறுபடியுங் காலை மாலை யடுத்து மறு மூன்றுபொழுது கொடுக்க வுடனே நிற்கும்.

5-வயதிற்குட்பட்டவர்கட்கு வைசூரிகண்டிறங்குவதற்கு முன் னமே யடிக்கடி பேதியானலும், மல்லது உபாயமாகிய பேதியாகிக்கொ ண்டிருந்தபோதினுஞ் சீத ரெத்தகடுப்பு முதலிய சகல கழிச்சலுக்கு மிதினடியிற்கண்ட மருந்துகள் அசசமையத்தில் யாது கிடைக்கிறது மதுகளிலொன்றை.

| | |
|---|---|
| நீராகாரத் தண்ணீரிலாவது<br>வெள்ளாட்டுப் பாலிலாவது<br>பசுவின்பாலிலாவது<br>யெருமைப்பாலிலாவது<br>தயிரிலாவது | இதுகளிலொன்றைவிட்டரைத்து. |

காலை மாலை மறுகாலை மறுமாலை ஆகிய நான்குபொழுது அல் லது 3-குள் ஆறுவேளை கொடுக்க நோக்கண்ட வியாதிகள் சௌக்கிய ப்படும்.



மாங்கொட்டைப்பருப்பு.

ஆலங்கொழுந்து.

விடத்தலாமெலை.

ஆவாரங்கொழுந்து.

நவ்வாக்கொழுந்து.

மாதளம்பிஞ்சு.

தவிட்டு கொய்யாப்பிஞ்சு.

வாழைப்பூவி லெந்தப்பூவானாலும் சரி நரம்பு தொப்புள் நீக்கியபூவு.

புளியம்விரையின்பேரிலிருக்கும் தோல்.

மாசக்காய் அல்லது கடுக்காய்ப்பூவு.

இதுகளிலொன்றை முற்கூறிய நீராகாரம் பால்கள் அல்லது தயிரில் கொடுக்கலாம்.

## கொடுக்கவேண்டிய பிரமாணமும் வயதுவட்டமும்.

| வயது. | முற்கூறித்த மருந்துகளினிடை. | பால்களல்லது தயிர். | நீராகாரம். |
|---|---|---|---|
| 5 - வயதிற் குட்பட்டவர்கட்கு. ... ... ... | ரூபாயிடை. கால் முதல் அரைரூபா வரையில் | 1 சங்கு ½ டிராம் ... | 1 சங்கு ½ டிராம் ... |
| 5-முதல் 10 - வயதுவரையில் ... ... ... | ½-ரூமுதல் 1ரூ வரை | 2 சங்கு ... | 2 சங்கு ... |
| 10 - முதல் 20 - வயதுவரையில் ... ... | 1½-முதலிரண்டுரூ. வ. | 3 சங்கு ... | 3 சங்கு ... |
| 20-வயதுக்கு மேற்பட்டவர்கட்கு ... ... | 2 ரூலிருந் 2½-ரூ. வ. | 4 சங்கு ... | 4 சங்கு |

பத்தியம் மொராகாகாரம் கூடாது. கடுகு நல்லெண்ணையை வர்த்திக்கவேண்டும்.

## பத்தியத்திற்கான பதார்த்தங்கள் விபரம்.

அத்திப்பிஞ்சு வாழைக்காய் கருகப்பிலை நெல்லிக்காய் பச்சைப் பயர் பழம்புளி மிளகு சீரகம் வெந்தியம் சீனியவரைக்காய் செம்மறி ஆட்டின் மாம்சம் சாளைவெள்ளரி கெளிற்றுவற்றல் குறவை

[illegible]ஞூற்குருவி பனங்கற்கண்டு வல்லாரை புளியாரை வெந்தியக்கீரை யிதுமுதலியவைகளை வுபயோகப்படுத்தலாம்.

சீத ரெத்தக்களிச்சலாலதிசாரமுதலிய பேதிக ளில்லார்திருக்கின் ஆட்டுக்கால் குப்பு எலும்பு குப்புமுதலியதை யிம்மைகண்டவர்கட் குபயோகப்படுத்தலாம்.

## அதிசாரபேதிக்கிமருந்து.

சிந்திற்கொடி கோரைக்கிழங்கு சுக்கு ஆகிய இம்மூன்றையும் மேல்தோலை போக்கி துண்டுகளாகச்செய்து வறுத்து அரைப்படி ஜலம்விட்டு கார்படியாக சுண்டவைத்து காலை மாலை மறுகாலை ஆகிய மூன்று நேரங்கொடுக்க அதிசாரமென்னும் ஓர்விதபேதி உடனே நிற்கும் நில்லாவிடில் மூன்றுநாளைறுபொழுது குடித்தால்வகி யம் சௌக்கியத்திற் கேதுவாம்.

சிந்திற்கொடி 1 ரூபாயிடை.
கோரைக்கிழங்கு 1 ரூபாயிடை.
சுக்கு 1 ரூபாயிடை.

## இதுமூன்றும் இளவறுப்பு.

சுத்த ஜலம்படி அரை விட்டு கால்படியாக சுண்டவைக்கவும். 5-வயதிற்குட் பட்டவர்கட்கு அரைசங்கு முதல் ஒருசங்கு புகட்ட 5-வயதுமுதல் 10-வயதிற்குட் பட்டவர்கட்கு ஒரு சங்குமுத லிரண்டுசங்குவரையிலும் 10-முதல் 20-வயதிற்குட்பட்டவர்கட்கு இரண்டல்லது ரெண்டரைச்சங்கு 20-வயதிற்குமேற்பட்டயாவர் கட்கும் ரெண்டரைசங்குமுதல் மூன்றுசங்கு.

## இதுவுமது,

## அதிசாரக்கழிச்சலுக்கு.

மான்கொம்பு பஸ்பமிருக் கிடை ஒன்று மான்கொம் பல்லது கடம்பைகொம்பை அரத்தால் ராவியதூள் பலம் ஒன்று அதாவது 3 ரூபாயிடைத்தூளை அதிகருடான வென்னீர்படி காலில் போட்டு ஒருஜாமமூறிய பின்பு அத்தை வடிகட்டி மேற்கண்ட மான்கொம்பு பஸ்பத்தைப்போட்டு கலக்கி 3-பொழுது அல்லது மூன்றுனாளறுவேளை கொடுக்க கழிச்சல் அதிசாரபேதி கடுப்புமுதலி யவைகள் சொஸ்தப்படும்.



5-வயதிற்குட்பட்டவர்கட்கு ஒரு சிறியசங்கு.
5-வயதுமுதல் 10-வயது வரையில் ஒரு பெரியசங்கு.
10-வயதுமுதல் 20-வயது வரையில் ரெண்டுசங்கு.
20-வயதிற்குமேற்பட்டவர்கட்கு மூன்று அல்லது நாலு சங்குகொ டுக்கலாம்.

## கலைமான்கோம்பு பஸ்பஞ்செய்யும் விதம்.

கலைமான் கொம்பல்லது கடம்பைக்கொம்பை ரெண்டங்குல பிறமாண நீளத்தில் ரம்பத்தினலறுத்துக்கொண்டு 4-அல்லது வெட் டுதுண்டுகளாய் வுளியினால் நீளத்தில்பிளந்து குப்பைமேனிச்சாற்றில் ஒருநாள் வூரவைத்து மறுநாளெடுத்து வெயிலில் காயவைத்து பின் பு 20-விருட்டியில் நடு மய்யத்தில் வெடி கொம்புகளை வைத்து முழுப் புடம்போட பஸ்பமாய் அதையெடுத்து கலுவத்திலிட்டு நன்று யிரண்டுஜாமமரைத்து ஒரு சிமிளில் வைத்துக்கொள்ளவேண்டும். இதுவே சிங்கிபஸ்ப்பவிபரம்.

## இதுவுமதற்கே வேறுவிதம்.

நீருள்ளிச்சார் ஆவின்நெய் இரண்டும் சமனிடையாய்க்கலந்து இளஞ்சூடாய் சுடவைத்து கொடுக்க சீதரெத்தமுடனே நிற்கும்.

5-வயதிற்குட்பட்டவர்கட்கு அரைரூபாயெடை.
5-முதல் 15-வயதுவரையில் ஒரு ரூபாயெடை.
16 வயதிற்குமேற்பட்டவர்கட்கு இரண்டுரூபாயெடையாகவும் கொடுக்கலாம். இதசனுக்கு பத்தியம் முற்கூறியதே.

## தொண்டைகம்மலுக்கு.

கற்பூரவள்ளி யிலைச்சார் அல்லது கற்பூர வெற்றிலைச்சார் அல்லது வெற்றிலைச்சார். இந்த யிலைகளில் யெது சமையத்திற்கு கிடைக்கின்றதோ அதில் ஒன்றையிடித்து சார்பிழிந்து மேற்படி இரசத்தில் கோரோஜனைகலந்து உள்ளுக்கு மூன்றுபொழுது கொடு க்க வைசூரியால்நேரிட்ட தொண்டைகம்மல் நிவர்த்தியாம். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை வழக்கம்போல் கொடுக்கலாம் அப்படிக்கி கொடுப்பதிலும் மோர் தயிர் இளநீர் ஈரவெங்காயம் பழையசாதம் வெள்ளரிக்காய் யிதுமுதலிய குளிர்ச்சியான பதார்த்தங்கள் கொடுக்கக் கூடாது. மேற்சொல்லியமருந்துக்கு அடியிற்கண்ட யிடைப்பிரகாரம் கொடுக்கவேண்டியது.

| வயது. | கோரோசினையின் இடை. | கர்ப்பூரவள்ளி வெற்றிலைச்சார் அளவு. |
|---|---|---|
| 1. வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ... ... ... ... | ஒரு குண்டு மணி. | கால்சங்கு, அரை சங்கு. |
| 1. முதல் 5-வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ... ... | 2-குண்டு மணி. | முக்கால் சங்கு, ஒரு சங்கு. |
| 5. ... 10 ... குட்பட்டவர்களுக்கு ... ... ... | 3 - ஷை | ஒண்ணு முதல் ஒண்ணரைச் சங்கு வரையில் கொடுக்கலாம். |
| 10. ... 20 ... ஷை | 4 - ஷை | |
| 20. வயதுக்கு மேற்பட்ட யாவர்கட்கும் ... ... ... | 5 - ஷை | |

### ஒருசங்கென்பது ஒருடிராம்.

இதுவன்றி மாதளம்பூவை கியாழஞ்செய்து அத்துடன் தேனும் யெலுமிச்சம்பழரசம் மூன்று மொன்றாய்கலந்து மத்தித்து காலைமாலை இரண்டுபொழுது கொப்பளிக்கலாம். பெரியவர்கட்குமட்டுமே, சிறியவர்கள் ஷை கியாழத்தை கொப்பளிக்க ஹேதுவில்லாத குழந்தைகளுக்கு கொப்பளித்து உமியும்படிக்கு கொடுக்கக்கூடாது. ஏனென்றால், பெரியவர்கள்மட்டும் வாயில்விட்டு கொப்பிளித்து கீழேவிட்டு விடவேண்டுமேயன்றி வுள்ளுக்குவுபயோகப்படுத்தக் கூடாது.

மாதளம்பூவுபலம் ஒண்ணு அதாவது 3-ரூபாயிடை.
தேன்ரெண்டுரூபாயிடை.
எலுமிச்சம் பழஞ்சார்ரெண்டு ரூபாயிடை.
ஆகிய இம்மூன்றையுங் கலந்திரண்டுவேளை கொப்பளிக்க.

மாதளம்பூவை பொடியாயரிந்து ஒன்றிரண்டாய்தட்டி அதில் அரைப்படி சுத்தஜலம்விட்டு அத்துடன் எலுமிச்சம்பழஞ் சாற்றையுந் தேனும்விட்டு கால்ப்படியாகச் சுண்டவைத்து ஷை கியாழத்தை யிரண்டுவேளை கொப்பளிக்க உடன் தொண்டைகட்டுமாறும்.

### சுரத்திற்கு கியாழம்.

உள்ளரம்புபோக்கிய எலுமிச்சம் வேரின்பட்டை விராகனிடை 1 எலம் வி. 1 சிந்திற்கொடி வி. 1 விலாமிச்சன்வேர் வி. 1 பற்பாடகம் வி. 1 சந்தணம் வி. 1 கோரைக்கிழங்கு வி. 1. விஷ்ணுகிராந்தி வி. 1 கடுக்காய் வி. 1 இவையாவும் நன்றாயிடித்தப்போட்டு அரைப்படி ஜலம்விட்டு கால்படியாகச் சுண்டவைத்து காலைமாலை மறுகாலை மூன்றுபொழுது கொடுக்க சுரந்தணியும் இல்லாவிடில் மூன்றுநாளாறுவேளைகொடுக்க சுரந்தணியும் மேற்கண்ட சரக்குகள்வகை ஒன்றிற்கு விராகனிடை ஒன்று.

5-வயதுக்குட்பட்டவர்களுக்கு ஒருசங்கு.
5-முதல் 10-வயதுவரையில் ஒண்ணரையல்லது 2-சங்கு.

10-முதல் 20-வயதுவரையில் ரெண்டல்லது ரெண்டரைசங்கு 20-வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மூணு மூணரைசங்கும் வயதிற்குத் தக்கபடி புகட்ட.

சிலசமயம் வயற்றுலதிகமாய்ப் போகுமானால் வசம்பைசுட்டு தேனில்கொடுக்க வயற்றுலதிகமாய்ப் போவதுநிற்கும்.

பத்தியம் மொளகு சீரகம் வுலர்ந்தகொத்தமல்லி பழம்புளி கருகப்பிலை சாவெங்காய மிதுகள் சேர்ந்தரசங் கொடுக்கலாம். வயற்றுல் போகாவிட்டால் வயற்று லிரண்டொருதடவை போகுமாயின் வெந்நீர் சுடுங்கஞ்சி வுப்பிட்டு தொவரையின் பருப்பு துவையலுடன் கொடுக்கலாம். ஷை பருப்புக்கொழம்பு கருகப்பிலை கொழம்பு மற்றுஞ் சூடுந்திற கடுத்ததாய் சேர்க்கவேண்டும். மோர் இளநீர் முதலிய அதிக குளிர்ச்சியான பதார்த்தங்களை மூன்றுநாளைக்கு சேர்க்கக்கூடாது. பிந்தி வெசமையுஞ் சேர்த்துக்கொள்ளலாம் ரோக சௌக்கியமறிந்து யிதுவே யிதற்குப்பத்தியம்.

(சகலவித வைசூரிகளினாலும் நேரிடப்பட்ட தாகத்திற்கு குடிநீர்.)

கலைமான்கொம்பல்லது கடம்பைக்கொம்பை சற்றுநேரம் வெந்நீரிலூரவைத்து நன்றாய் கழுவிப்போட்டு அரத்தினால் ஷை கொம்பை ராவிய தூள்பலம் ஒண்ணு அதாவது மூணு ரூபாயிடை அரைப்படி அதிகசூடாகிய வெந்நீரிலிட்டு ஊரவைத்துக்கொண்டு அந்த ஜலத்தை தாகத்திற்கு வைசூரிகண்டவர்கட்கு கொடுத்துக்கொண்டுவர தேகத்திற்கு ஆரோக்கியத்தையுஞ் சுகத்தையுந்தருங் குழந்தைகளுக்கு ஒருசங்குவீதமும் பெரியோர்களுக்கு இரண்டு அல்லது மூன்று நான்கு சங்குவரையிலும் கொடுக்கலாம்.

### மலக்கட்டிற்கு யெண்ணை.

விளக்கெண்ணை அல்லது சிற்றுமணக்கெண்ணையாவது கியாஸ்டராயிலென்று சொல்லும்படிக்கான சீமை விளக்கெண்ணையை

வது ஒரிரவேளை கொடுக்க மலஜலம் வயிறுப்பிசமுதலிய விம்சைகள் நிவர்த்தியாகிறதால் சரீரசௌக்கியமும் திரேகபெலனும் கொடுக்கும் தின்னுகின்ற சாப்பாடுகொள்ளும். இதற்குப் பத்தியம் வெறும்புருப்பல்லது காடை கௌதாரி ருப்பாவது கொடுத்தால் மெத்த அனுகூலத்திற் கேதுவாம். மொளகாய்க்கூட்டாத்து மிளகு வுப்பு வுலர்ந்தகொத்தமல்லி சீரகம் வெங்காயம் கருவப்பிலை புழம்புளி முதலியது சேர்த்துக்கொள்ளலாம்.

பச்சைக்கொத்தமல்லி மிளகு வுப்பு வைத்தரைத்த துவயலாகும் தொவரம்பருப்பு தொவயல் பச்சைப்பயர் தொவையலுஞ் சேர்த்துக்கொள்ள நன்று.

5-வயதிற்குட்பட்டவர்கட்கு ஒருசங்குவெண்ணெய் தலைசமையம் அவர்கட்கு அரைச்சங்கு புகட்டர்க்குந்த குழந்தையின் வயதிற்குத்தக்கபடி புகட்டவேண்டும்.

5-வயதுமுதல் 10-வயது வரையில் ஒருசங்கு அல்லது ஒன்னரைச்சங்கு கொடுக்கவேண்டும். ஏனென்றால் சிலருக்கு கல்குட்டலாயிருப்பவர்கட்கு மாத்திரம் ஒடு வெண்ணெ சாஸ்தியாகவுமப்படிக் கில்லாதவர்கட்கு ரெண்டொருதிரம் நன்றாய்போகும்படிக்கானதைதெரிந்து கொடுக்கவேண்டியமட்டும் கொடுக்கவும்.

10-வயதுமுதல் 20-வயதுமேற்பட்டவர்கட்கு மிரண்டுசங்கு அதாவது ஒருடிராம் கொடுத்தால் போருமானதாயிருக்கும்.

வெண்ணெயினு லதிகபேதியாக மாட்டாது.

சிலசமயங் குழந்தைகளுக்கு மட்டும் ரெண்டு அல்லது மூன்று திரமாகி மறுபடியும் வயற்றால் போகுமானு லதினால் குழந்தைகளுக்கு களைப்புண்டாகுமென்று தெரிந்தாலுடனே வசம்பைச்சுட்டு தேனில் கொடுக்க பேதிநிற்கும். இல்லாவிடில் வெந்நீருஞ்சாதமுங்கொடுத்து தெளிவைக்கொடுத்தால் வயற்றால் போவது நிற்பதுமல்லாமல் களைப்புதிகைப்புமாறும் மைக்காணுள் முதல் அதிக சௌக்கியத்திற்கேதுவா மதிசீக்கிரத்தில்வைசூரிநோய்கள் இம்சிக்காமலநுகூலத்திற்கேதுவாம்.

## வைசூரி கண்டவர்கட்கு கண்ணுக்கு ஒத்திடம்செய்துவரவேண்டிய விபரம்.

சுத்தப்படுத்திய சிகப்பதாவது கல் மண் தூசி துரும்புமுதலியதுகளில்லாமல் சுத்தப்படுத்திய சீரகத்தை வெள்ளைத் துணியில்வைத்து பொட்டணங்கட்டி முலைப்பாலில் ஊரவைத்து கண்ணில் ஒத்தடஞ்செய்துவந்தாலும் ... து கூடுசேர்ந்தில் * வெண்ணெ சேர்த்துபிசைந்து சிகெண்டு ... பொட்டணங்கட்டி சிராகாரத்தண்ணீரிற்றனைத்து கண்ணில் ஒத்தடஞ்செய்ய நன்றிதனைக்கிரும்.



## விழியில் வைசூரிவராதிருக்க.

வைசூரிக்காதாரமாகிய காய்ச்சலடிக்கும்போது அல்லது காய்ச்சலடித்து வைசூரியெனுமம்மைகண்டயிற்பாடாவது.

† சுருள்ளிப்பூவையாவது அல்லது ஈரவெங்காயத்தையாவது இருமனிதன் வாயால்மென்று அதையிருவிழிகளிலும் பிழிய அல்லது வாயாலுமிய கண்ணில்குருவென்று சொல்லும்படிக்கான அம்மைகள் காணாது நேத்திரங்களுக்கு சேதமும் நேரிடமாட்டாது.

## வைசூரிகண்டவர்கட்கு வாயினாலும் நீர்த்தாரையினாலும் ரெத்தங்காணுகிறவர்கட்கு மருந்து.

சமாதியவிட்டங்களில் உற்பத்தியாகியிருக்கும் நாக்குப்பூச்சி பத்தெடுத்து பாலில் அல்லது மோரில் அதைவிட்டு ஒடு பூச்சியின் வயிற்றிலிருக்கு மண் கக்கியபின்பு கழுவியெடுத்துக்கொண்டு அத்துடன் நன்னாரிவேரின் உள்நரம்பு மேற்சருகு போக்கிய ஒடு நன்னாரிவேர் மேற்பட்டை விருகனிடை நாலு அத்துடன் மான்கொம்பு, அல்லது கடம்பைக்கொம்பை சுத்தஜலத்தால் சந்தனம்போலரைத்தது விருகனிடை நாலுமாகிய மூன்றையும், மான்கொம்பு அல்லது கடம்பைக்கொம்பை அரத்தால் ராவிய தூள்பலம் ரெண்டு ஒடு தூளை அரைப்படி பொங்கிய சுடுவெந்நீரில்போட்டு ஒருஜாமமூறிய அந்நீரால் மேற்கண்ட நாக்குப்பூச்சி நன்னாரிவேர்கொம்பை சந்தனம்போலரைத்த ஒடு வெண்ணெயையுமொன்றாய்ச் சேர்த்து கொம்பூறிய தண்ணீரால் மறுபடியும் சந்தனம்போலரைத்து மூனுநாளாறுவேளை கொடுக்கவும். சிறியவர்களுக்கு ஒருசங்களவுமுதல் பெரியவர்களுக்கு ஒருசங்குமுதல் ரெண்டுசங்கு தண்ணீர்வரையில் கொடுக்கலாம். அதினால் நீர்த்தாரையிலிருந்து காணும்படிக்கான ரெத்தமும் வாயால்கண்ட இரத்தமும் உடனே நின்றுவிடுவதுமல்லாமல் ஜன்னிதோஷம் வயற்றில்தங்கி ஜூரவிருத்திருந்தல் முதலியவைகளியாவுஞ் சௌக்கியப்படும்.

* பசுவின்வெண்ணெ அல்லது எருமைவெண்ணெ.

† சுருள்ளிப்புவென்பது வெங்காயப்பூவு.

இதற்கு பத்தியம் வேண்[illegible]தில்லை. [illegible] பதார்த்தங்களை ஜாஸ்தியாய் உபயோ[illegible]படுத்தக்கூட[illegible]

5 – வயதிற்குட்பட்டவர்கட்கு [illegible] புகட்ட 5 – வயது முதல் 10 – வயதிற்குட்பட்டவர்கட்கு ரெண்டு சங்கு 10 – வயது முதல் 20 – வயதுக்குட்பட்டவர்கட்கு மூணுசங்கு 20 – வயதிற்கு மேற்பட்டவர்கட்கெல்லாம் நாலுசங்குமுதல், ஆறுசங்குவரையில் கொடுக்கலாம். மேற்குறித்த மருந்தொருபொழுது செய்ததை ஆறுவேளைக்குபயோகப்படுத்தலாம் சுட வைத்து சுடவைத்துக்கொடுக்கவேண்டும்.

சிலசமயம் [illegible]டம் புதிதாய் செய்துகொடுப்பது மெத்த பிரயோஜனமாகையால் குழந்தைகளுக்கு ஒரு ஞக்குபூச்சியும் பெரியோர்களுக்கிரண்டு நாக்குபூச்சியுமாகவைத்து [illegible] மருந்துகளையுங் குறைவுபடுத்தி ஒருவேளைக்கு தயாரானதை காலை, மாலையிரண்டுநேரங் குடுக்கலாம். இப்படியே ரெண்டுநாள் அல்லது மூன்றுநா[illegible] அப்போதைக்கப்போது தய[illegible]செய்துக்கொடுப்பது மெத்த பிரயோசனமாயிருக்கும்.

## சூலைக்கு மருந்து.

* சூலையென்பது கை கால்களில் வலியிருப்பதுமல்லது முழங்கால், முழங்கைகளில் [illegible]ரடுகட்டுகின்றதற்கும்.

பழஞ்சுணை வைக்கோலும் வேப்பிலையையுஞ் சமமாய்க்கூட்டி இரண்டையும் வேகவைத்து கரடுகட்டிய ஸ்தானங்களில் ஆவியல்லது வேதுபிடிப்பதுமல்லாமல், வேகவைத்த வேப்பிலையும் வைக்கோலையும் இரண்டையும் ஓர்துணியில்வைத்து சூலைகள் தங்கிய ஸ்தானங்களில்வைத்து ஒத்தடங்கொடுத்தபின் அதையே வெட்டு தண்ணீரால், நன்றாயரைத்து கொஞ்சமாய் அரிசிவடித்த கஞ்சியினால் கொழம்பாகக்கரைத்து கொதிக்கவைத்து மூணுநாள் ஆறுபேர் [illegible] வெடு கரடுகட்டிய சூலையின்பேரில் வைத்துக்கட்டி, கட்டிய பின்பு காலை, மாலை வெடு தண்ணீரை இளஞ்சூடாய் சுடவைத்து, கழுவிப்போட்டு பத்துபோட்டுவர சூலை கரடு, முதலியது, சௌக்கியப்படும்.

## வெடு தண்ணீர்க்கு வேறு பிரயோகம்.

[illegible] நூத்திபெலை சமூலமாகக்கொண்டுவந்து பிடித்துப்போட்டு வேகவைத்து, வேகவைத்ததை வெடு சூலைகண்ட ஸ்தானங்களில்

* சூலையென்பது முழங்கால், முழங்கைகளில், [illegible] கரடுகட்டுகின்றதற்கும்.



ஒத்தடஞ்செய்து, பின்பு அதையே நன்றாயரைத்து வெடு கரடுகள் கட்டியவிடத்தில் 13–நாள் காலை, மாலை கட்ட வெடு சூலையாதி சௌக்கியப்படும். அதாவது குழந்தைகள் அல்லது பெரியவர்களுக்குத் தக்கபடி யெவ்வளவு வீக்கமிருக்கின்றதோ அதற்குத் தக்கபடி செய்யவேண்டுமாதலால், இதற்கு யெடைபாகம் இவ்வளவென்று குறிக்கவேண்டியதில்லை, வெடு நூத்திபெலையை வேகவைத்த தண்ணீரை காலை, மாலை இரண்டுவேளை சுடவைத்து கரடுகட்டிய ஸ்தானங்களைக் கழுவிப்போட்டு பத்தைப்போட மெத்த அநுகூலமாயிருக்குமாம்.

## ஆராதபுண்ணிற்கு மருந்து.

[illegible]லவகுரியால் கடாட்சிணைக்காராலுவீடில் புளியங்கொட்டை மேல் தோலையெடுத்துப் பொடிபண்ணி முந்திய தேங்காயைத் திருகி திருகியபூவுடன் மேற்சொல்லிய புளியங்கொட்டை தோலைபொடித்துப் பூவுடன்சேர்த்து நன்றாய்ப்பிசைந்து பிழிய தயிலமிறங்கும். வெடு தயிலத்தை இரணங்களின்மேற் போட்டுவர புண்களாறிவருவதுடன் வீக்கமுதலியதுஞ் சௌக்கியப்படும்.

புளியம்விதையை ஒடைத்து அதில் மேலிருக்குஞ் செம்பாக்கு மேல் தோல்பலம் ஒன்று அத்துடன் பெரியதேங்காய் ஒன்று சேர்த்துக்கொள்ளலாம். அரைப்பலம் புளியம்விதைத்தோலுக்கு ஒரு மூடி பெரிய மூடியாய் சேர்த்துக்கொள்க. இலசமையம் வெடு புளியம்விதைத்தோல் மெத்த அபூர்வமாய் கெடைத்தால் ஒரு சிறிய தேங்காய்மூடியும் கால்பலம் புளியம்விதைத்தோலுக்குக் குறையாமலிருந்தால் நலம்.

## வைசூரியேனும்மம்மை, ரோகங்கள்கண்டயேழுநாள் உள்ளுக்குக் கொடுக்கவேண்டிய மருந்துகளின் விபரம்.

அதாவது பரித்திப்பிஞ்சு, ஜாதிக்கா, அத்திப்பிஞ்சு, சீரகம் இதுகளை பகலின்மோர், அல்லது யெருமை மோரிலரைத்து ஏழாம்நாள், ஒன்பதாம்நாள், பத்தாம்நாள் ஆகிய இம்மூன்று காலையிலும் உள்ளுக்குக்கொடுக்க வயத்திலுண்டாகிய இ[illegible]தல் முதலியதும் சௌக்கியப்படுவதினால் இரோகத்திற்கு அதிக சுகத்தைக்கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ஒருசங்கும் பெரியவர்களுக்கு இரண்டுசங்கு அல்லது நாலுசங்குங் கொடுக்கலாம். ஆனால் குழந்தைகளுக்கு ஜா

திக்காய்மட்டும் அதிகமாய் ஒரைக்கக்கூடாது. சீரகம், கால்விருக கிடை, பரித்திப்பிஞ்சு [illegible] திப்பிஞ்சு ஒன்று இதுகளை மோரிலரைத்துக்கொண்டு பத்துசுத்து ஜாதிக்காயை சந்தனக்கல்லில்லொரைத்து யாவையும் ஒன்றாய்க்கூட்டிகலக்கி அதை இரண்டு வேளைக்கு குடுக்கவேண்டும். 5 – வயதிற்கு மேற்பட்டவர்கட்கும் குடிக்கலாம். பெரியவர்களுக்குமிதைப்போல இரட்டித்துக்கொள்ளவும். சிறியவர்கட்கு ஒரே சங்குபுகட்ட.

## முதலாவது ஆரோக்கியஸ்நானஞ் செய்வித்துவைக்கவேண்டிய விபரம்.

வேப்பிலை, மஞ்சள், பச்சிலை, பூலாங்கிழங்கு அருகன்வேர் ஆகிய இவைகளையும் பசுவின்மோர், அல்லது யெருமைமோர்விட்டு ஒன்றாயரைத்து மறுபடி மோரால் குழம்பாகக்கரைத்து சிரசில் பூர்த்தியாய்ப் படும்படி தேய்த்து கண்டமுதல் பாதம்வரையில் தலைமுழுகிட்டு குளிர்ந்தஜலத்தைச் சூரியபுடமாகச் செய்வித்து ஸ்நானஞ்செய்விக்கவும் அல்லது குளிர்ந்தஜலமாகிய சுத்தஜலத்தால் செய்விக்கும்படிக்கான சமையமிருந்தபோதினுஞ் செய்விக்கலாம்.

அல்லது இளஞ்சூடாய் சுடவைத்த ஜலத்தை விட்டாலும்விடலாம் இதுகளெல்லாஞ் சமையமெப்படியோ அப்படிக்கிச் செய்விக்கவேண்டும். வேப்பிலை அருகன்பில் மஞ்சள் பச்சிலை பூலாங்கிழங்கு இதுகளுக்கு யிடைபாகம் வேண்டியதில்லை வயதிற்குத் தக்கபடிக்கு வைத்து அரைத்துக்கொள்ளவேண்டும்.

## இரண்டாவது ஸ்நானஞ்செய்வித்தபின்பு.

வைசூரிகள் சிலதுவாரக்துபோகியுஞ் சிலதுரணங்களாயிருக்குமாயின் அல்லது சுத்தமாய் ரணங்களில்லாதிருந்தபோதிலும் அவைகளின்பேரில் பூசவேண்டிய மருந்தின் விபரம்.

அதாவது வேப்பிலையும் மஞ்சளையுஞ் சுத்தஜலத்தாலரைத்துப் பூசவேண்டும்.

## மூன்றாவது ஸ்நானஞ்செய்துவைக்கவேண்டிய விபரம்.

எருமையல்லது பசுவின்தயிரை சிரசுமுதற் பாதம்வரையில் தேய்த்துவிட்டு சூரியவெப்பத்தால் காய்ந்த ஜலத்தாலாவது அல்லது இளஞ்சூடாய் சுடவைத்த ஜலத்தினாலாவது ஸ்நானஞ் சமையம்போல் திரேகஸ்திதியைத் தெரிந்து செய்வித்துவைப்பது நலமாயிருக்கும். தேகத்திலுண்டாகிய குடுகளியாவுங் கழிவாகும் அதினால் தேகபலமு முண்டாகும்.



## நான்காவது – ஸ்நானஞ்செய்விக்கவேண்டிய விபரம்.

விளக்கெண்ணையை சிரசுமுதல் பாதம்வரையில் தேய்த்து பின்பு * உசிலேபெலையை அரைப்பாகத்தேய்த்து சூரியவெப்பத்தினாற்காய்ந்த சுத்தஜலம் அல்லது இளஞ்சூடாய் சுடவைத்த வெந்நீரில் ஸ்நானஞ்செய்வித்து மோருஞ்சாதமும் சருள்ளியுஞ் சேர்த்தப்புசிக்கக்கொடுக்கலாம். இம்மாதிரியாகச் செய்வதினால் திரேகபலமுங் குடுகள்கழிவும் பசிமுதலிய சௌக்கியத்தைக்கொடுக்குமாதலால் இது திரேகஸ்திதியறிந்து செய்விக்கவேண்டும்.

ஆனால் ஒருவருஷத்திற்குட்பட்ட குழந்தைகளாயிருக்குமாயின் அதுகளுக்கு மிளகை பசுவின்பாலிலரைத்து பசுவின்நெய்யைவிட்டுக்காய்ச்சி மெழுகுபதமாகவிறக்கி நன்றாயாறியபின்பு கண்ணுக்கு கட்டாமல் சிரசுமுதல் பாதம்வரையில் வுபாயமாய்த்தேய்த்துவிட்டு சீயக்காயரைப்பிட்டு இளஞ்சூடாகியவெந்நீரில் ஸ்நானஞ்செய்வித்துவைக்கவும்.

## அதற்குத்தட்டனே வுள்ளுக்குக்கொடுக்கவேண்டிய விபரம்.

சிறிய பருத்திக்காய் ஒன்று, சிறிய மாசக்காயின் எட்டிலொரு பாகத்தையும் ஆக விரண்டையுஞ் சேர்த்து பசுவின்பாலல்லது எருமைப்பாலாலரைத்து ஒருசங்கு புகட்ட வைசூரியினாலே வயிற்றில் தங்கிய குடுகள் கழிவாகுந் திரேகத்திற்குச் சௌக்கியமுண்டாகும்.

## வைசூரியினால் நேரிட்ட
## ரணங்களுக்கு பூசவேண்டிய விபரம்.

குடத்தை வட்டத் துத்தியிலைச்சாற்றினால் நன்றாயரைத்து எலுமிச்சங்காய் பிரமாணம் திரட்டியெடுத்துக் கொண்டதினுடன் தேங்காய் யெண்ணை அல்லது விளக்கெண்ணை சேர்த்து மத்தித்து ரணங்களிற் போட்டுவர சகல புண்களுமாரும்.

## மநுஷன் காணுதற்கு காரணம்.

வைசூரியென்னுமம்மையிறங்குவதற்கு முன்பே ஸ்நானஞ் செய்விப்பதினால் சரங்களை அதின்பேரில் மருமுண்டாகுமுன் டாக ரணங்களுமாதலாலதற்கு நிவர்த்தி.

ஜாதிக்காய் வெங்கம் கருக்குமூலம் சீரகம் வகைக்கு விருக்கிடை பொடித்து அரைப்படி ஜலம்விட்டு கால்படியாக சுண்டவைத்து நெடி பொழுதுடன் ஒருசங்கு வேப்பிலைச்சாறு சருளிச்சாறு ஒருச

---

* (உசிலையென்பது) [illegible]

114824

க்கு இதுவிரண்டையும் ஷை கியாழத்துடன் சேர்த்து முறித்து கொ குரசந்தேன்விட்டு மத்திக்கு மூன்றுபொழுது கொடுக்கமருமுள் முதலியதுகள் சௌக்கியப்படும்.

5—வயதுக்குட்பட்டவர்கட்கு ஒருசங்கு.

5—முதல 15—வயது வரையில் ரெண்டு சங்கு.

16 — வயதிற்கு மேற்பட்டவர்கட்கு 3 சங்குமுதல் 4 — சங்கு வரையில் கொடுக்கலாம்.

### வைசூரியினால் கண்ணில் பூவிழுந்தால்.

பனங்குருத்தைத்தட்டி கண்ணில் 3 — அல்லது 6 — பொழுது காலை மாலை யிரண்டு வேளையும் பிழிய ஷை பூ மாறும்.

நந்தியாவட்டப் பூவுஞ் சீரகமும் சமனிடையாய்த் தட்டி முலைப்பாலினால்வைத்து 3 — அல்லது 6 — பொழுது காலை மாலை பிழிய கண்ணில் விழுந்த பூ மாறும்.

சீரகமுஞ் செருஞ்சிற்பூவும் [illegible]டையாய்ச்சேர்த்து [illegible]யத் தட்டி முலைப்பாலினால்வைத்து [illegible] அல்லது 6 — பொழுது பிழிய ஷை பூ மாறும்.

சீரகமும் முருங்கப்பூவுஞ் சமனிடையாய்ச்சேர்த்து முலைப்பாலினையத்தட்டி யூறவைத்து 3— அல்லது 6—பொழுது கண்ணில்பிழிய பூ மாறும்.

### வைசூரி எழும்பியபின் [illegible].

ஸ்நானஞ் செய்து வைப்பதற்கு முன் அதிக தாகங் கண்டால் [illegible]

கழுதை வெத்தி புதியதாய்க்கொண்டுவந்து அரைப்படி வெந்நீரில் ஒரு வெத்தியைப் [illegible] புதைச்சட்டியில்விட்டு கரைத்து ஒருஜாமஞ் சென்று ஷை தெளிந்திருந்து வடிகட்டி குழந்தைகளுக்கு ஒரு சிறிய சங்களவும், பெரியோர்கட்கு ரெண்டல்லது மூனுசங்கு தாகமெடுக்குஞ் சமயங்களில் கொடுக்க தாகமடங்குந்தாகத்திற்கு மற்றெந்த மருந்துகளைப் பார்க்கிலும் இந்த தெளிவாகிய ஜெய்ரோணது, அதி சீக்கிரத்தில் ஷை தாகத்திற்கு பிரதானமாகிய குடிநீர்.

### வைசூரிக்கி பத்தியம்.

கடுசாதத்தின் ஆரவைத்து மிளகுரசம் அதாவது மிளகுவுலர்த்த கொத்தமல்லி சீரகம் கருவேப்பிலை பழம்புளி வெந்தியமிதுகளுட்பாயமாய் கொஞ்சஞ் சலஞ்சேர்த்திதுகளால் சேர்க்கையாகிய ரசத்தி



ற்கு செய் ஈரவெங்காயம் சீரகம் வெந்தியம் கருகப்பிலை பச்சைக்கொத்தமல்லி யிவை சேர்த்து தாளிதஞ்செய்த ரசம்விட்டு சாப்பரடு கொடுக்க வைசூரியெனும் வியாதி இரக்கத்திற் சேதுவாம். இரக்கத்திற் சேதுவாகிவருஞ் சமையங்களில் நீர் மோர் சாதம் ஈர வெங்காயம் எலுமிச்சங்காய் ஊருகாய் பச்சக்கொத்தமல்லி தொவயல் பழம்புளி உப்பு கருகப்பிலை தொவயல் முதலியவைகள் உபயோகப் படுத்தலாம்.

ஆனால் சிறு குழந்தைகளுக்கு பச்சரிசி மாவு புழுங்கலரிசி மாவு அரோருட்மாவு காறன்பிளவர் மாவு பசுவின் பால் அல்லது வெள்ளாட்டுப்பால் ஆவ்ட்டிரும் சக்கரை அல்லது வெள்ளை சக்கரை இதுகள் கஞ்சி கொடுப்பது நன்மையாம்.

### பத்தியங்களுக்காகும் பதார்த்தங்கள்.

செல்லிக்காய், பனங் கற்கண்டு வெள்ளரிப்பிஞ்சு பச்சக்கொடிமுந்திரிப்பழம், பனைசொங்கு, சிறுக்கல்க்கண்டு, வால்மிளகு, மிளகு, கருகப்பிலை பச்சை கொத்தமல்லி மோர் பழம்புளி வுப்பு அவரைக்காய் அரக்கீரை சிறுகீரை பொன்னாங்காணி வல்லாரை, புளியாரை மணத்தக்காளிக்கீரை வெந்தியக்கீரை வெள்ளாட்டு மாம்சம் அல்லது செம்மறி ஆட்டுக்கறி ஷை சுறாமீன் குறைவையின் கெளித்திமீன் ஷை சுறாமீன் காரை கெளுறாரி உடும்பு வெள்ளைவெளி ஆருவி வாழைக்கச்சல் அத்திப்பிஞ்சு தொவரையின் பருப்பு, பச்சைப்பயறு பசுவின்நெய் ஷை பால் வெள்ளாட்டுப்பால் இளநீர் சொரக்காய் முருங்கக்காய் பீர்க்கங்காய் பொடலங்காயிதுமுதலியவைகள் சேர்த்துக்கொள்ளலாம்.

### ஆகாத பதார்த்தங்கள்.

தேங்காய் மாங்காய் நல்லெண்ணெய் யிலுப்பெண்ணெய் ஷை பிண்ணாக்குகள் கருவாடு, மீன், மொச்சை பரங்கிக்காய் பாகல்க்காய் கொட்டைமுந்தாலி சோற்றுவி நெல்லாவி புகை காற்றில்லாத அடக்கமாகிய இருண்டவீடு துர்நாற்றம் துர்வசனம் மற்றுமுதலிய காப்பிரயைன்டம் காரசாரமுதலிய வாடை யிவைகள் கண்டிப்பாய் சுட்டாதென்றறிக அகஸ்தியர் திருவடிகளே சரணம்.

வைசூரி விளக்கப்பிரகரணம் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

## சாமளாதேவியெனு மூழிக்காற்று விளக்கப்பிரகரணம்.

வெண்பா.

சாயாபுருடனைப் போற்றுனே தடித்து
மாயாவைரியாய்மானிலத்தில்—தோயவுரை
யாவேச வீரனாப்போலாக்கிரமித்து தூளிசெய்யு
மாவேச சாமளையைவழுத்துவாமே.

விருத்தம்.

போழி குருநலகெலாம் போற்றரிய வெண்டிரையாள்
சேர்புரியாற்குழலாள், திருப்பாகனைப்போற்றி
ப்ராழிசிவயோகரைப்பற்று சாமளாதேவியெனுங்
காராரு மூழிக்காலசஞ்சக்குணமவின் தங்களருவேனே.

## சாமளாதேவியெனு மூழிக்காற்றி னுற்பத்தியும் அதின் குணானுபவமும்.

இந்தேடியவுலகின்கண் ஜீவர்கள்.

விளப்பபனே, தநு, கறணை, புவன, போக, மாயனுபவித்தலினு லுண்டாகும் நாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளிலுமிக் கொடிய விஷபேதியினுற்பவமாவதியாதெனில் ஆகாயத்தின் கண், மைபோன்ற விருண்ட நிறத்தையுடைய காற்றுண்டு, அருபியா யுற்ப வித்துசாமளையின் வல்லமையினுல் லக்காற்றானது அவ்வெவ்விடங்களி ல்வியாபிக்கின்றதோ. அவ்வவ்விடங்களில் வசிக்கும் ஜனங்களின் விளை ப்படி யாருடையசரிரற்குக்கப்படுகின்றதோ, அவரவர்கட்கு அக்காற் றின் விஷத்தினுல்: தேகத்திற் றக்கிய வுடனே நல்ல இரத்தத்தை முறித்து கொடிக்கள்ளியை வாட்டிப்பிழிந்த சாறு போல், நீராக்கி அ ன்னா வெளிப்படுத்துவதற்காதாரமான, தேக, இலட்சணத்திற்கு,மி படிபதியும், வாக்கினையுமுண்டாக்குவதினுலெவ்வளவு தைரியசாலியா யிருந்த போதினும் மேற்படி விஷ நீருன்னை எப்பொழுது தேகத் னிடமிருந்து வடிக்கின்றதோ அப்பொழுதுடனே பிசினைப்போல் ச ரத்தில் வியர்வைப்பிடிக்கடிக்காணுவதுங்கண்டம் வரண்டு காணுதலா அதிக தாகமுஞ் சரீரமெல்லாங்கடினவேதையுமடிக்கடி வாந்தி உண் டாகிற வியாதிக்கேதற்காதாரமாகிய ஜன்னி பிரவேசிப்பதும் நரம் களுக் காதாரமற்று, கால், கை, சென்னைடயிழுக்கிறதும் இன்னும்



வாந்திபேதி கண்டு.—மேற்படி விம்சைப்படும் ஓர் மனுஷனுக்கு ஒருவன் மருந்து குடுக்கிறதாகவும் இரண்டு பெயர்கள் கால் கைகளில் தயிலம் பூசும் பாவனையாக இந்தப் படம்.

பலவிதமாகிய வியாதிகளுண்டாக்கி தேகத்தையழிக்கின்றமை
யால் அதற்கு தகுதியாகிய சிகிச்சைகளை துரிதத்தில் செய்யாவிடில்;
நாகசர்ப்பத்திலும் தீண்டப்பட்ட ஓர்பிராணிக்கு எவ்வளவு துரிதத்
தில் அவ்விஷமானது இரத்தத்தாரையினிலேறி சீக்கிரத்தி
லெப்படி பிராணனை மாய்க்கின்றதோ அதைப்பார்க்கிலும் அதிக துரித
த்தில் இக்கொடிய யுகபேதி யென்னும்வியாதியானது இரத்தத்தை அதி
சீக்கிரத்தில் விஷநீராகவிளைக்கிறதினால் தீவிரமான தகுந்த சிகி
ச்சைகளைச் செய்வோமாகில் பாமரனுமால் பெரும்பாலுமனேகர்
சௌக்கிய மடைவார்களென்பதே அடியேனுடைய முக்கியகருத்து
சாமளாதேவியின் திருவடிகளேசரணம்.

## விஷபேதிகளின் குணானுபவமுஞ் சாமளாதேவியென்னு
## ம் பூஜிக்காநின்ற யுகபேதியின் தீர்தனலக்ஷணமும்.

இந்த விஷபேதிகளானது காணுவதினாலந்த தேகலக்ஷணத்
திற்குரியதாய்க் கொம்பனென்றுங் குடற்பவேயென்றும் அக்க
ரமென்றும் மூன்றுவித பேதி காணுகின்றன.

## கொம்பனென்னும் பேதியின் குணானுபவம்.

இந்தபேதிகண்டால், வாந்தி, களைப்பு, குளிர்ச்சி, வியர்வை,
சரீரத்திற்களைப்பு, வயிற்றுவலி, நாவரட்சி, விக்கல், உடற்பொட
ந்தலுஞ் சரீரமெல்லாம் பிசின்போலிருக்குதலுஞ் ஜன்னியுமுண்
டாகும். நாடி யடிக்காது அடிக்கடி துடித்தடங்கும். எட்டுமுகூர்த்தமா
கிய பனிரெண்டுமணி நேரத்திற்குள் மரணத்திற்காரணமாகிய
வேதனைச்செய்யும். அதாவது, இரக்க விதியுள்ளவர்கட்குமட்டுக்
தேகம் போகுமென்பது கருத்து.

## குடற்பவேயென்னும் பேதியின் குணானுபவம்.

இந்த பேதியானது காணிலடிக்கடி வாந்தியும் பேதியும் காணு
கிறதுமல்லாமல் கரத்தடைப்பு மூர்ச்சையு மடிவயிற்றில் வலியுமுண்
டாகுதலும் பின்பு மிக கழிச்சலுண்டாகிற அயிர்த்தியத்தால் தேக
ரத்தம் விழச்செய்தலும் நரம்புகள் இசிர்தலுண்டாகிறதினால் சரீ
ரத்தில் குளிர்ச்சியுண்டாகுதலுந் தேக பெலனைப்பகிக்குதலுமுண்
டாகிய இக்குணங்களுண்டாக்குமாதலால், மூன்றுநாட்சென்றால்
குடற்பவேயென்னும்பேதி குணத்திற்சேருவாம்.

## அக்கிரமேனும் பேதியின் குறுனுபவம்.

சேற்றைப்போல பேதிகாணுவது, மந்தமுடன் அஜீரணமாகாத பருக்களல்லது முந்திய நாயத்தில் சாப்பிட்ட பதார்த்தங்கள் யாவுஞ் சீரணமில்லாமல் விழுவதும், அதிக தாகமுண்டாகிறதும் தேகத்திலதிக குளிர்ச்சியும் பாதமுதல் கண்டம்வரையில் கடுப்புகண்டு தொண்டைக்கம்மலும் அதினால் விக்கல், கக்கல் முதலியவிம்சைகள் காணுதலினால் அறுப்துநாழிகைச்சென்றால்மட்டுஞ் சுகத்திற்கேதுவாம். சிலசமயம் அறுபதுநாழிகைக்குமேல்தகுந்த சிகிச்சையும் பார்த்தார்ப்போர்களின் ஜாக்கிரதையுமில்லாவிடின் அசௌக்கியத்திற்கேதுவாகிறதுமுண்டு.

### பொருந்துணங்கள்.

(முதலாவது) ஒருதட்டவை பேதியாகிறதுடன் மயக்கமுண்டாக்கி யெழுந்திருக்க சக்தியற்றவர்களாக்கிவிடுவதுமுண்டு.

(இரண்டாவது) சுத்தஜலத்தைப்போலடிக்கடி பேதியாகிக்கொண்டிருந்து குடலைப்புரட்டி வாந்தி அதிகரித்து ஜன்னியையுமுண்டுபண்ணும்.

(மூன்றாவது) அஜீரணத்தாலுண்டாகும் பேதியைப்போலத் தோன்றி வயிர் வலிசங்கண்டு சிறுகச்சிறுக அசாத்தியனுணங்களையுமுண்டாக்குகிறன.

### வேறுவிதமாகிய பல்பொருந்துணங்களின் விபரம்.

தாகம், மயக்கம், குளிர்ச்சி, இசிவு, அல்லது வலிப்பு, அதிக வுஷ்ணசம்வாங்குதல், அல்லது அடிக்கடி இன்று இளைருதலுடன் பெருமூச்சுவாங்குதல், நாடிகடைப்பு, சுபதபேதப் படுதலல்லது வேற்றுமைப்பட்டு, சப்தித்தல், சதல்வலி, சரீரத்தில் பிசின்போல வியர்வை நகங்கள்முதலிய தந்தத்தருவிகளின் நிறம் வேறுபட்டு கறுத்தல், சநந்தேகளும் தங்கள் நிலைகளின் நிலையயற்று பலசனப்படுத்தல், நேத்திரமானது, சிறுவிழி பிரசடைந்து அழுப்போகுதலுமல்லாதன்னி குழிவிழுகிறதும் நாட்டியானது சோம்பி, ரசமிழந்த மணிக்களியைப்போல் கருகேலுண்டாகுதலுஞ் சிறுநீரா, வல்லதுடன்சேர்த்து பிசிலாக வெளிக்கிடாமல் கட்டிப்போகுதலும், சோனைகளால் மரணமடைந்து சேர்த்துக் ... வரையிலும் நல்ல இரத்தப்பசையைமுழுதுநீத்தி வாடச்செய்துண்டாக்கிக் கிருமிகள் நங்குமிடங்களை ... வியாதியினால், ... கிருமிகள் பேதிகளுக்கி, வியாதி



ந்து, நாசியின்வழியாகவாவது வருவதும், இன்னுமனேக கிரக்குணங்களையுமுண்டாக்குகின்ற இக்கொடிய வியாதியின் கூராயிருக்கும்.

### விஷபேதிக்கு மருந்து.

### திரிவித விஷபேதிகளில் ஒவ்வொன்றிற்கு முபசாந்தியாய்க் கொடுத்து பார்க்கவேண்டிய விபரம்.

(அதாவது) கொம்பனென்னும் பேதிகாணில் ஒரேதட்டவை பேதியானவுடனே பட்டைச்சாராயமல்லது பிராந்தி அடியிற்கண்ட பிரமாணத்தின்படி முதலாவது கொடுத்துபார்க்க, அதில் நில்லாவிடில் அசாத்தியமென்றே தெரிந்துக்கொள்ளவும். அப்படிக்கு தெரிந்துக்கொண்டபோதிலு மதற்கு வேண்டியமட்டும் தெரிந்த சிகிச்சைகளை செய்யவேண்டும். ஏனென்றால், கடவுளின்கிருபை யெப்படியிருக்குமோ அதை நாமறியோமாதலா லதற்குவேண்டிய சிகிச்சைகளை யோதுமானமட்டில் செய்வித்துப்பார்க்கப் பிரியப்படவேதேகந்த பிரதானகடமையாயிருக்கின்றன. ஏனென்றால், முயற்சி செய்வோரிகழ்ச்சியடையார். என்னும் பழமொழியையனுசரித்து கவனிக்கவேண்டுமென்பதே அடியேனுடைய முக்கியகருத்து.

| வயது. | சுத்தஜலமிடை. | பிராந்தி. | பட்டைசாராயம். |
|---|---|---|---|
| | ரூபாதூக்கம். | | |
| 5-வயதிற் குட்பட்டவர்கட்கு. | கால். | கால் கிரும். | கால் கிரும். |
| 5-வயமுதல்10-வயதுவரை. | அரை. | அரை கிரும். | அரை கிரும். |
| 10 – முதல் 20-வயதுவரையில். | முக்கால். | ஒரு கிரும். | ஒரு கிரும். |
| 20-துக்குமேற்பட்டவர்கட்கு. | ஒன்று. | ஒன்றரை கிரும். | ஒன்றரை கிரும். |

பிராந்திகொடுத்து கொடுக்கும்விஷயத்தில் கொஞ்சஞ் சுத்தஜலஞ்சேர்த்து கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் பட்டைசாராயமாயிருக்கின் சுத்தஜலஞ்சேர்த்துக் கொடுக்கவேண்டியதில்லை. பின்னு மவரவர்களின் தேகபிலனுக்குத்தக்கபடி கொடுப்பதே மெத்த பிரதானமாயிருக்கும்.

## பருவவேனும் பேதிகாணில்.

மஞ்சள்தூளை வெந்நீரில்விட்டுக்கலக்கி அடியிற்கண்ட பிரமாணப்படி கொடுக்கவும். சிறியோர்களுக்கு அரைக்கால்ரூபாயெடை முதல் கால்ரூபாயெடைவரையிலும், பெரியவர்களுக்கு அரைரூபாயிடைமுதல் ஒருரூபாயிடைவரையிலும் கொடுக்கலாம். வெந்நீர் சிறியவர்கட்கு ஒரு சங்குமுதல் ஒன்னரைசங்குவரையில் பெரியவர்கட்கு ஒருதிரும் முதலிரண்டுதிரும் தண்ணீர்வரையில் கொடுக்க. வெந்நீரில் மஞ்சள்தூளைப்போட்டுக்கரைத்து நன்றாய்த் தெளியவைத்துக் கொடுக்கவேண்டும். முதல்தடவை நில்லாவிட்டால் மறுபடியு மிரண்டுதடவைகொடுக்க, வுடனே நிற்கும். இதுவன்றி பூமியின்பேரில் ஓர்பாய் அல்லது கம்பிளியின்பேரில் சாம்பலைப்பரப்பி யதின்பேரில் மேல்கண்ட பேதியானவனை படுக்கவைத்து மேலெங்கும் சாம்பலை நன்றாய்ப்பூசி, பின்பு, பழங்காரைக்கரண்டுவந்து இடித்துத்தெள்ளி அரைக்கப்படிமுதல் முழுக்கால்வரையிலும் உள்ளங்கைமுதல் முழங்கைவரையில் நன்றாய்த்தேய்க்க சரீரத்தில் குடுண்டாகுமாதலால் குட்டிப்படுவென்னும்பேதி, வாந்தி தாகமெடுப்பு, மூற்சை வயற்றிலுண்டாயிருந்த வலி முதலியவுகள் இல்லை சாய்க்கிளிவு இதுமுதலியது மூன்றுநாள் தப்பிற்றுனல் ஜெனக்கியப்படுமென்றறிய. பழங்காரையென்பது சுண்ணாம்பு மணல் சேர்த்தரைத்திருந்த நாட்பட்ட சுண்ணாம்பு.

## அக்காமெனும் பேதிகாணில்.

பேதிகண்டவுடன், திணைகைவறுத்து கடைந்து சுத்தஜலம் விட்டுவிட்டநன்றாய் காய்ச்சி அடியிற்கண்ட பிரமாணப்படிக்கி கொடுக்க, அதாவது :—

சிறியோர்களுக்கு கால்ரூபாயெடை முதல் அரை ரூபாயெடை வரையில் மிளகு, அத்துடன் கால்படி ஜலம்விட்டு வீசம்படியாகக் கண்டவைத்து ஒருபொழுது, அல்லது ஷை யொழுக்கை இரண்டுபொழுதாவது கொடுக்க.

பெரியோர்களுக்கு அரை ரூபா யிடை முதல் ஒன்னரைரூபாயிடைவரையில் மிளகு மஞ்சளுடன் சுத்தஜலம் படி அரைவிட்டு அரைக்கால் படியாகக் கண்டவைத்து, இரண்டுமணிநேரத்திற் கொருதிரம் இரண்டு தடவை கொடுக்க சோறு சோறாய்க் கழிந்தபேதி, தாகம்



குளிர்ந்தசரீரம், கால், கை, கடுப்பு யின்னம் பலவிதமிம்சைகளைக் கொடுத்த அக்காமெனும் பேதி சொஸ்தப்படும்.

## பேதி நின்றபிறகு கொடுக்கவேண்டிய கஞ்சியின் விபரம்.

பழைய புழுங்கலரிசியை ஒடைத்து குருணையைப்போலச்செய்து, அதனை பொன்னிறமாய்வறுத்து கஞ்சிகாய்ச்சி உப்பிட்டு கொடுக்கவும் அதற்கனுபான, சுட்ட கருகப்பிலை, மிளகு, உப்பு சேர்த்து துவைக்கிய பொடியை முதலில் நாக்கிலிட்டு பிறகு, கஞ்சியைக்கொடுக்க விஷபேதிகளுக்கு மெத்த அனுகூலத்தைக் கொடுக்கும்.

## மூன்றுவித பேதிக்கும் வேறு பிரயோகம்.

(அதாவது) மிளகு, சுக்கு, கடுக்கா, ஓமம்.

கருகப்பிலை, பெருங்காயம் பூண்டு வெந்தயம், சீரகம், ஆகிய ஒன்பதை சமனிடையாய்ச் சேர்த்து இவ்வறுப்பு செய்து புளிப்புமாதளை யிலைச் சாற்றால், வொருஜாம மரைத்து சிறு சுண்டைக்காய்ப் பிரமாணமும் பெரிய கழற்சிக்காய்ப் பிரமாணமுமாகவு முண்டை செய்து நிழலுணர்த்தல்செய்து ஓர் சீசாவிலடைத்துவைத்துக்கொண்டு, மூன்று விதபேதிகளுக்கும் வெந்நீரிலனுபானமாகக் கொடுக்கலாம் அதாவது மூன்று வேளை, ரெண்டுமணிநேரத்திற் கொருதிரம் கொடுக்கலா மொருதடவை பேதியானவுடன் வோருண்டை வெந்நீரில் கொடுத்த வுடன் மேற்படி பேதி நிற்கில் மறுபடி மருந்தைக் கொடுக்க வேண்டியதில்லை; ஒருமாத்திரைக் கொடுத்தபின்பு மறுபடியும் பேதிகாணில் மறுபடியு மோருண்டை வெந்நீரில் கொடுக்க, இரண்டு மாத்திரைகள் கொடுத்ததின்பேரில் மறுபடியும் பேதியானால் தேனிலோருண்டை கொடுக்க வுடனே ஷை பேதிநிற்கும்.

5—வயதிற்குட்பட்டவர்கட்கு ஒருசுண்டைக்காய் வடிவமான மாத்திரையிளஞ்சூடாகிய, ஒருசங்கு வெந்நீரிற் புகட்ட.

10—முதல் 20—வயது வரையில், ஒரு கழற்சிக்காய் பிரமாணமாகிய மாத்திரைரெண்டு இளஞ் சூடாகிய வெந்நீரில் கொடுக்க.

20-வயதிற்கு மேற்பட்டவர்கட்கு மூனுமாத்திரை வெந்நீரில் கொடுக்கலாம்.

இரண்டு தடவை வெந்நீரிலும் ஒருதடவை மட்டும் தேனில் கொடுக்க பேதி அறுலயட்டும் மூன்றுதடவை மாத்திரையைக் கொடுக்கவேண்டும். அப்படிக்கில்லாமல், ஒருதடவை மாத்திரைக் கொடுத்

ந்திவுடன் பேதி நிற்கில் மறுபடியு மாத்திரையைக் கொடுக்க வேண்டியதில்லை.

**பேதிமுன்நிற்குஞ்சியாழச் செய்துக்கொடுக்க வேண்டியவிபரம்.**

சுண்ணும்பை வெள்ளைத் துணியில் வைத்து மையத்தட்டி, அதுடன் கொழிஞ்சி வேர்ப்பட்டையும், வெண்குன்றி வேர்பட்டையையுஞ் சிறியதுண்டுகள்செய்து பட்டைகளை மட்டு மொன்றுய்க் கலந்து, புதிதாய் புதுச சட்டியிலிட்டு, அதின்மேல் சுண்ணும்பு சுற்றிய துணியைவைத்து, அதின்பேரில், மீதியாயிருக்கு மறுபாதி பட்டைகளைவைத்து மேல்சட்டி மூடி சாம்பலாக வெரித்து ஜலம் விட்டெட்டொன்றுய்க்காய்ச்சி சுண்டிய சியாழத்தை அடியிற் கண்ட [illegible] பாகத்தின்படி வயதிற்குத்தக்க அளவாக் கொடுக்க வேண்டும்.

சுண்ணும்பு யிடை ரூபா மூனு.
கொழிஞ்சி வேற்பட்டை யிடை ரூபா மூனு.
வெண்குன்றி வேற்பட்டை யிடை ரூபா மூனு.

[illegible]த்தஜலம்படி நாலுவிட்டு வெட்டொன்றுய் சுண்டவைத்து கொடுக்க, அடுத்தடுத்தாகும்பேதி உடனே நிற்கும். நில்லாவிடில் கொஞ்சம் நேரம்விட்டு கொடுக்க நின்றுவிடும். ஆனல், கொம்பேனும் பேதிமட்டும் நிற்பதரிது.

5 - வயதுக்குட்பட்டவர்கட்கு ஒரு சிறியசங்கு புகட்ட.
5 - முதல் 10 - வயதுவரையி லிரண்டு சங்கு கொடுக்க.
10-வயது முதல் 20-வயது வரையில் 3-சங்குமுதல் 4-சங்கு.
20-வயதிற்கு மேற்பட்ட யாவர்கட்கும் 4-சங்குமுதல் 8-சங்குவரையில் கொடுக்கலாம்.

**சகல விஷபேதிகளினுலு முண்டாகும் வாந்திகட்கு மருந்து.**

வேப்பீர்க்கு பலம் 1 - அதாவது, 8-ரூபாயிடை எலிச்சி ரூபாயிடை ஒன்று இது மென்மையும் பருசபோலிடித்து, முலைப்பாலிலூறவைத்து [illegible] ஒரு ரூபாயிடை வசம்பை சுட்டு [illegible] அத்துடன் அரைரூபாயிடை மயிலிறகை [illegible] சுட்டு கரியாக்கி பொடி கரியையும் [illegible] ரெண்டு ரூபாயிடை தேனில் வசம்பின் கரியையும் மயிலிறகுக்கரியையுஞ் சேர்த்து மத்தித்து, அதினுடன் முன்சொன்ன வேப்பீர்க்கு எலிச்சியையு முலைப்பால்விட்டுஊறவைத்த பாலேயும் மொன்றுய்க் கலந்து அடிக்கடி ஒருசிறிய கரண்டி குடித்துவர வாந்தி நிற்கும். வாந்தி நின்றுவிட்டால் கொடுக்க வேண்டியதில்லை நில்லாமலடிக்கடி வாந்தி காணில் சற்றுநேரத்திற்கொருதரங் கொடுத்துவர வாந்திசெனக்கியப்படும்.

**விஷபேதிக்கி சண்டமாருதக்குளிகை.**

ஜாதிலிங்கம் விருகனிடை ஒன்று. } இவைகள் முன்முருகத்தி செய்து சேர்க்கவேண்டும்.
இரசகற்பூரம் விருகனிடை ஒன்று.
வீரம் விருகனிடை ஒன்று.

சூடம் விருகனிடை ஒன்று.
அபின் விருகனிடை ஒன்று.
சுக்கு விருகனிடை ஒன்று.
மிளகு விருகனிடை ஒன்று.
கஸ்தூரி விருகனிடை ஒன்று.
சடை கஞ்சாவிலை விருகனிடை ஒன்று.
குங்குமப்பூவு விருகனிடை ஒன்று.

இந்த சரக்குகளி யாவையு மொன்றுய்ச் சேர்த்து கலைத்துவிட்டு 3 - ரூபாயிடை கஞ்சாவை ஒருபடி ஜலம்விட்டு கால்படி ஜலமாகச் சுண்டவைத்து மேல்கண்ட சரக்கை இந்த வெர்ழத்தால் எட்டுஜாமம் மரைத்து சித்திரமூலம் வேர் ஒரு ரூபா யிடையை யிடித்துப்போட்டு கால்படி ஜலம்விட்டு வீசம்படியாக சுண்டினதைத்திறு லொருஜாமமும், பட்டை சாறுயத்தால் ஒருஜாமமும் கருங்கோழியின் குடலை ரெண்டு துண்டுகளாய் அறுத்து காயவைத்துக்கொண்டு, எட்டாங்கர்ச்சல் மெடி யுப்பை மட்டும் அயச்சட்டியிலிட்டு அடுப்பேற்றி யுருகும்போது அதற்குச்சரியிடை வுலர்ந்த கருங்கோழியின் குடல் துண்டுகளை அதில் லொவ்வொருதுண்டுகளாய் குடுக்க சுண்ணமாகும். அந்த சுண்ணம் விருகனிடை ரெண்டுசேர்த்து முன்னரைத்த படியே மறுபடியுமொருஜாமம் பட்டைசாறுயத்தாலரைத்து, மிளகுபிரமாணமும் பச்சைப்பயர் பிரமாணமுமுலர்ந்தகொத்தமல்லி பிரமாணமும் வெந்தியம் பிரமாணமுமாகிய நான்குவிதங்களாக குளிகை செய்து தந்தமிமிளி லடக்கஞ்செய்து வைத்துக்கொள்ளவும். ஒருதடவையல்ல இரண்டு தடவைக்குமேல் குடுக்கக்கூடாது.

கொம்பெனனும் விஷ்பேதிக்கி பட்டைசாருயத்திலும் குடற் படுவதிலாலும் பேதிக்கி சுடுவெந்நீரில் மஞ்சள் தூளிட்டு தெளிந்த பின்பு அதில் கொடுக்கவும் அக்கரமெனும் பேதிக்கி மிளகை சிறுகவ றுத்துகடைந்து தண்ணீர்விட்டு வற்ற வைத்த பொழுதில் கொடுக்கவேண்டும்.

பொட்டுப்பு பலம் 1 அதாவது 3 - ரூபாயிடை கருங்கோழிக் குடலுலர்ந்தது பலம் 1 யிதுவும் மூனுரூபாயிடை அயச்சட்டி யெ ன்பது இரும்புசட்டி.

5 - வயதிற்குட்பட்டவர்கட்கு ஒரு வெற்றிலைப்பிரமாணம்.

5 - முதல் 10 - வயதிற்குட்பட்டோர்கட்கு பச்சைப்பயறு பிரமாணம்.

10 - முதல் 20 - வயதிற்குட்பட்டவர்கட்கு கொத்தமல்லி பிரமாணம்.

20 - வயதிற்கு மேற்பட்டவர்கட்கும் மிளகு பிரமாணம் கொடுக்க.

பட்டைச்சாராய மளவுங்கியாழத்தினளவும்.

5 - வயதிற்குட்பட்டவர்கட்கு பொழுதுக்கு ஒரு சிறியசங்கு.

5 - முதல் 10 - வயதிற்குட்பட்டவர்கட்கு ஒரு பெரியசங் காகவும்.

10 - முதல் 20 - வயதிற்குட்பட்டவர்கட்கு ஒரு திராமாகவும்,

20 - வயதிற்குமேற்பட்டவர்கட்கு; ஒன்னரைதிராம் - கொ டுக்கலாம்.

துடற்பவேனுக்கு கியாழ்விபரம்.

மஞ்சள்தூள்பலம் அரை சுத்தஜலமாகிய சுடுவெந்நீர்படி காலவிட்டு அரைக்கால்படியாக சுண்டவைத்துக்கொள்க. இது தெ ளிவை மேற்கண்ட வயதுக்குத் தக்கபடி புகட்டப் பிரியப்படவேண் டும்.

அதிசாரத்திற்கு கியாழ்விபரம்.

மிளகு ரூபாயிடை ஒன்று இது மிளகை வறுத்து கால்படி சுத்தஜலம்விட்டு; அரைக்கால்படியாக சுண்டவைத்து வடிகட்டி மேற்குறித்த வயதிற்குத் தக்கபடி கொடுக்கவேண்டும்.



வைசூரியறுக்கு பட்டைச்சாராயம் மேற்குறித்த வயதிற்குத்தக்க படி வாங்கிக்கொள்ளவும். இதுகளே சண்டமாருதகுளிகைக்கி அனு பானம்.

வாந்திபேதிக்கி குளிகை.

எட்டிவேரை கொண்டுவந்து சுத்தஜலத்தால் நன்றாய் கழுவிப் போட்டு உள்காம்பையும் மேல்தோலைநீக்கி எலுமிச்சம்பழச்சாற்றால் இரண்டுஜாமமரைத்து கடலைபிரமாணமும் உருண்டு, பச்சைப்பயறு இம்மாதிரிகளாக உண்டைசெய்து * ரவியுலர்த்தி வைத்துக்கொண்டு வாந்திபேதிக்கி; தும்பையும், நிலவேம்பும் வேரிலையாயிடித்துப் போட்டு சுத்தஜலம்விட்டு அரைப்படியாக சுண்டவைத்து க்கொண்டு ஒரோசமா யுகபேதியானவர்கட்கு ஒருண்டை முதலில் கொஞ்சம் பொழுதிலருந்த அருந்தியமறுபடியும் பேதி, அல்லது வாந்திகாணில் மீந்தியும் இது பொழுதிலோருண்டையைக் கொ டுக்க. மறுபடியும் பேதிகாணில் மறுதபாவுமப்படியே கொடுப்பி க்க. உடனே நிற்குறதுமல்லாமல், காதடைப்பு, வியர்வை ஜன்னி மற் றுமுதலிய விம்சைகளியாவுஞ் சௌக்கியப்படும். மூன்று தடவை கொடுக்க, ஒருதடவை கொடுத்தவுடன் இது பேதிநின்று விட்டால் மூன்று தடவைகொடுக்கவேண்டிய தில்லை.

சிலசமையம் மூன்றுதபா இது மருந்து கொடுத்தும் நில்லா விடில் ஒருகொம்பு வசம்பு வொருகொம்பு, மஞ்சல் இரெண்டையுஞ் சுட்டு இது நெருப்பை யப்படியே, ஓர்ப்பலகையில்வைத்து கருங்கல் குளவி யால் நன்றாய் நணிக்கி தேன்விட்டு கலந்துள்ளுக்கு கொடுக்க பரம கருணால், சாமியென்று சொல்லும்படிக்கான யுக்தி உடனே நிற்கும்.

பத்தியம்; பழைய சோறை ஒடைத்து கஞ்சிகாய்ச்சி யூப்பிட்டு, கொடுக்கலாம் வுலர்ந்த கொத்தமல்லி மிளகு, உப்பு, புளி, யிந்த சாறு. மிளகு, உப்பு, புளி, கருவேப்பிலை யிது முதலியதுவையல் கொடுக்க மெத்த வனுகூலமாம்.

பேதிகண்டவர்கட்கு ஜன்னிக்காக பெர்த தயில உபயோகப்படு த்த நன்றே அதுகளை மேல்பூச தடை வேண்டுவதில்லை, மின்னும் முட்டைதயிலம், கர்ப்பூரதயிலம், வொடுக்கலா, லூபியம், லினிமென்டு, அதாவது அபின் சேர்க்கையான. இங்கிலீஷ்காரரால் செய்யப்பட்ட தயிலமிதுகளை மேல் பூசலாம்.

* ரவியென்பது சூரியன், புலர்த்தியென்பது காயவேண்டும்.

இதைத்தவிர மதிராஸ்க்குள் வைத்தியர்களிடம் ஜலதோஷக்காக ஐந்தெண்ணை சேர்ந்த தயிலமிருந்து கிடைத்தாலுமே அவைகளையிட்டால் மெத்த அநுகூலத்தைக் கொடுக்கும்.

**விஷபேதியின லதிகமாகக் கண்டவர்கட்கு கியாழம்.**

நாயுருவி ஒருசெடிசமூலம்.
புளியம்பட்டை பலம் (2) க்கு ரூபாயிடை 6.
சித்திரமூலம் வேர் ஒரு ரூபாயிடை.
சிவன்வேம்புபலம் (2) க்கு ரூபாயிடை 6.
முருங்கப்பட்டைபலம் (1) க்கு ரூபாயிடை 3.
மாவுலிங்கைப்பட்டை பலம் (2) க்கு ரூபாயிடை 6.
யெருக்கலம்பூவு, பலம் (1) க்கு ரூபாயிடை 3.
தென்னம்பிஞ்சு பலம் (4) க்கு ரூபாயிடை 12.

யாவையுந் தனித்தனியே நருக்கி ஓர் பாண்டத்திற்போட்டு நாலுபடி ஜலத்தைவிட்டு ரெண்டுபடி யாகவற்றவைத்து, ஒருவேளைக்கு வீசம்படி யொழுக்கில் பச்சைப்பயறளவு கஸ்த்தூரியிட்டு கலக்கி பெரியவர்களுக்கு கொடுக்க தாகம் தீர்ப்பதுமல்லாமல், வயதியோகெதி கெட்டுபோகும்.

மறுபடியும் தாகமெடுக்கில் கஸ்த்தூரியை சேர்க்காம லடிக்கடி மூன்றுதடவை அல்லது நான்குதபா கொடுக்கலாம்.

20 - வது வயதுக்குட்பட்டவர்களுக்கு ஒரு திரும் பொழுங் கொடுக்கவும்.

10 - வயதிற்குட்பட்டவர்களுக்கு அரை திருமுந் மேல் கொடுக்கக்கூடாது.

5 - வயதிற் குட்பட்டவர்களுக்கு கால்திருமுக்குமேல் கொடுக்கலாகாது கஸ்தூரியுஞ் சேர்க்கலாகாது.

மேற்குறித்தவர்கட்கு ஒரு வெந்தியப் பிரமாணஞ் சேர்த்துக் கொள்க. கஸ்த்தூரி.

20 - வயதிற்கு மேற்பட்ட யாவர்கட்கும் ஒரு வேளைக்கி மூன்றுமல்லது ஒன்னரை கிராம் வரையில் உபயோகப்படுத்தலாம்.

## சில சமையம் விஷபேதி கண்டவர்கட்கு இரத்தங் காணில் அதற்கு மருந்து.

**அத்திக்கொழுந்து மாதளம்பிஞ்சு.**

மேல்ச்சிறுய் போக்கிய, மாமரப்பட்டையும் செல்விப்பிஞ்சும் யிவைகளை சமவெடையாய்ச்சேர்த்து வாழைப்பூச்சாற்றிலரைத்து



மூன்றுபொழுது படி சாற்றில் கொடுக்க தேரெத்தம் உடனே சொஸ்தியப்படும். வயதிற்கு தக்கபடி வுபாயமாய்க்கொடுக்கவும்.

ஜாஸ்த்தியாய்க் கொடுத்து விட்டால் மலத்தை இருகப்பண்ணும்.

5 - வயதுக்குட்பட்டோர்கட்கு ஒருசிறிய சுண்டைக்காய் பிரமாணமும்.

5 - முதல் 10-வயது வரையி லிரண்டு சுண்டைக்காயல்லது மூன்று சுண்டைக்காய் பிரமாணங் கொடுக்கலாம்.

10 - வயது முதல் 20-வயது வரையில் 3 - அல்லது 4-சுண்டைக்காய் வரையில்கொடுக்க.

20-வயதிற்கு மேற்பட்ட யாவர்கட்கும் 4-சுண்டைக்காய் முதல் 6 - சுண்டைக்காவரையில் கொடுக்க அநுகூலமாம்.

**வாழைப்பூச்சாறு.**

கால் சங்குமுதல், ஒருசங்கு வரையில், மேற்குறித்த வயதிற்குத் தக்கபடி ஓர் சிதானமாய் வைத்துக்கொள்க. இதற்கு பத்தியமோ காரசாரமாகிய சாப்பாடுகளை உபயோகப்படுத்தக் கூடாது. உலர்ந்த ஆட்டுமாம்சம் வற்றல்கூட்டலாம்.

பேதிகண்டு சௌக்கியமடைந்தவர்கட்கு, தேகபெலனுக்காக சேர்க்க வேண்டிய புலால், காய், கறி, மருமுதலிய விபரம்.

வெள்ளாட்டுக்கறி யிடி வற்றல் அல்லது செம்பிலி யிடி வற்றல் காடை, கௌதாரி, உடும்பு காட்டிப்புறா குறவைமீன் யிடி வற்றல் கெழுத்திமீன் யிடிவற்றல் விலாங்குமீன் அயிரைக்குஞ்சுமீன் விறால்மீன்கத்திரிப்பிஞ்சு முருங்கைப்பிஞ்சு அத்திப்பிஞ்சு புடலங்காய் அவரைக்காய் அரைக்கீரை வெந்தியக்கீரை வல்லாரை புளியரை பொன்னாங்காணிக்கீரை போட்வயின், ஓல்டாம், அல்லது ஜின், நெய், பால் தயிர், சீரகம், கடுகு வெந்தியம் கருகப்பிலை பச்சகொத்தமல்லி, பூண்டு, ஈரவெங்காயம், மிளகு உப்புப்புளி மஞ்சள், யிதுகள்சேர்த்து சாப்பிடுவதிலும், மொலகாகார மதிகமாய்ச் சேர்க்கலாகாது. இம்மாதிரியாக சாப்பிட்டுவருவதினால் அதிகசீக்கிரத்தில் வொடம்புதேறிவருமென்பது. அடியேனுடைய அனுபோகமாகிய கருத்து.

சாமன்ஸ்தேகியெனு மூழிக்காற்று விளக்கப்பிரகரணம் முற்றுப்பெற்றது.

கடவுள் துணை.

முன்ருவது.

## பிண்டோற்பத்தி விளக்கப்பிரகரணம்.

---

### விருத்தம்.

அண்டபிண்டநிறைந்துநின்றசோதிதானே
அவனியெல்லாம்படைத்தழித்தவருளைப்போற்றி
குண்டலஞ்சூழ்ரவியொளியின்பிரகாசத்தால்
குழவியெனப்பூவுலகில்தழ்நிதரேயும்
மண்டலம்வாழ்மானிடர்கள்மகவேற்பத்தி
வழுத்துவதற்கென்குருவின்னடியைப்போற்றி
எண்டிசைசூழ் அகத்தியனருளைப்போற்றி
இயற்றிவிட்டேனினூலைவழிலதாக.

### பரப்பிர்மனுயகமா.

சர்வாதிஷ்டான சர்வபரிபூரண நாம ரூப குண தர்ம கர்ம விகார ரஹிதாகண்ட சச்சிதானந்தனும் நித்திய நிர்க்குண நிர்விகார நிராமய நிரஞ்சன நிர்விகல்ப நிஷ்களங்க நிர்மலனும் நிர்லேபனும் நிச்சம்பந்தனும் ஆதிமத்தியாந்தரஹிதனும் அசங்கனும் அனந்தனும் அகர்த்தாவாய் அபோக்தாவாய் அசரீரியாய் அப்பிரமாணனும்,

அவஸ்தாத்திரியசாக்ஷியாய் ஸ்தூல சூக்ஷ்மகாரணசரீரமான பஞ்சகோசங்களுக்கும் விதிரிக்தனும் சுத்தனும் புண்ணிய பாவத்தினால் பரிசிக்கப்படாதவனும் பரமானந்தசொரூபியாய் விளங்கப்பட்ட பரப்பிர்மத்தினிடத்தில் நாம ரூப குணங்களான ஜெகத்துக்குவித்தாகியும்,

భిన్నాభిన్నము గాదని యుస్సంగాసెవి ప్రకృతియట్లుగుట ముసయన్ను లు అనిర్వాచ్యంబని యున్న గణించిరి సమస్తము జెల్లి మలో,

யென்கிறபிரமாணத்தின்படி. வாக்கினால் இப்படிப்பட்டதென்று வசனிக்க சாத்தியமான மூலப்பிரகிருதியென்ற அனாதியாயிருக்கிறது. அதற்கு மாயையென்றும் நிற்சத்தியென்றும் தமஸென்றும் பெயர்கள் விளங்கும். பிரமாணம்,



ఉన్నదిలేదని యూహింపగా నేర్పు లేనిదికలదని చెప్ప నేర్పు నం డంబు జడమని యూగదింపగ నేర్పు జడమజడంబని చాట నేర్పు సుఖము దుఃఖంబుగా జూపి చెప్పగ నేర్పు దుఃఖంబుసుఖమున దురిత నేర్పు నిదియని గాదని యుంపుగాననసేచుణ నదియిది గాదని యనగనేచుణ బిదపగలదియొ కలదేనిదియొ లెదు కడగియొజడంబెయొజడము జడమజడము సుఖమొసుఖము తలంపననుఖమనుఖము యదియదియొయిదియిదియని యాడనేర్పు.

இன்னும் ஒழியதனை யிருளாக்கும் யிருளதனை வொளியாக்கும் இன்பந்தன்னைக்கொடிய துன்பமாக்கும் யென்கிறபடி காலத்திரியத்திலும் யில்லாததை இருப்பதைப்போலவும் வுள்ளதை இல்லாததைப்போலவும் ஜடத்தை அஜடமாகவும் அஜடத்தை ஜடமாகவும் துக்கத்தை சுகமாகவும் சுகத்தை துக்கமாகவுஞ் செய்யக்கூடியதாயும் மேலும்

సత్తుగా దాత్మవిజ్ఞానంబు చెందపావమైబాదింపబడుటవలన నెల మిన సత్తుగా దెసజ్జుడనటంచు నజ్ఞానభూతమై దసలరుచునుకి సదసత్తు గాదు విచారింపలెనట్టి ద్రవ్యంబుగదు నిరుద్ధంబు గాన నిరవయము గాదు నిఖిలజగత్స్వరూపముచేత మిగుల నేర్పడుటవలన సారయమును గాదు దృశ్యమునుసు ప్తియందడంగిన దానసూన్యంబు గామి నెనరసుఖయాత్మకము గాదుయుక్తమ గుట నాంజనేయ మదీయ్య మాయాతమంబు

யென்னுஞ் சாஸ்திரப்படிக்கு இந்தமாயையானது காலத்திரியத்திலும் உள்ளதுமல்ல இல்லாததுமல்ல. అహంసుఖి అహందుఃఖి யென்பதே இதற்கனுபவமாம். ஆனால் சத்தென்றாலோ அப்படியுமல்ல அசத்துமல்ல சதசத்துமல்ல அவயவங்களுள்ளதுமல்ல இல்லாததுமல்ல இதை சிலர் பராசத்தியென்றுஞ் சொல்லுவார்கள். இன்னும்:—

ఆదిమధ్యాంత రహితమైనట్టి ప్రకృతి ఆదిమధ్యాంత ములుగల్గ నాదరించు.

என்கிறபடி ஆதிமத்தியாந்தங்களில்லாத யித்தமாயையானது ஆதிமத்தியாந்தங்களிருப்பதைப்போலவே தோற்றும். இப்படிக் கிருக்கும் அந்த அசாத்தியமான மாயையானது சாட்சாத் பரப்பிர்மத்துக்கு ஆதீனமாயும் வசியமாயு மிருக்கிறபடியா லதை வுபாதியாகக்கொண்டு

ధర్మసంస్థాపనార్థాయ సంభవామి యుగే యుగే

என்பதின்படி இராமகிருஷ்ணாதி யவதாரங்கள் செய்து துஷ்டநிக்கிரகஞ் சிஷ்டபரிபாலனஞ் செய்கிறாரே யன்றி

సర్వోపాధిస్తుడనై సర్వవ్యాపారముల వేసంబేయుచు తత్సర్వము నంటక వెలిగెదు సర్వాత్ముడనేను జీవ్నిసజ్జనతిలకా బొహాదిక నామంబులు రూపంబులులెవ్వ నాకురూఢిగ సకలవ్యాపారముగను సర్వవ్యాపకుడ చిన్మయుడనేను వాయాతసూజా.

என்கிற வேதப்பிரமாணப்படிக்கி.

యత్తదద్రేశ్య మగ్రాహ్య మగోత్ర మవర్ణ మచక్షుశ్రోత్రం తదపాణిపాదం నిత్యం విభుం సర్వగతం సుసూక్ష్మం తదవ్యయం యద్భూతయోనిం పరిపశ్యంతి ధీరాః. నీవారశూకవత్తన్వీ పీతాభాస్వత్యణూపమా తస్యాః శిఖాయా మధ్యే పరమాత్మా వ్యవస్థితః నీలతోయదమధ్యస్థ విద్యుల్లేఖేవ భాస్వరా

என்றும் மகாகவுரவமான வேதப் பிரமாணங்களின்படி அந்தபரப்பிர்ம்மமானது முன்சொன்னபடிக்கி நிற்குணனாகயிருந்து கொண்டு.

మోదతే భగవాన్ భూతైః బాలక్రీడనకైరివా

என்றுசொல்லும் விதியின்படி கொழந்தைகளுக்கு யாதொருவிசேஷட்டங்களில்லாமலே விளையாடவேணுமென்கிற வெண்ணத்துடன் மண்ணினால் வீடுகளைப்போலகட்டி விளையாடிக்கொண்டிருந்து போகும்போது அழித்துவிட்டு போவதைப்போல பகவானும்:—

తే॥ గీ॥ అమలసత్వప్రధాన మాయాసమన్వితేశ్వరుడనగునేను సకృష్టిశ్చేతబూనివీక్షించితి తమఃప్రధానమయా నిఖిలచేతనర్థసహాయముగను.

யென்கிற ஆதாரப்படிக்கி சுத்த சத்துவப் பிரதானமாயோபாதிகளானஈஸ்வரன் ஜகத்தை சிருஷ்டிக்கவேணுமென்கிற சங்கற்பத்துடன் தமோகுணப் பிரதானமான மாயையை கடாக்ஷித்தமாத்திரத்தில் அந்தமாயையைபின்று.

உபாதான காரணமான மாயையுடன் கூடியபிர்மசக்தியால் தமோகுண பிரதானமான ஆகாயம்பிறந்தது அதிலிட்டத்திருந்து



வாயுபிறந்தது வாயுவினின்று அக்கினிபிறந்தது அதினிடத்திலிருந்து ஜலமும் ஜலத்திலிருந்து பிரிதிவு பிறந்தது (ஐந்துபூதத்தையும் பதாக்கி அவை பாதிகள் நான்காக்கி மற்ற கல்பாதி விட்டு நாலுடன் நாலுங்கூட்ட வந்தன) நான்காம்தால தனுவுண்ட புவனபோகமென்கிறபடிக்கி பஞ்சிகர்ணபத்ததியால் ஒன்றோடொன்று மேளனஞ்செய்ய ஸ்தூலதேகமுதலான அதல, விதல, சுதல, ரசாதல, மகாதல, தலாதல, பாதாள, பூலோக, புவர்லோக, சுவர்லோக, மகாலோக, தபோலோக, ஜனலோக, சத்தியலோக, யெனபதி, னன்குபுவனங்களும் சகலபிரபஞ்சமும் பிறந்தது மேல்சொன்ன பஞ்சபூதங்களும் சப்த ஸ்பரிசரூப ரசகந்தங்களும் அபஞ்சிகிருத சூட்சமபூதங்களென்றும் பஞ்சதன்மாத்திரைகளென்றும் சொல்லுவார்கள் மேற்சொன்ன பஞ்சபூதங்கள்.

வியஷ்டி, சமஷ்டி, பேதங்களால் தமோகுணத்தில் பிறந்தபூதங்கள் ஐந்தும் சத்வ ரஜோகுணங்களாலே சத்வசூட்சம பூதங்களென்று யிரண்டுவிதங்களாயிற்று பின்னும் அதுகள் வியஷ்டி, சமஷ்டி, பேதங்களாலே சத்வ சமஷ்டி சூக்ஷ்மபூதங்களென்றுஞ் சத்வ வியஷ்டி சூக்ஷ்ம பூதங்களென்றும் ரஜோவியஷ்டி சூக்ஷ்ம பூதங்களென்றும், ரஜஸ்சமஷ்டி சூக்ஷ்மபூதங்களென்றும் நாலுவிதங்களாயிருக்கும் யிவைகளில் சத்வ வியஷ்டி சூக்ஷ்மபூதங்களால் சுரோத்ரத்வக்குசட்சு, ஜிக்வை, ஆக்கிராணமும் மீதியாயிருக்கப்பட்ட சத்வ ரஜஸ்சமஷ்டியினால் மனஸ்புத்தி சித்த ஆங்காரங்கள்பிறந்தது. மேற்சொன்ன ஆகாசாதி பஞ்சபூதங்களினுடைய ரஜோம்சத்தினால் வாக்குபாணிபாயுரு, பாத, வுபஸ்தங்கள்பிறந்தது. மீதியாயிருக்கப்பட்ட ரஜோகுணத்தின் சமஷ்டி பஞ்சபூதங்களால் பிராண, அபான, உதான, வியான, சமான, மென்றும் பஞ்சபிராணன்களுண்டாயிற்று யிப்படிப்பட்ட ஸ்தூல தேகமானது கர்மானுசாரமாய் ஆண்பெண்களென்று யிரண்டுவிதங்களாகயிருக்கும். யிவ்விதமாய் தவக்கு, மாம்ஸம், உதிரம் மச்சை நரம்புகளென்று சொல்லப்பட்ட ஆறுகவசங்களுடன் கூடின ஸ்தூலதேகத்தில் எழுவத்திரூயிரம் நரம்புகளுண்டு. இவைகளில் இடா, பிங்களை சுஷ்மனா யென்பது முக்கியமான நாடிகள் சுஷ்மனை யென்பது மோக்ஷமார்க்கமென்று சொல்லப் படுவதுமன்றி விஸ்வோதரியென்னும் நாடியானது அன்னமுதலானவுணவுகளைபட்சிக்க செய்யும் பயஸ்வினி யென்னும் நாடியானது ஜல தாகங்களை வுண்டுசெய்யு

ஜலபானம் முதலானதுகளை செய்விக்கும். ரக்தாக்கிய நாடியானது சுக்கிலத்தையும் சினீ வாலி நாடியானது மூத்திரத்தையும் குகூ நாடியானது மலத்தையும் வெளியில் போகச்செய்யும். அல்லாமல் சங்கினி தாமனி யென்னும் நாடிகளானது சகலவுணவுகளையும் அமிர்தமாக்குவது மன்றி வியான வாயுவானது அந்த அமுர்தத்தை சரீர முழுக்க வியாபிக்கச்செய்து அப்படிச்செய்வதினால் நல்ல ரத்தமுண்டாகி அந்த ரக்தத்தினால் சுக்கிலமுண்டாகிறது. அந்தசுக்கிலமானது சுரோணிதத்தில் ரக்தாக்கிய நாடியின் வழியாகசம்போக காலத்தில் ரஜஸ்வலையான 16 - நாளைக்குள் யோனித்துவாரவழியில்பாயும் போது ஒரு அணுப்பிரமாணம் கெற்பக்குழியில் பாய்ந்து அருகம்புல் நுனிபனிநீர் ஜலமென தங்கி இரண்டெழுத்துகளாலே ஆபிமாந்திரித்து பிண்டமாகி பெருமளவில் சுக்கிலம் பெருகிநிற்குமாகின் ஆணாகவும் சுரோணிதம் பெருகிநிற்குமாகில் பெண்ணாகவும் இந்த சுக்கில சுரோணித மிரண்டு மோரிடையாக நேகித்து பெருகிநிற்குமாயின் இரட்டைப்பிள்ளையாம். சுக்கிலமானது நீர்த்தாரைவழி யாகப்பெருகுமாகில் ஊமைப்பிள்ளையாம் மலத்துவாரவழியில் பெருகுமாகின் செவிட்டுப் பிள்ளையாம் யிவ்வண்ணமாகவே கெற்ப வுற்பத்தி கொள்ளுங்காலையில் இருதிரவற்கும் இரதக்கலை இரசக்கலையென இரண்டுகலைகளுண்டு இதுவுமன்றி எரிக்கலையிலே பிராணேந்திரியம்பாயில் இடதுபாகங் கொண்டு வால்நீண்டகிருமி யென்னப்பட்டப் புழுச்சென்றுகமனீகரஞ்செய்யாமல் பிராண வாயுவை ஆத்மாமுன்னிட்டுகொண்டு போகுமளவில் இது மகிதமென்று மிரண்டக்ஷரமும் பின்தொடர்ந்து சென்று அச்சுக்குள்ளச்சாக அவ்வென்னும் மூலாட்சரத்தில் அமைத்து புகுதவிட்டு கிழிச்சிலை வாசல் போலேஓடி அங்கிஷாவென்னும் மந்திரக்கயற்றினாலேசுருக்கிக்கட்டி நம்மென்றுஞ் சாக்கிரத்தினால் முத்திரையிட்டு தான் எகியாய்நின்று இக்கருவை வளர்க்கும்படியாய் கற்பவுற்பனத்தை உதானவாயுவான மூலவாய்வுவளர்க்கும். இவ்விதமான மனிதஜனனமற்ற 83 - லக்ஷம் ஜென்மங்களைப் பார்க்கிலும் மகாவிசேஷமான இந்த நற்ஜென்மம் ஆகையால் இப்படிப்பட்ட அருமையாகிய இத்தஜன்மத்தை வியர்த்தமாக்கிவிட்டால் மறுபடியு மிப்படிப்பட்டமோக்ஷசாதகமான இந்தஜன்ம முண்டாகவெத்தனையோ கோடிகாலஞ் செல்லுமாகையால்:





என்பதின்படி இந்த ஜன்மத்தில்தானே மோக்ஷ சத்கெதிக்காளாகவேண்டும். அப்படிப் பெறுவதற்கு சாதனமின்றி யொன்றை சாதிப்பாருலகிலில்லை, யென்கிறபடி தேகத்தை சாதனமாகக் கொண்டு அஷ்டாங்க யோகமுதலான சத்கிரியைகள் செய்து ஜன்ம நிகதனாகவேண்டுமாகையால், விவேகியானபேர்கள் தங்களுடைய வியாபாரங்களைப்பார்த்து சாஸ்திரங்களிப்படிச் சொல்லுகிறது. இவர்களுடைய வியாபாரமிப்படி யிருக்கிறதென்று பிறமிக்கவேண்டியதில்லை, அவரவர்களின் கர்மானுபவத்திற் கேடாக நானாவித வியாபாரத்தோடு கூடியிருந்தாலும் ஞானமும் ஞானத்துக்குப் பலமான முக்தியுஞ் சமானமென்று வேதாந்தசாஸ்திர சித்தாந்தமாகையால், ஸ்ரீ சற்குரு சன்னிதானத்தில் சந்தேகவிபரீதமறவிசாரித்தறிந்தவனே ஜீவன்முக்தன். அவனே பரமுக்தன் அவனே பிறம்ம சொரூபமென்று சொல்லப்படும். ஏனென்றால் காணப்பட்டதெல்லாம் அழிந்துபோகிறபடியினால் சர்வத்திற்கும் ஆதிகாரணமானதிற்குணபரப்பிறம்மவஸ்துவைமாத்திரம் பிறம்மமென்றுசொல்லவேண்டியதென்று சகல சுருதிஸ்மிருதி யிதிகாசபுராணகமாதிகளிற்சொல்லப்படுகின்றது. இதிற் சம்சயமில்லை சித்தம். பரப்பிறம்மமேதுணை.

ஜெகதீசன் திருவடிகளேசரணம்.

## சரீரசூத்திரம்.

சரீரமாஞ் சூத்திரத்தை தமிழினாற் சாத்தவேண்டி
சீரிசை வடநூல்தன்னைத் தெரிந்ததிலாய்ந்தெடுத்து
பாரினில் மானிடர்க்கு பரவுபகாரமாக
நேர்மையாய்ச் செப்புகின்றேன் நிட்சயமாகத்தானே. 1
ஆணுவம் காமமாய்கை யதுவந்தே பெண்ணுமாணும்
ஆணுவமாதிஆசை யடுத்திடுந் தேகமாகும்
காணவேயீராதாரக் கலையது சடமேயென்னும்
பூணவேமுனிவர்தாணும் புகன்றனர் உரைத்ததாமே. 2

## கருப்போற்பத்தி.

சென்னியில் வைத்தே திருனந்திதாளினை
மன்னியகாயம் வந்தவகையாம்
கன்னிவகுத்த கருப்பத் திருமந்திரம்
உன்னி யுரைத்தே னெருநூற்றிருபதே. 3

உடலுற்றவாறு முயிருற்றவாறும்
மடையுற்றவொன்பது வாயிலினறும்
இடமுற்றதத்துவ சிவபுலன்களுங்
கட்டுற்றநீர்போற் கண்டகருவிதே. 4

கருவையொழித்தவர் கண்டனன் மூவேழும்
புருடனுடலிற் பொழிந்தது மற்றொன்றுந்
தெரிவை கருக்குழி தேயு புகுந்தே
உருவமிரண்டா யோடிவிழுந்ததே. 5

விழுந்தலிங்கம் விரிந்தயோனி
ஒழிந்தமுதலைந் துயிரோடே றித்
தெளிந்தப்புத் தேற்றுங்குணமும்
பொழிந்து புகுந்தது புணர்கின்றபோதே. 6

போகின்றதெய்வம் புகுகின்றபதெய்வம்
ஆகின்ற மூர்த்திக ளொன்பது வாயிலும்
நாகனுமெட்டொன் றிரவியும்தியும்
பாகன்விடாவிடிற் பட்டர்ந்தலாமே. 7

எறவெதிர்க்கிலி னலியன்றனாகும்
நேரொக்கவாகி னிகர்போதந்தானாகும்
மாறவெதிர்க்கின் மறைபவன்றனாகும்
பேரொத்தமைந்தனும் பேரரசாகுமே. 8

ஆண்மிகினாணும் பெண்மிகிற்பெண்ணும்
பூணுமிரண்டொன்றிப் பொரிந்தில்லியாகுந்
தாண்மிகவாயிற் றாணிமுழுதாளும்
பாண்மைமிகுந்திடிற் பாய்ந்ததுமில்லையே. 9

பாய்ந்ததுமுன்னோர்தோடிற் பாராயுளநூறும்
பாய்ந்துபின்னைத்தோடிற்பார் வயதைம்பதாம்
பாய்ந்திடும்வாயுப் பகுத்தறிந்திவ்வகைப்
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலுமாமே. 10

அங்கவீனப்படுதலின் காரணம்.

பாய்கின்ற வாயுக் குறுகிற் குறளாகும்
பாய்கின்றவாயு வலியின் முடமாகும்
பாய்கின்றவாயு நெப்படிற் கூனதும்
பாய்கின்றவாயு மாதாக்கிலை பார்க்கிலே. 11



மந்தன் - ஊமை - குருடனுதம்பிபாம்.

மாதாவுதர மலமிகின் மந்தனும்
மாதாவுதரஞ் சலமிகினூமையாம்
மாதாவுதிரத்திரண்டொக்கிற் கண்ணில்லை
மாதாவுதிரத்தில் வந்தகுழவிக்கே. 12

ஆண் - பெண் - அலி - இரட்டைப்பேறு.

குழவியுமாணாம் வலத்தாதேயாகில்
குழவியும்பெண்ணா மிடத்தாதுவாகில்
குழவியுமிரண்டா மபானனெதிர்க்கில்
குழவியுமலியாங் கொண்டகாலொக்கிலே. 13

கொண்டநல்வாயு விருவர்க்குமொன்றிடில்
கொண்டகுழவியுங் கோமளமாய்விடுங்
கொண்டவிவ்வாயுக் குறிப்பறிந்திவ்வகை
கொண்டதுமில்லை கோலமுன்னதே. 14

பிண்டோற்பத்தி.

கேளப்பா மனமானவாயுகூடி கெடியான சித்தமாகாயம்பொ ங்கி, வேளப்பா ஆங்காரசிகாரமின்றி மேவுதற்குப்பெண்மேலே மோகமாகும், நாளப்பா ஐந்துக்கு பலமேதென்றால் நலம்பெற வே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, தாளப்பா மனதோடே வியா னன்கூடுந் தனியான நாதத்திலபானன்தானே. 15

தானென்ற விந்துவினிற் சமானங்கூடுந் தனியான சித்தத்தில் வியானன்கூடுங், கானென்ற ஆங்காரங் கற்பிப்போடே கலந்துவி ற்கும் உதானப்பாகண்டுகொள்ளு, வேனென்றபத்தும் வொன்றாய் மனதுங்கூடி மேவியவன் கலந்துவந்து விழுகும்போது, மானென்ற மௌனபரவசமேயாவன் மருவுகின்ற பெண்ணுக்கும் முறைதான் கேளே. 16

கருத்தரிக்கும்விதம்,

முறையான பெண்ணுணும் மௌனமுற்றால் மோசமில்லை கருவங்கே தரிக்கும்பாரு, நிறையான வலத்தோடி லாணேயாகும் நேராக இடத்தோடிற் பெண்ணேயாகும், உறையான கருப்பை யில் சுக்கிலம்பாய உத்தமனே சுரோணிதந்தா னுறைந்துகொள் ளும், கறையாகப்பாய்ந்தவெளி தமருபோலக் கறந்கொடிக்தாய்ப் போற்றிரண்டு சிரசுமாமே. 17

ஆமப்பா ரிசோடே கையுங்காலும் ஆப்புடனே தத்துவங்கள்
சாம்புலூளை, ஓமப்பா அஸ்திமுதலுரோமத்தோடு உத்தமனே பதி
னொருவாசலுமேகாலும், காமப்பால்விழுந்தவழி சிசினாலே கைமு
றையாய்த் தாயுண்ட அன்னஞ்செல்லும், சோமப்பா உடுமையத்
தொப்புளாலே சென்றதெல்லா மலமாகக் கழியுந்தானே. 18

தானென்ற பதினொன்றுஞ் சடந்தான்முன்னே சாதகமாவெடுத்
துவரும் மலவெட்வாறு, ஊனென்ற வென்னுக்கு மனதுவேறாய்
உருக்கமுமில்லா மௌனமுண்ணாப் பாவத்தாலே, தானென்ற மல
டாவள் புருஷனுக்குங் கைமுறையாயிப்படிதான் கண்டுகொள்ளு
தேனென்ற மொழியாட்கு பானுர்சொன்னார் ஜெகமெலாம் இப்
படியே ஜெனித்தவாறே. 19

## கற்ப கருவுற்பத்தி விபாம்.

அதாவது மாதர்கள்* ருதுஸ்வலையானதினம்முதல் 16 - நாள்
வரையில் கருக்குழிதாமரைக்கமலம்போல மலர்ந்திருக்குமாகை
யால் பதினாறுநாளைக்குள் புணர்ச்சிக்குரிய காலமாயிருந்தபோதி
லும், அவற்றுள் 8 - நாள் புணர்ச்சியை விலக்கவேண்டும். மற்ற
8 - நாள் புணர்ச்சிக்குரியகாலம். 16 - நாளுக்குமேற்பட்டு மற்ற
பதினாலுநாளும் நாயகி விரும்பினாலன்றி நாயகன் வலிதில் புண
ரலாகாது. அப்படி புணரில் கற்பவுற்பத்தி யுண்டாகமாட்டாது.
இதுவன்றி முற்கூறிய 8 - நாள் புணர்ச்சிகூடாதென்பது யாதெ
னில் முதல் ருதுஸ்வலையானதினத்திற் புணரின் நாயகன் சண்
டாளத்துவ தோஷத்தையுற்று நாசத்தையுமடைவன். இரண்டா
நாள் புருஷனுக்குப் பிரமஹத்திதோஷமும் நாயகிக்கு நாசமுண்டாம்.
மூன்றாம்நாள் நாயகனுக்குக் கிராமசண்டாளத்துவ தோஷமும்
கற்பத்துக்கு நாசமும் பொருந்தும். நாலாநாள் சுத்தையாயிருக்கி
னும் புணர்ச்சியினால் கற்பந்தரிக்கின் அது அற்பாயுசாய்ப்போ
கும். பூர்ணாயுசாயிருக்கின் தரித்திரத்தையும் பிதாவுக்கு
நாசத்தையுமுண்டாக்கும். பதினொன்றாவது பதின்மூன்றாவது நாள்
களிற் பிறக்கும் பெண் குலத்துக்கீனமான நடத்தையுள்ளவளா
யும் துஷ்டையாயுமிருப்பள். அமாவாசை அல்லது பூரணையில்
புணர்ச்சியைவிரும்பின் ரோகம்பல எய்தும்; மற்ற வெட்டுநாட்க
ளுக்குள் இரட்டித்தநாளிற்புணரின் ஆணாகவும் ஒற்றைப்பட்ட
நாளிற் புணரின் பெண்ணாகவும் கர்ப்பந்தரிக்கும். தவிர கர்ப்பந்

* ருதுஸ்வலையென்பது தீட்டுக்கு தூரமானவள்.



தரித்த முதல்தினம்முதல் 7 - நாள்வரை தண்ணீரும் வெண்ணெயை
ப்போலக் கூடியுங் கூடாமலும் பின்று 14 - நாளானபோது
சுக்கில சுரோணிதமிரண்டு மொருமைப்பட்டு மெழுகுபதமாய்த்
திரண்டு 21 - நாள் அண்டம்போலுருண்டு முதல்மாதத்தில் மாம்
சமும் இரத்தமுமுண்டாகி இரண்டாமாதத்தில் தலை கழுத்து பிடரி
தோளுண்டாவதைப்போல ஓரடையாளமும் மூன்றாம்மாதத்தில்
உடல், விரல், அரை, கால், சிரசு முருவாகிறதைப்போலத் தோற்
றுதலும் நாலாமாதத்தில் மூக்கும் ஐந்தாமாதத்தில் செவி வாய்
நாக்கு முகமுதலியதுகளுண்டாகி ஆறாம்மாதத்தில் நகம் பல்லீறு
முதலியதுகளுண்டாகின்றன. ஏழாம்மாதத்தில் தலைமயிர் நரம்பு
நாடிகளமையப்பெறுவதுமன்றி குடல்கள் தொப்புள் பரந்தகால்க
ளும் கால்களுமுண்டாகுவதும், எட்டாமாதத்தில் தாய் புசிக்கப்ப
ட்ட அன்னசாரமுதலிய வுணவுகளின் சாரம் பிண்டத்தின் உச்சி
வழியாய் இறங்கி தொப்புளின்வழியாய் மலஜலங்கழிப்பதும் நா
ளுக்குநாள் உடல் பெரிதுவருதலும் ஒன்பதாமாதத்தில் ஆத்மஞா
னமுமுண்டாகி தன்னை இப்படிப்பட்ட கிலிகளோடன்கூடிய கர்ப
பாசத்திலிருந்து ஜடராக்கினியின் ஹிம்சைப்படுத்துவதினின்று
விடுத்தருளச் செய்யவேண்டுமென்றும், ஈஸ்வரனைநோக்கி
ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருந்து பத்தாமாதத்தில் ஈஸ்வ
ராதீனமாய் தலைகீழாய்திரும்பி உல்லாசமில்லாசங்களின்றி முன்
னிருந்த ஆத்மஞானத்தைப் போக்கடித்தவனாய் ரத்தத்தில்புர
ண்ட தேகத்துடன் மலத்திலிருக்கும் புழுவைப்போல பூமியில்
விழுந்து யாதொருஞானமில்லாதவனாய்சனனோதனஞ்செய்துகொ
ண்டு பிறர்களால்போஷிக்கப்பட்டவனாய் அபிமதாரங்களைச் சொல்
லப்படாதவனாய் மலமூத்திராதிகளை கிரமப்படுத்த சக்தியில்லா
தவனாய் நாளுக்குநாள் விர்த்தியடைவன். இப்படி பரப்பிரம்ம
சிருஷ்டிப்பினாலே கர்ப்பந்தரித்து வாழ்பெறும் அப்பேர்ப்பட்ட
பிராணவாயு வலப்புறமோடில் ஆண்பிள்ளையாம். இடப்புற
மோடில் பெண்பிள்ளையாம். வாயுவிரண்டும் வேகோபித்தோடில்
அலியாம். அதாவது பேடி அல்லது குறியற்றது. அந்தவேளை
யிலே நடந்த வாயுவு பேதியாமல் ஐந்துநாழிகையளவும் நடந்தி
யங்குமாகில் அந்தப்பிள்ளைக்குவயது நூறும் அந்த அளவு குறையு
மாகில் பிள்ளைக்குவயது குறையும். வாயுவு நிரம்பியோடில் அவை
யவங்களுண்டாகும். அவ்வாயுவு சிதறியோடில் அவயவங்கள்குறை
யும் முதன்மையில் கெறபாசனத்தில் போகிக்கும்பொழுது மூன்

றகுணத்திலே ஒன்றுவது மாதாபிதாக்களுக்குண்டானால் மக்களுக்குமுண்டாகும். அந்தவேளையில் வாயுவு இன்றியங்குமாகில் நிலத்தின் நிறமே பிள்ளைகளுக்கு நிறமாகும் மாதாபிதாக்களினுடைய மனமும் குணமும் வாயுவுமொன்றுகுமாகில் அந்தப்பிள்ளைக்கு மிகவும் அறிவுண்டாம். மிதுவன்றி மாதாபிதாக்களுக்கு அந்தமூன்றுவிதமுஞ் சிதறில் பிள்ளைபிரித்துப்போம். கர்ப்பாசனத்தைவிட்டு கெற்பங்கவழியும் போகிக்கிறும் அக்கினி மிகுக்கிலும் வாயுவு கலங்கிலும் மலமாம். ஸ்திரீபுருஷாளிருவருக்கும் மூலாக்கினி அதிகரித்தாலத்தகர்ப்பஞ் சுவறிப்போம். இப்படி காம்மானுபவத்திற்கோக எடுக்கப்பட்ட சரீரத்தில் முன்சொன்ன வழியே.

அருந்தின அன்னகாரமானது முப்பதுநாழிகையில் வெங்குற்றதெனில் மல ஜலம் இரத்தமாகிய மூன்று கூறாகும். இதில் இரப்பதல் அறுபதினாழிகையில் மல ஜலமென இரண்டுகூறாகழிந்துபோம். மற்ற ஒருகூறாகிய இரத்தமானது சரீரத்தில் தங்கும் அந்த இரத்தமானது யேழிலொருபங்கு இந்திரியமாம். மற்றபங்குகளோவெனில், தோல், உரோமம், சதை, சுற்பம், மேதை, அஸ்தி, கும்பி, மூளை, சுக்கிலம், இப்படிகுடல், நரம்பு முதலியவைகளுக்கு முறையே ௭௨ நாழிகைவீதம் பரவியிருக்கும்.

இனி இந்த சரீரத்திலிருவினைக் கதவுகூட்டி மூலத்தண்டாகிய கெடுங்கயிற்றை முகட்டுவளையாகச்சேர்த்து பழுவெலும்பாகிய வரிசையிட்டு நரம்பாகிய யாக்கையாலேகட்டி சுக்கிலமாகிய ஜலத்தாலே மண்கூட்டிச்சுவரேற்றி ரோமமாகிய கத்தையாலே மேய்த்து எடுக்கப்பட்ட வீட்டுக்கு நவத்துவாரமென்னும் வாசலிட்டு அச்சமாகிய கதவுகளிட்டு பல்லாகிய தாள்பூட்டி நாவாகிய ஓங்காரம்பாச்சிப் பண்டமாகிய பஞ்சேந்திரியங்களு முடைத்தாயிருக்கும்.

இந்தசரீரத்தில் பதினாறுகதவுபூட்டிய வீணைத்தண்டெம் மொழியென்னு மூச்சாண் மெலும்பும் முச்சாண் சதையும் அஞ்சுருவும் ஆறுதெருவும் ஏழுகட்டும் எட்டுத்தூணும் நாலுஜாண்பருமனும் எட்டுஜாண்நீளமும் முப்பத்திரண்டு மூழக்கூடுமிருக்கும்.

இது மூலாதாரத்தைத்தொட்டு ஆக்ஞையளவும் பெருநரம்புகள் - ௧௧000 சிறுநரம்புகள் - ௧௮000 கையிலுங் காலிலும் பெருநரம்பு - ௭000 சிறுநரம்பு - ௧௨000 நாபிதானத்தில் பெரு



நரம்பு - ௧000 சிறுநரம்பு - ௨000 நவத்துவாரத்திற்கும் வாசல் ௯-க்கும் பெருநரம்பு - ௧௫00 சிறுநரம்பு - ௬௫00 முடியில் பெருநரம்பு - ௩000 சிறுநரம்பு - ௯000 எலும்பிலுங் குடலிலும் சிறுநரம்பு - ௭000 ஆகநரம்பு நாடி - ௭௨000. இனிகால்களிலும் கைகளிலும் சந்துப்பொருதல் ௯௮ - கழுத்திற்குக்கீழ்ச்சந்து - ௮௯ கழுத்துக்குமேற்சந்து - ௮௬ ஆகசந்துபொருதல் - ௬௬௭ இனி நசியில் ஜலம், பலம் - ௯௧ எலும்பில் ஜலம், பலம் - ௭ மாம்சத்தில் ஜலம் பலம் - ௨௧ ஆகஜலம் பலம் ௯௯.

காலிலும் கையிலும் எலும்புகள் - ௧௯௦ மூலாதாரத்தைத்தொட்டு ஆக்ஞையளவும் முழியெலும்பு - ௬௦ கழுத்துக்குமேல் பொடியெலும்பு - ௬௦௦ இருபக்கத்திலும் விலாப்புகள் - ௨௦ ஆகஎலும்புகள் - ௫௪௦ இனிசரீரத்தில் ௩½ - கோடி ரோமத்துவாரங்களும் நாளொன்றுக்கு - ௨௧௬௦௦ - சுவாசமும் ௯௬ - தத்துவமும் ௬௯௦ - பலம் மாம்சமும் உழக்குபித்தமும் ஆழாக்குச்சேத்துமமுங்கூடி சரீரத்திலே நாளொன்றுக்கு நடக்கும் பிராணவாயுவு ௧௨ - விரல் பிரமாணம் புறப்பட்டு நாலுவிரல் பிரமாணங் கழிந்துபோய் எட்டு அங்குலம் உடம்பூடுருவி சப்தததாதுகளை வளர்க்கும்.

## சரீரத்தினளவு பிரமாணத்திகளின் விபரம்.

இந்தசரீரமானது அவரவர்கள்கையினால் ௮ - சாண்நீளமும் ௪ - சாண்பருமனும் அல்லது ௯௬ - விரற்கடை பிரமாணமுள்ளது. இதற்குள் ௯௬ - தத்துவங்களடங்கி யிருக்கின்றன. அவையாதெனில்,

வாசல் - ௯ பொறி - ௧௦ புலன் - ௧௦ ஆகாசம் - ௫ மண்டலம் - ௩ நாடி - ௧௦ வாயு - ௧௦ தாது - ௭ இராகம் - ௮ கோசம் - ௫ கரணம் - ௪ அவத்தை - ௫ குணம் - ௩ மலம் - ௩ வியாதி - ௩ ஆக - ௯௬. இதற்கு விபரம் செவி - ௨ கண் - ௨ நாசிகம் - ௨ வாய் - ௧ குய்யம் பெண்குறி அல்லது ஆண்குறி - ௧ குதம் அல்லது அபானவாயு - ௧ ஆகவாசல்கள் - ௯ சுரோத்திரம் - ௧ தொக்கு - ௧ சட்சு - ௧ சிங்குவை - ௧ ஆக்ராணம் - ௧ ஆகபொறிகள், ௫.

## இவைகளின்வியற்கையாவன.

சுரோத்திரமென்பது - செவி. இது ஆகாசத்தினிடமாய்நின்று சத்தத்தையறியும்.

தொக்குவென்பது-உடம்பு, இதுவாயுவினிடமாய்நின்று பரிசத்தையறியும்.

சட்சுவென்பது-கண். இது தேயுவினிடமாய் நின்று ரூபத்தையறியும்.

சிக்குவையென்பது-நாக்கு. இது அப்புவினிடமாய் நின்று ரசத்தையறியும்.

ஆக்ராணமென்பது - மூக்கு. இது பிருதிவியினிடமாகநின்று கந்தத்தையறியும்.

இவைகளை ஞானேந்திரிய மென்னப்படும்.

## கன்மேந்திரியமாவன.

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம், ஆக-ரு.

இவைகள் முறையே-வசனம். கமனம், தானம், விசற்கம், ஆனந்தம் இவைகளாம்.

ஆகாசத்தினிடமாகநின்று வசனிப்பது-வாக்கு. வாயுவினிடமாகநின்று இடல் ஏற்றலாதிது-பாணி. தேயுவினிடமாக நின்றுகமனிப்பது - பாதம். அப்புவினிடமாகநின்று ஜலமலாதிகளைக் கழிப்பது பாயுரு பிருதிவினிடமாகநின்று ஆனந்திப்பது - உபஸ்தம்.

இவைகள் ஐந்துங் கன்மேந்திரியங்களாம்.

## தன்மாத்திரைகளாவன.

சத்த, பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆக-ரு.

சத்தமானது-ஆகாசத்திலுஞ், செவியிலுமொடுங்கும்.

பரிசம்-வாயுவிலும், உடம்பிலு மொடுங்கும்.

ரூபம்-தேயுவிலும், கண்ணிலு மொடுங்கும்.

ரசம்-நீரிலும், நாவிலு மொடுங்கும்.

கந்தம்-பிருதிவியிலும், மூக்கிலு மொடுங்கும்.

வசனம்-வாக்கிலும், ஆகாசத்திலு மொடுங்கும்.

கமனம்-வாயுவிலும், காலிலும் மொடுங்கும்.

தானம்-தேயுவிலும், கையிலு மொடுங்கும்.

விசர்க்கம்-அப்புவிலும், மூகத்திலுமொடுங்கும்.

ஆனந்தம்-பிருதிவியிலும், குய்யத்திலு மொடுங்கும்.

ஆகமொத்தம் ௧௦-க்கும் புலன்கள் ௧௦-க்கும் விபரமிதுவாம்.



## தேகக்கட்டளை விபரம்.

பிருதிவி-மண். அப்பு - ஜலம். தேயுவு-அக்கினி. வாயுவு-காற்று. ஆகாயம்-வெளி. என்று சொல்லிய பஞ்சபூதங்கள் சரீரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.

வாதம் வாயுவின்றன்மையை யொத்தும் பித்தம் தேயுவின்றன்மையையொத்தும், சிலேத்மம் அப்புவின்றன்மை யொத்துமாயிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலஞ்சேரும்போது வாத பித்த சிலேத்மங்களில் எது அதிகரித்திருக்கிறதோ அது சிசுவிற்குப்பற்றி வாததேகம் பித்ததேகம் சிலேத்மதேகமென மூன்றுவகைத்தேகக்கட்டளை யுண்டாயிருக்கின்றன.

இதுவன்றி நாழிகையொன்றுக்கு ௩௬௦ - சுவாசமாக நாளொன்றுக்கு உ௧௬௦௦ - சுவாசமும் இரேசக பூரக கும்பகமாய், நாடிமூன்றும் இடைகலைபிங்கலை-சுழிமுனையாகிய வாத, பித்த, சிலேஷ்மமென்பவைகளை இடைகலை ௧௬ - அங்குலப்பிரமாணமோடும் இதுவே வாதநாடிமாத்திரை ஒன்று: பிங்கலை ௧௨-அங்குலப்பிரமாணமோடும் இதுவேபித்தநாடி மாத்திரை அரை: சுழிமுனையென்பது இரண்டு நாசியிலும் உபாயமாகப்பகுந்தோடும். அக்கினி ஆவியென்பபடி யிதுவே சிலேத்மநாடி மாத்திரை கால்: இவ்விதமாக நாடியோடிற்றேகத்திற் பிணியில்லை.

## அந்தக்கரணங்களாவன.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆ-ச. இவைகளில் மனம் நினைக்கும், புத்தி நிச்சயிக்கும் அகங்காரங்கொண்டெழுப்பும் சித்தம்மூன்றுக்கும் காரணமாயிருக்குமென்றறிக.

## இராகங்களாவன.

காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம் இடும்பை, ஆங்காரம் ஆக - அ. இவைகளில் காமமாவது ஆசை, குரோதமாவது கோபம், லோபமாவது உள்ளதை யொளித்தல் மோஹமாவது தானல்லாதார்... மரித்தால் தான்மரித்தாற்போலிருக்கை, மதமாவது கொவமுற்று தானதர்ம பரோபகாரங்களை விலக்குதல்; மாச்சர்யமாவது ஒன்றைக்கண்டு மகிழ்தல், இடும்பையாவது தானே சர்வாதிகாரி என்று நினைத்து யாவரையும் இகழ்தல்; ஆங்காரமாவது தன்குற்றங்களை யறியாமல் பிறர்சொல்லைக்கேட்டு கோபித்தல் : இவை எட்டும் இராகங்களுக்குரிய விலக்ஷணம்.

### மண்டலங்களாவன.

அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம், ஆக ௩. இதில் அக்கினிமண்டலமானது மூலாதாரத்திற்கு இருவிரற்கடைக்கு மேலிருக்கின்றது.

ஆதித்தமண்டலம் உந்திக்கு நாலு விரற்கடைக்கு மேலிருக்கின்றது.

சந்திரமண்டலம் கோடி சந்திரசூரியர்களுதயமானது போல சிரத்தினடுவில் நிலையாயிருக்கும். இதை அமுர்தகலையென்று சொல்வதுமுண்டு. அமுர்தம் மேல்நோக்கி அக்கினி கீழ்நோக்கி சரியாயிருக்கும். இதற்குநடுவில் பராசக்தி எழுந்தருளியிருப்பாளிதுவே மண்டலமூன்றெனக் கூறப்படும்.

### நாடி கூ௦-க்கும் விபரம்.

இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்திஉசர, அலம்புருடன், குகு, சிங்குனி, இயல்புருடன் ஆகநாடிகள் ௧௦.

இவைகளில் இடை, பிங்கலை, சுழிமுனை இம்மூன்றும் மூலாதாரத்தைத்தொட்டு ஆறுதாரம் ஆறும் மண்டலம் மூன்றும் ஊடுருவி முட்டிநின்று இடை, பிங்கலை, இரண்டு சுழிமுனையிலே இணங்கி கத்தரிக்கோல்போல் மாறி வீணாத்தண்டுக்குவில்லு நாணிட்டாற்போல் கபாலத்தைமுட்டி நாசியைப்பற்றி நிற்கும். இம்மூன்றுநாடியும் இப்படிநிற்க காந்தாரியானது கெர்ப்பஸ்தானத்தில் தோன்றி எழுவகையாகப்பிரிந்து இச்சரசொரூபமாய் கண்டத்தைப்பற்றி நாடியளவுநிற்கும்.

அத்தி, உசர, இவ்விரண்டும் பத்துநாடியாய்ப்பிரிந்து கண்களிரண்டிலும் பதிந்திருக்கும் அலம்புருடன் பன்னிரண்டுநாடியாகப்பிரிந்து ஜடத்திலுண்டாகிய எலும்பு, நரம்பு, உரோமம் இவைகளில் பாவிபாகமாறி வலது இடது செவிகளைப்பற்றி நிற்கும், குகுவென்பது நாபிஸ்தானத்திலே தோன்றி குதத்தைப்பற்றிநிற்கும். இயல்புருடனெனும் நாடியும் சிங்குனி யென்னும் நாடியும் நாபியில் தோன்றி குய்யத்தைப்பற்றி நிற்கும்.

### இனி வாயுக்களாவன.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆகவாயுக்கள் ௧௦. இத்



துடன் வயிரன், முக்கியன், அந்தரியாமி, பிரவஞ்சனன் ஆகிய நான்கும் சேர வாயுக்கள் ௧௪-ல் பிராணவாயுக்களாவன.

பிராணவாயுவானது லலாடமத்தியிலே தோன்றி நேத்திரநாடியிலேவிழுந்து நாபிக்கமலத்திலே உதித்து மூலாதாரத்திலேமுட்டி இடைகலை, பிங்கலைகளிலே கூடி கபாலத்தைச்சுற்றி நாசியின் வழியாய் புறப்பட்டு நான்கு விரற்கடை பிரமாணம் மீந்து தானின்ற ஸ்தானத்திலேயே தாக்குகின்றது. இப்படித் தாக்குவது உத்தம தேகிக்கு நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாகக் கொல்லன் துருத்திக்குட் காற்றேறுவதுபோல ஏறும். இப்படி ஏறுகின்ற சுவாசமானது இராப்பகலாகிய அறுபது நாழிகையுள்ள நாள் ஒன்றிற்கு உ௧௬௦௦-சுவாசமாச்சுது. இவ்விதமா யிணங்கியவற்றுள் ௪௩௨௦-சுவாசமட்டும் வெளிப்படும் மற்றவை உள்ளடங்குமென்றறிக.

அபானவாயுவானது குதத்தையும், குய்யத்தையும் பற்றி மலமூத்திராதிகளைக் கழித்துவிடும்.

வியானன் தோளிலே நின்று ஸ்பரிசங்களை யறிவித்துக் கலைகளை நிறைவிக்கும்.

உதானன் உதரக்னியை யெழுப்பி உண்ட அன்னசாரத்தை நாடிகளிற் செலுத்திச் சரீரத்தை வளர்க்கும். சமானன் இவையாவையும் சமப்படுத்தி பேதமில்லாமல் நிரவலாக்கிவைக்கும். கூர்மன் நகைப்பும் முகமலர்ச்சியும் கண்களிப்பும் புளகமும் மயிர்க்கூச்சமும் கொட்டாவியு முண்டாக்கும். நாகன் முக்கலும், சோம்பலும், திமிரும், விக்கலும், வீங்கலு முண்டாக்கும்.

கிரிகரன் புருவமேற்றுவித்தும், தும்முவித்தும், அழுவித்தும், திரியும்.

தேவதத்தன் விழிக்கும்பொழுது வஞ்சித்து ஓட வுலாவ உயுத்தஞ்செய்யத் தலைப்படும்.

தனஞ்சயன் பிராணன் சரீரத்தை விட்டு வெளிப்பட்டபோதும் தான் பிரியாமல் நின்று உடம்பை வீங்குவித்தும், விரிவித்தும், புழுவித்தும், கொய்துங் கபாலத்தைப் பிளந்துபோம்.

வைரவன் காலெலும்புங் கதிரெலும்புங் கூடியவிடத்திலே நின்று உடம்பில் அவஸ்தையுண்டாக்கி வாதம், சளி, இருமல் முதலான நோய்களை யுண்டாக்கும்.

முக்கிடன் கைவெலும்பு, உடம் கதிரெலும்புங் கூடிய விடத்திலே நின்று சரீரத்தின் யாக்கைகளைச் சிறக்கச்செய்யும்.

அந்தரியாமி புருஷனுக்கு வாகனமாய் நின்று பிராணவாயுவைத் தோற்றுவிக்கும்.

பிரபஞ்சனென்னில் பிராணவத்துக்கு இருப்பிடமாயிருந்து பிரபஞ்சனும் அந்தரியாமியும் சரீரத்திற்கு அடைக்கலமாகவும், அச்சாணியாகவு மிருப்பார்கள்.

இனி ஜீவராசிகளின் வாழ்நாளின் விபர மெப்படியென்னில்?

வயதளவு நூற்றிருபதில் பத்து வயதாவும் இளமை, உ௰-வது வயதினளவும் வாலிபம், உ௰ — ௩௰ — ௪௰ — ௫௰ — இதுவரையில் யௌவனம், ௫௰-முதல் ௬௰-வரையில் வயோதிகமடைந்து மூலங்களுற்று பிரிதிவி அப்புவை நெருக்கும், அறுபதில் அப்பு தேயுவை நெருக்கும், எழுபதில் தேயு வாயுவை நெருக்குதலினால் தாது மாறி வாயுவோர்வு பண்டுபோல் செலுத்தும். எண்பது வயதில் வாயு ஆகாசத்தை நெருக்கும், தொண்ணூறு வயதில் ஆகாசம் ஆத்மாவை நெருக்கும், அதனால் மல ஜலம் இடைவிடாமலொத்துமிருக்கும், நூறுவது வயது முதல் நூற்றிருபதுக்குள் ஆத்மா வர்தனத்தை நோக்குமந்தவிடையில் விதியினால் அவமிருத்துந் தறுப்பினி விஷகடிகள், வெட்டுக்குத்து, நஞ்சுகளைத் தின்னும், மிருகத்தினால் விரத்தல் முதலியதுகளால் முற்கூறிய வயதுக்குள் மற்றிய மரணங்கள் நேரிடுகிறதுமுண்டு.

இந்தப்பிரகாரம் அகண்ட பரிபூரணமாய் அத்வைதமாய் விளங்கப்பட்ட பரமாத்ம ஸ்வரூபத்துக்கு உபாதிபேதங்களாலே இப்படிச் சுழுவிதமாய் சொல்லப்பட்டது. அந்த உபாதிகளைத் தள்ளி அத்வைத ஆனந்த பரிபூரண ஸ்வரூபமான பரமாத்மாவே தானென்று யாரிருக்கிறார்களோ அவர்களே இருதார்த்தர் அவர்களே வித்வான்கள் அவர்களே மெஞ்ஞானிகள் அவர்களே ஜீவன் முக்தர்களென்று வேதாந்த சாஸ்திர சித்தாந்தம்.

ஜெகதீசன் திருவடிகளே சரணம்.

## கெர்ப்ப ஸ்திரீகட்கு.

கொடுக்கவேண்டிய சிகிச்சைகளிருந்தும் கவனிக்கத்தக்க எதுவில்லாமையால் மேற்படி கெர்ப்பஸ்திரீகட்கு நேரிடுந் துன்பத்தை நாம் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களா யிருப்பதினால் பண்டிதர்கள் முதலியவர்களுங் கர்ப்பமாயிருக்கும் ஸ்திரீகட்கு நேரிடும் பிணிகளுக்குத் தகுந்த மருந்துகளைக் கொடுப்பது தகுதியல்லவென்று சொல்லுதலும் அதற்கொவ்வமையாக முதியோர்களும் வைத்தியர்களால் மருந்து முதலானவைகள் கெர்ப்பஸ்திரீகட்கு கொடுக்கப் பிரியப்பட்டால் கெர்ப்பத்திற்கு விக்னம் நேரிடுமென்றும் ஓர் பொய்க்கதைச் சொல்லிப்போட்டு பின்பு அவர்கள் சகஜமாய்ச் செய்யுந் தொழிலாவது சீரகத் தெமுஞ் சோம்பு மிளகும் பனங்கற்கண்டும் போட்டுக்கொடுத்தால் மேற்படி கெர்ப்பஸ்திரீகட்கிருக்கும் இம்சைகளுக்கநுகூலமாயிருக்குமென்று மிதுதவிர கொதி வெந்நீரில் பசுவின் வெண்ணெயிட்டுக் கொடுத்தாலுடனே அநுகூலத்திற் கேதுவாகிய சௌக்கியமுண்டாகுமென்றுஞ் சொல்லுகிறதேதவிர வேறே மேல்படி யிம்சைக்குத் தகுந்த பிரயோகங்களுபயோகப்படுத்த நாமறிந்தமட்டில் இதுவரையிலும் மேற்படி கெர்ப்ப ஸ்திரீகட்குத் தகுதியான சிகிச்சையைத் தெரிந்துச் சொல்லுவார்களுமில்லை. அதைச் செய்வார்களுமில்லை ஆகையால் கெர்ப்ப ஸ்திரீகட்கு ஒவ்வொரு மாதங்களில் நேரிடுஞ் சிற்சில யிம்சைகளுக்குத் தகுந்த இம்சைகளை நிவிர்த்திசெய்யும்பொருட்டு, இந்நூலில் பிரமாண பிரயோகத்தைத் தெரிந்து தெரிவிக்கலான சங்கதியை மாட்சிமைதங்கிய அனேகர்களாகிய யாவர்களுக்கு மடியேன் சொல்லும் விபரத்தை கருதுவீர்களாகில், கடவுள் நமது வம்ச பாரம்பரைக்கும் சகாயபலத்தைக் கொடுப்பார்.

இங்ஙனம்,

ம. ஜி. வெங்கிடசாமி.

ஆயுள்வேதபாஷ்கரன்.

வெலிங்கட்டன்.

---

## கெர்ப்ப ஸ்திரீகட்கு (க) மாதந்தீர்ந்த வரும் நோயும் அதற்கு ஔஷதவிபரமு மிதனடியிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

கெற்பமாகிய ஸ்திரீகள் முதற்றிங்களி லிவர்களுக்கு அடிவயிறு வலியாய் வலிகாணில்:

தாமரைப் பூ ஒன்று
சந்தனம் ரூபாயிடை-க
விளாம்பிச்சம் வேர் ரூபாயிடை அரை.

இவைகள் மூன்றையுங் கால்படி சுத்தஜலத்தா லரைத்து மூன்று பொழுது அதாவது காலை, மாலை, மறுகாலை ஆகிய மூன்றுவேளை

கொடுக்க கெர்ப்ப ஸ்திரீகட்கு அடிவயிர்வலி கெர்ப்பக்குடுமுதலிய விம்மைசகள் சௌக்கியப்படும். பத்தியமில்லை அதிக காரசாரமான உணவுகளை புசிக்கலாகாது.

## இரண்டாமாதம் வலிகாணில்.

தற்கோலம் விருகனிடை ஒன்று.
தாமரைப்பூவு ஒன்று.

இவ்விரண்டையும் கால்படி ஆவின்பாலாலரைத்து முற்கூறிய வண்ணமே மூன்றுபொழுது கொடுக்க கெர்ப்பஸ்திரீக்கு கண்ட வலிமுதலிய கெர்ப்பக்குறைகள் சௌக்கியப்படும். முற்கூறிய பத்தியமே.

## மூன்றுமாதத்தில் வயறுளைந்தால்.

வெள்ளைத் தாமரைமலர் பலம் ஒன்று.
செங்கழுநீர் கிழங்கு பலம் அரை.

பசுவின்பால் படிகால் விட்டரைத்து ஒருபலமென்பது மூனு ரூபாய்தூக்கம் மூன்றுபொழுதுகொடுக்க கெர்ப்பஸ்திரீகட்குண்டான வயறுளைதல் வயிற்றுவலி கெர்ப்பக்குடுமுதலிய விம்மைகளியாவுஞ் சௌக்கியப்படும் பத்தியம் முற்கூறியவண்ணமே.

## நான்காமாதத்தில் கெர்ப்பஸ்திரீகட்கு அடிவயிர் வலித்து இரத்தங்காணி லல்லது வயிர்வலி யட்டுமிருந்தாயின்.

நெய்தல்கிழங்கு பலம் அரை
மாதளம்வேர்ப் பட்டை பலம் கால்

இளவறுப்பாய் வறுத்தகடுக்காய்ப்பூவு பலம் கால் ஆகிய விம்மூன்றையும் வெள்ளாட்டுப்பாலல்லது பசுவின்பால் படிகால் சேர்த்து மைபோலரைத்து மூன்றுபொழுதுகொடுக்க, வயற்றுவலி இரத்தங்கண்டவிம்மைசகள் சௌக்கியப்படும். பத்தியம் அத்திப்பிஞ்சு வாழைப்பூவு வாழைக்கச்சல் வருமை தயிர் மோர் பால்பச்சை கருவேப்பிலை மாங்கொட்டையின்பருப்பு புளியாரைக்கீரை செம்பிலி ஆட்டுமாமிசம் நெய் துவரைப்பருப்பு முதலியவைகளை மிளகாய்சேர்க்காமல் மிளகு உலர்ந்தகொத்தமல்லி சீரகம் மஞ்சள் வெந்தயம் ஈருள்ளி வெங்காயம் பூண்டு பழம்புளி முதலியவைகளை சேர்த்துக்கொள்ளன்று.

## ஐந்தாமாதத்தில் கெர்ப்பஸ்திரீகட்கு வயறுவலிகாணில்.

தாமரைப்பூவு பலம்........ அரை }
விலாமிச்சம் வேர் பலம்...... கால் } இவையிரண்டையும்.



கால்படி பசுவின்பாலால் சந்தனம்போலரைத்து மெல்லிதாகிய துணியில்வடிகட்டி மூன்றுபொழுதுகொடுக்க வயற்றுவலி முதலிய விம்மைசகள் சௌக்கியமாம் பத்தியமில்லை.

## ஆறாம் மாதத்தில்.

கெர்ப்ப ஸ்திரீகட்கு கெர்ப்பக்குடலுளைந்து அடிவயர் சுற்றிவலித்துச்சுழன்று நீர்கடுப்புகாணில் திப்பிலி விருகனிடை ஒன்று.

விரைபோக்கிய திராக்ஷபழம் பலம் ......... அரை
நெய்தல்கிழங்கு பலம் ...................... அரை
மேல்தோல்போக்கிய வெள்ளரிவிரை பலம் கால்

ஆகியவின்னான்கையும் கால்படி பசுவின்பாலாலரைத்து நன்றாய்வடிகட்டி மூன்றல்லது ஆறுவேளை கொடுக்க நீர்கடுப்பு கெர்ப்பக்குடலுளைந்து சுற்றிவலித்த கெர்ப்பக்குறைகளியாவுஞ் சௌக்கியப்படும்.

பத்தியம் பசுவின்பால் சுரக்காய் புடலை பீர்க்கை வெள்ளைப்பூசணிக்காய் செம்பிலி ஆட்டுமாமிசம் நெய் பழம்புளி, மாதளம்பழம் கௌவா கொழுந்தி கொட்டை ஆரஞ்சிமுதலியதை சேர்த்துக்கொள்ளலாம். மொளகாய்க்காரம் கூடாது. மிளகுமுதலியதைச்சேர்க்கலாம். இதுவன்றி மேற்படி ஸ்திரீகட்கு சேர்க்கவேண்டியதாவது கொடிமுந்திரிப்பழம் பம்பிளிமாஸ்பழம் வெள்ளரிப்பழம் தர்ப்பூசிணிப்பழம் பனைநொங்கு பனங்கல்கண்டு இதுமுதலியவைகளை சேர்க்க மிகவும் நலத்தைக்கொடுக்கும்.

## ஏழாமாதத்தில் வயிறுவலிகாணில்.

விலாமிச்சம்வேர் பலம் .................. கால்
சந்தனம் பலம் .............................. அரை

தற்கோலம் பலம் கால் ஆகியவிம்மூன்றையும் கால்படிபசுவின் பாலாலரைத்து வடிகட்டி மூன்றுபொழுதுகொடுக்க, மேற்படி நச்சுவலிமுதலிய விம்மைசகள் சௌக்கியப்படும். பத்தியமில்லை.

## எட்டாமாதத்தில் கை காலுயர்ந்து பசியில்லாதிருக்கின்.

தாமரைப்பூவு பலம் .................. அரை
நெய்தற்கிழங்கு பலம் ................ அரை
சுக்கு பலம் ................................ அரை

ஆகியவிம்மூன்றையும் கால்படிபசுவின்பாலாலரைத்து வடிகட்டி அரைக் காலேயாயினுமரைகால் மூன்றுபொழுதுகொடுக்க, பசி

யுண்டாவதுமன்றி கை கால் அசந்திருப்பதுஞ் சொக்கியப்படுஞ் சரீரத்திற்கு பலத்தையும் கொடுக்கும் பத்தியமில்லை.

**ஒன்பதா மாதத்தில் கேர்ப்ப ஸ்திரீகட்கு அடிவயிர் வலிகாணில்.**

அரசம்தோல் பலம் .................... அரை

மருதமரப்பட்டைத்தோல் பலம் அரை யிவ்விரண்டையும் தை பட்டையின்மேலிருக்கும் உலர்ந்திருக்கலை நீக்கியபட்டை யாயிருக்கவேண்டும் முற்கூறியவிடை.

கால்படிபசுவின்பாலால் மைபோலரைத்து கல்லாத்துணியில் விட்டுவடிகட்டி மூன்றுபொழுதுகொடுக்க கெர்ப்பஸ்திரிகளுக்குண் டாகிய வலிமுதலிய விம்சைகள் சொக்கியப்படும் பத்தியமில்லை.

**பத்தாம்மாதத்தில் கேர்ப்பஸ்திரீகட்கு வயிறுளைக்கில்.**

வெள்ளைச்சர்க்கரை பலம் ...................... கால்

இலுப்பைபூவு பலம் ........................... அரை

கால்படி பசுவின்பாலால் கரைத்து மூனுபொழுது கொடுக்க வயறுளைவு இடுப்புவலி அல்லதுவேறுவிதமாகிய விம் சைகள் முதலியயாவும் சொக்கியப்படும் பத்தியமில்லை.

கெர்ப்பஸ்திரீகட்குப்போசப்படுத்தவேண்டிய பத்தியத்திற்கான பதார்த்தங்கள்.

செல்லிக்காய் புடலை பீர்க்கை அவரை பிஞ்சுகத்திரி முருங் கைபிஞ்சு வாழைக்காய் சிவக்காய்க்கொழுந்து அருநெல்லி இறக்கிரை பொன்னாங்கணி வல்லாரை புளியாரை வெந்தியக்கீரை வெள்ளா ட்டுமாம்சம் அல்லதுசெம்பிலி; முயல் உள்ளக்குருவி காடை மான் சுறு மீன் குறவை வரால் தேளி விலாங்கு ஆவின்பால் நெய் துவரை பச்சைப்பயர் கசலி அத்திப்பிஞ்சு முள்ளிப்பிஞ்சு தூதுளை சமூலம் கண்டங்கத்திரிப்பிஞ்சு ஆவாரம்பூவு சோத்துக்கத்தாழையின்பூவு பச் சைகருசப்பிலை பச்சைகொத்தமல்லி எலிமிச்சம்பழுருகாய் நார்த்தங்காய் இதுமுதலானவைகள் வியாதிகளை விலக்குமென்றறிக.

## பத்தியத்திற்காகாப் பதார்த்தங்கள்.

பன்றி கோழி பாகற்காய் பிரண்டை அல்லது பூசனி கொத்தவர ங்காய் கடலை தட்டைப்பயர் மொச்சை உளுந்து மாங்காய் தேங் காய் எருமைப்பால் கெண்டைமீன் வாளைமீன் குமட்டிக்காய் கொள்ளு கடுகு நல்லெண்ணை முதலிய யிதர கசப்பான பண்டங் களை எள்ளளவுபிரமாணம் மருந்திலாவது மருந்துமுறிந்து உடலிற் பிணி யைவிளைவிக்குமென்றறிக.



## கேர்ப்பஸ்திரீகள் ஐந்தாமாதத்திலும் ஏழாமாதத்திலும் சாப்பிடவேண்டிய எண்ணெ.

சிற்றாமணக்கெண்ணை படி............... அரை

ஆவின்பால் படி............................ கால்

சருள்ளிச்சார் படி......................... கால்

கழுதைப்பால் படி ......................... கால்

கருஞ்சீரகம் விராகனிடை.........................மூன்று

இவைகளை எல்லாமொன்றாய்க் கலந்து சிறு தீயாலெரித்து மெ ழுகுபதமாகுந் தருணத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு ஐந் தாமாதத்திலும் ஏழாமாதத்திலும் மாதம் ஒன்றுக்கு ஐந்துநாள் அந்திசந்தி அதாவது காலை ௬-மணிக்கும் சாயந்திரம் ஐந்துமணிக் கும் ஒருவேளைக்கு இருகழஞ்சு விகிதம் சாப்பிட்டு மறுபத்தியம் ஐந்துநாளிருக்கவும்; பத்தியம் புளி நீக்கி வறுத்த உப்புசேர்த்துக் கொள்ளலாம். அதிக காரமான உணவுகளை சாப்பிடக்கூடாது கசப்பான பண்டங்களை சேர்க்கலாகாது. இப்படிக்கு யிந்த யெண் ணெயை மேற்கண்ட ஸ்திரீகள் சாப்பிடுகிறதினால் பிறந்த குலமுத லிய பிணிகள் நீங்கி கருவை வளர்க்கும் குழந்தை ஆயுசுடன் பிறக் கும் இச்சரபுத்திரம்.

இருகழஞ்சியென்பது செம்படைரவிராகனிடை.

## இதுவுமது.

சாரபருவல்லி பொடுதலை கொத்தமல்லி கோழியாவரை சிறு செருப்படையாளை சிறுசெருப்படி வல்லாரை பொன்னாங்கா ணி இவைகளின் சாறுவகை பொன்றுக்குப்படிகால் ஆகாசகெருடன் கிழங்கு வெருகன்கிழங்கு வகைக்குபலம் ஒன்று புரசப்பன் பட்டை செங்கதாரிப்பட்டை வாலுழுவையரிசி கருஞ்சீரகம் வ கைக்கு பலம் கால் கால்பலமென்பது ருக்கால்ரூபா யிடை பசுவி ன்பால் படிகாலால் மேற்கண்ட சரக்குமுதலிய கிழங்குகளை அரை த்து முற்கூறிய பச்சிலைச்சாறுடன் கலந்து சோற்றுக்கத்தாழையின் சோறு பலம் நாலு கடுக்காய்த் தூள்பலம் அரை சிற்றாமணக்கெண் ணை பட்டணம்படி ஒன்று இவையெல்லா மொன்றாய்க்கலந்துமெ ழுகுபதமாய்க் காய்ச்சி வடிகட்டி முற்கூறியவெண்ணையின் விபரப் படிக்கே சாப்பிட பத்தியமாயிருக்கவேண், கெர்ப்பக்கருவை வளர்ப்பது

மன்றிகிரந்தி சூலை வெட்டைச்குடு மேகநீர்முதலியதுர்நீர்களியாவும் நிவர்த்தியாம் அப்படிக்கு நிவர்த்தியாகிற காரணத்தினால் குழந்தை ஆயுசுடன்பிறக்கும். இதுவன்றி மேற்படி கெர்ப்பஸ்திரீகளுக்கு தேகத்திலுள்ளவுருடிகள் நிவர்த்திக்கும் கெற்பத்தை யொட்டிய வியாதிகளும் குழந்தைகளுக்கு சம்பவிக்க ஏதுவிராது. பிள்ளைபிறந்தவுடனே மேரிடப்படிக்கான செய்கரப்பான், வெள்ளைக்கரப்பான் பித்து முதலிய வியாதிகளுமாகா. இந்த எண்ணெய்க்கு உப்பு கடுகு நல்லெண்ணை முதலிய விதாகசப்பான பண்டங்களை நிவர்த்திசெய்து சாப்பிட அதிகசௌக்கியத்தையுண்டுபண்ணும். ஆகையால் இதற்குமாறுகயத்தியங்கள் தவறிடக்கப்பிரியப்பட்டவர்களுக்கு, அதிகசௌக்கியத்தைக்கொடுக்க யேதுவில்லாமலிருக்கும். ஆனால் புத்திசாலிகளோ அப்படிக்கு செய்வித்துக் கொள்ளமாட்டார்களென்பது அடியேனுடைய கருத்து.

(ஒருபலம்வெண்பது முன்றுருபாயிடை)

இதுவமது.

விஷ்ணுகிராந்தி செப்புநெருஞ்சி முளியிட்டான் முருக்கிலை சம்பில நெருசெருப்படை வில்வபத்திரி *குமெரச்சி இவைகளின் சாறுவகைக்கு படி அரைக்கால் ஈருள்ளிச்சாறுபடி ஒன்று திரிபலைக்கியாழம் படி ஒன்று கருஞ்சீரகம் பலம் அரை அதிமதூரம் பலம் அரை திப்பிலி பலம் அரை செஞ்சந்தாரிப்பட்டை பலம் ஒன்று வசம்பு பலம் கால் பெருங்காயம் பலம் கால் வெள்ளுள்ளி பலம் அரை இந்த சரக்குகளை கால்படி பசுவின்பாலாலரைத்து மேற்கண்ட சாறுகளை யெண்ணெய்களுடன் கலந்து பானையிலேகொட்டிச்சேர்த்து நெருப்பாக்கிடத்திக்காச்சி மெழுகுபதமாயிருக்கும்போது வடிகட்டி வைத்துக்கொண்டு ஸ்நானதினங்களில் ஐந்துநாள் காலை மாலை, இருகரண்டி விதம் காலை ருசி சின்னபொட்டுகொண்டும் மாலை ருசி சின்னபொட்டுகரண்டியாகவும் அருந்திகளிலாறுநாளும் பெழுசம்புக்களில் மேழுநாளும் கசப்பானபண்டங்களை நிவர்த்திசெய்து சாப்பிட்டுவர முற்கூறிய யெண்ணெயிலகண்ட பிணிகள் நீங்கி குழந்தைகளாயிசுடன் சௌக்கியமாய்ப்பிறக்கும். மேற்படி குழந்தைகளுக்கு கேரிடும் செங்கரப்பான் கருங்கரப்பான் முதலானதுவென நிவர்த்தியாம். இது சத்தியம்.

* குமைகண்ட நெடுப்பத. இதன்மெதுக்கு.

ஒருபலமென்பது மூன்றுருபாயிடை.

இதுவமது.

பற்பாடகம் சையரித்தனை வகைக்கு ஒருவெதுவிச்சங்காய்பிரமாணமரைத்து ஒருபடி பசுவின்நெய்யிற்கலந்து சிவக்க வெந்தபதத்திலிறக்கி கெற்பந்தரித்த ஐந்தாமாதமுதற்கொண்டு இருகரண்டியளவாய் காலையில்மட்டும் ஒருசிறியகரண்டிவிதம் சாப்பிட்டால் மேற்சொல்லிய பிணிகள் நீங்கி குழந்தைகளாயிசுடன் பிறக்கும் பத்தியமில்லை. எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்யும் காலங்களில் மட்டும் இந்நெய்யையுபயோகப்படுத்தக்கூடாது. இதைப்போலவே முற்கூறிய எண்ணெய்களும் ஸ்நானஞ்செய்யுங்காலங்களில் சாப்பிடக்கூடாது இச்சாபத்தியம் யெண்ணெய் சாப்பிடுங் காலத்தில் வாதாதியதிகரித்திருக்குமானால் யெண்ணெய்சாப்பிடக் கூடாதென்றறிக பத்தியமில்லை கசப்பானபண்டங்கூடாது.

இதுவுமது.

ஆடுதின்டாபாளை அவுரி நாதனை சருஞ்சூரிச்சுண்டை இவைகளின்வேர் வகைக்குபலம் அரை முன்னையிலை அப்பைக்கிழங்கு விளிச்சுபிசின் வகைக்கு பலம் அரை ஜாதிக்காய் சந்தனம் கசிக்கா வெள்ளுள்ளி திப்பிலி தேற்றான்விரை களிப்பாக்கு கருஞ்சீரகம் ஓமம் வெப்பம்பட்டை வகைக்குபலம் கால் இவைகளியாவும் கால்படி பசுவின்பாலாலரைத்து நல்லெண்ணை படி ஒன்றில் யாவையுமொன்றாய்க்கலக்கி மெழுகுபதமாகக்காச்சி முற்கூறியபடி வேளை ஒன்றுக்கு ஒருசிறுகரண்டி விதம் சாப்பிட்டுவர கெற்பத்துக்கு நேரிடக்கிடக்கிறமுதலிய வியாதிகளியாவுஞ் சௌக்கியப்படும் பத்தியமில்லை.

கெற்பஸ்திரிகட்கு காணுங்கிரத்திற்கு நீர்முட்டிவேர் பேராமுட்டிவேர் சீத்திற்கொடிக்கிலேவேம்புக்கு திப்பிலி விஷ்ணுகிராந்தி கடுக்காய்தோல் கொத்தமல்லி வகைக்கு விரகனிடை ரெண்டு இடித்துப்போட்டு ஒருபடி சுத்தஜலம்விட்டு அரைப்படியாகச் சுண்டக்காய்ச்சி வேளை ஒன்றிற்கு அரைவீசம்படி அல்லது அரைத்ருடமாக காலை, மாலை ஆறுபொழுது கொடுக்க கெற்பகாலத்திற்கண்ட சுரம் நிவர்த்தியாம் பத்தியமில்லை புளிசேர்த்துக்கொண்டபோதிலும் கடுகு நல்லெண்ணை நீக்கி சாப்பிடவேண்டும் மிளகாய்களைம் அதிகமாயுபயோகப்படுத்தலாகாது.

## கெர்ப்பவதிக்கு நீரடைத்தால்.

நீர்முள்ளியிலை பசளையிலை குப்பை முன்னுக்கீரை இவைகளிலொன்றை விளக்கெண்ணெய்விட்டு வேகவைத்தவித்து தின்றாலும் அல்லது நன்னாரிவேரையாவது உலர்ந்தரோஜாபூவையாவது ஒரு பலம் எடையுள்ளதாய் ஒருபடி ஜலம் விட்டு கால்படியாகச் சுண்டவைத்து காலை மாலை மறுகாலை ஆகியமூன்றுபொழுது சாப்பிட்டால் நீர்ச்சுருக்கு நீரடைப்பு முதலியவிம்சைகள் நீங்கும் பத்தியமில்லை சுரைக்காய் முள்ளங்கி புடலை பீர்க்கை வெள்ளரிக்காய் வெ- பழம் கொலாகொழுஞ்சி எலுமிச்சம்பழம் முதலியதை சேர்க்கலாம் காரசாரமானவுணவுகளை உபயோகப்படுத்தக்கூடாது.

### இதுவும் அதற்கே.

வெண்காரம், சவுக்காரம், படிகாரம், இந்துப்பு, வெடியுப்பு இவைகள்வகைக்கு விராகனிடை ஒன்று இவைகளைப் பொரித்து பொடிசெய்து காலை மாலை மறுகாலை மறுமாலை ஆகிய நான்கு பொழுது நாவல் இளநீரில்கொடுக்க மலஜலம் பிரியும் பத்தியம் முற்கூறியவண்ணமே.

### இதுவும் அதுவே.

பொரித்தவெண்காரம் விராகனிடை இரண்டு சங்கம்வேர்ப்பட்டை சவுக்கப்பத்திரி மிளகு முன்னுக்கீரைவேர் பொன்னாங்காணி விலைசந்தனம் வகைக்கு விராகனிடை ஒன்று அரைப்படி புளித்தகாடியில் அரைத்து வடிகட்டி இந்த மருந்தை நாலுவேளை விரகனிடை காலை மாலையாக நாலுபொழுதுகொடுக்க நீரடைப்பு நீர்க்கடுப்பு முதலியவிம்சைகள் நிவர்த்தியாம் பத்தியமில்லை. முற்கூறியவிப படிக்கே.

பால், சர்க்கரை, நெய், தயிர், மோர், கறி முதலியதுகள் சேர்த்துக்கொள்ளலாம்.

## கெர்ப்பஸ்திரீகட்கு கல்லடைத்தால்.

மாதளம்பழத்தசிதி விராகனிடை நான்கு வெள்ளரிவிதையின் பெரிசிருக்கும். மேல்தோலை போக்கி இந்த விதை விராகனிடை இந்த இவையிரண்டையும் அரைப்படிபசுவின்பாலிலரைத்து காலை பொழுது கொடுக்க கல்லடைப்பு நீரடைப்பு நீர்க்கடுப்பு மேல்மூச்சுகாலுக்கு இம்சைகள் நிவர்த்தி. இதுவன்றி செக் தொட்டிவேரை சுத்தஜலத்தாலரைத்து தொப்பிளைச்சுற்றி தடவத்திரும். அல்லது பொட்டுப்பை ஜலத்திலரைத்து அடிவயற்றிற்றடவ மேற்கண்ட விம்சைகள் சொக்கியப்படும்.

செப்புநெருஞ்சிபலம் அரை. முலைப்பாலாலரைத்து உள்ளுக்குக் கொடுக்க கல்லடைப்பு நீரடைப்பு முதலியவிம்சைகள் நிவர்த்தியாம் பத்தியமில்லை.

## பிள்ளைபேறவருந்தப்பட்டால்.

முன்னைவேர்பட்டை விராகனிடை ............ 2.

அரைக்கால்படி பசுவின்பாலால் மைபோலரைத்து உள்ளுக்குக் கொடுக்க வுடனேபிள்ளை யாதொரு இம்சையுமில்லாமல் குழந்தை அழுதகுரலுடன் பிறக்கும்.

### இதுவுமது.

பிள்ளைபெறவருந்தப்பட்டால் சாயவேர்ப்பட்டை விராகனிடை ரெண்டு, பொடிசெய்து அரைபடிமும் சிற்றாமணக்கெண்ணெயிற் குழப்பி உள்ளுக்குக்கொடுத்து இந்த வெண்ணெயை வயிற்றிலும்பூச பிள்ளைப்பிறக்கும். இதுவன்றி பசலையிலைச்சாறுபடி வீசம் நல்லெண்ணெய் படி வீசம் ஒன்றாய்க்கலந்து கொடுக்க பிள்ளைபிறக்கும் நஞ்சுக்கொடி விழும், சிவனார்வேம்பை முலைப்பாலிலரைத்துகெர்ப்பஸ்திரீ தொப்புளின்கீழ் தடவ குழந்தைபிறக்கும். கள், தும்பை வட்டவேரைப்பிடுங்கி குளிசமாட்டி கெர்ப்பஸ்திரீநெற்றிக்குநேரே மயிரிற்கட்டி கட்டியதை கண்ணாடியினால் இந்த கெர்ப்பஸ்திரீ கவனித்துப்பார்க்க குழந்தைபிறக்கும்.

பிள்ளைபெறவருந்தப்பட்டு தாகமெடுத்தால் வயற்றிலாவின் வெண்ணெயைப்பூசி அதுவுருகினால் பிள்ளைபிறக்குமென்றும். உருகாவிட்டால் வயற்றில் பிள்ளைசெத்ததென்றும் அறியலாம்.

## வயற்றிலிறந்தபிள்ளைவிழ.

கிலக்குமின்வேர்ப்பட்டை பலம்........ அரை

குங்குமப்பூவு வராகனிடை அரை யித்தொண்டையும் மூக்கிவேலை பலம் ஒன்று சுத்தசலம்படிகால் விட்டு பொழுதுசெய்து அரைக்கால் படி கியாழத்தில் முற்குறித்த கிலக்குமின்வேரையும் குங்குமப்பூவையும் கன்றாயரைத்து உள்ளுக்குக்கொடுக்க வயற்றிலிறந்த பிள்ளை வெளிப்படும்.

இந்துப்புபலம்,.......... அரை

சுவசம்வேர்பலம் அரை இருவொண்டையும், அரைக்காலலரை கால்படி காடியிலரைத்துக்கொடுக்க பிள்ளைவிழும்

வெலிப்பருத்திவேர் பலம்................ ஒன்று

பசுவின்பால் படி அரைக்காலல்லது கலயிலரைத்து கொடுக்க விழும்.

கொடிகள்ளிவேர் பலம் ............... அரை

மதுக்காரைவேர் பலம் அரை இவைவொண்டையும் அரைக்கால் படி காடித்தண்ணியிலரைத்துக் கொடுக்க விழும்.

இளவறுப்பாய்பொரித்த பெருங்காயம் விருகனிடை...... ரெண்டு

வுப்புபலம் அரை இவைவொண்டும் அரைக்கால்படி பழங்காடியிலரைத்துக் கொடுக்கவிழும்.

வெங்கோன்றிக்கிழங்குபலம்................ அரை

காட்டுமுல்லைவேர்பட்டைபலம் கால் இவையிரண்டும் காடியாலரைத்து அடிவயற்றிற்றடவவிழும்.

குரிஞ்சாவேர்பலம்.............. ஒன்று

பொன்னடைபலம் ஒன்று இதுவொண்டும் காடியாலரைத்து அடிவயற்றிற்றடவ விழும். மேற்குறித்த மருந்துகளைதத்தயார் செய்வித்து உள்ளுக்குக்கொடுத்தபோதிலும் அடிவயற்றிற்றடவப் பட்ட மருந்தையுங் கூடச்செய்ய, அதிகசௌக்கியத்திற்கிடமாம்.

தாளிச்சார்படி.............. அரைக்கால்

நல்லெண்ணை டிரும் அரை ஒன்றுபக்கலந்து கொடுக்கவிழும்.

நல்லெண்ணை டிரும்.............. அரை

புகையூரல் பலம் அரை இவை யிரண்டையும் அரைத்துக்கொடுக்க வயற்றில் மரித்தபிள்ளைவிழும், பத்தியமில்லை.

புகையூரலென்பது ஒட்டறை.

## பிள்ளை பெற்றதில் வயிறு பருத்தால்.

வெலிபருத்தியிலை சுக்கு மிளகு பூண்டு வகைக்கு விருகனிடை (உம்) தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்து மூன்றுநாட் காலை மாலையாக அருவேளைக் கொடுக்க சௌக்கியமாம்.



மாவுலிங்கப்பட்டை சிற்றரத்தை அரிசித்திப்பிலி மஞ்சள் வகைக்கு பலம் கால்,

கருப்புக்கட்டி பலம் ஒன்றுஞ் சேர்த்து கியாழஞ்செய்து மூன்று நாட்கொடுக்க சௌக்கியமாம்.

கோவைத்தண்டித்து காடியிலூறப்போட்டிறுத்து அதில் சுக்கு மிளகு பூண்டு அடுப்புக்கரி வகைக்கு பலம் ஒண்ணுஞ் சேர்த்தரைத்து கலக்கிக்காய்ச்சி அதில் நல்லெண்ணை படி அரைக்கால் கூடவிட்டு வேறே ஓர் வெள்ளித்தட்டைத்தட்டிப்போட்டு வெதுப்பித் தாளித்துக்கொடுக்க சௌக்கியமாம்.

என்ணுப்பொரியும் கருப்புக் கட்டியுஞ் சமனிடித்துக் கொடுக்கத்தீரும்.

## பச்சையுடம்பில் வயிறுபோதமிவலிகண்டால்.

| | |
|---|---|
| பெருங்காயம் விருகனிடை........................... | 1 |
| வசம்பு விருகனிடை........................................ | 2 |
| கொடிவேலி வேர்ப்பட்டை விருகனிடை............ | 3 |
| சுக்கு விருகனிடை ........................................ | 4 |
| ஓமம் விருகனிடை........................................ | 5 |
| கடுக்காய்த்தாள் விருகனிடை .......................... | 6 |
| திப்பிலி விருகனிடை ...................................... | 7 |
| கோஷ்டம் விருகனிடை ..................................... | 8 |
| சிவதைவேர் விருகனிடை ................................. | 9 |

இவைகளை வறுத்துச் சூரணித்து இரிசுடிப் பிரமாணம்.

பசுவின் நெய்யிற் கொள்ளத் தீரும் இச்சாபத்தியம்.

கெர்ப்ப ஸ்திரிகட்கு நேரிடு மொவ்வொரு வியாதியின் குறை குணங்களுமதற்குத் தகுந்தசிகிச்சைகளும் முக்கியம் வைத்தியர்களுக்கும் மருத்துவம் பார்க்கப்பட்ட மருத்துவச்சி முதலியவர்கட்கு மிந்த விபரங்களியாவுஞ் செவ்வையாய் தெரிந்திருக்க வேண்டுமென்பதே அடியேனுடைய முக்கியகருத்து.

## கர்ப்பத்திற் சிசுமரித்த சின்னங்கள்.

1-வது தாயெயின் வயிற்றில் சிசுமரித்திருந்தால் உடனே மார்புதளர்ந்து தொண்டுபோம்.

2-வது நாபியைச்சுற்றியுள்ள குளிர்ச்சியாகவுஞ் சிறிது தடிப்பாகி அல்லது குழம்பியிருந்த ஆகாரசலனையுள்ள தாகவுமிருக்கும்.

3-வது கர்ப்பத்தில் சிசுவின் அசைவு தோன்றாது.

4-வது வெந்நீரில் கையை நனைத்துக் கர்ப்பிணியின் வயிற்றின்மேல் வைக்கின் சிசு உயிருடனிருக்குமாயின் அவ்வுஷ்ணத்தைச் சகியாது கையை அகற்றும்.

5-வது கர்ப்பிணி நித்திரை மயக்கம்போன்ற மயக்கமுற்று இறந்தவர்களைப் போலச் சொப்பனங்கண்டு இளைத்துவிட்டுப் பயப்பிராந்தியையுடையவளாயின் சிசு மரித்திருக்குமென்றறிக.

6-வது புசிக்கத்தகாத வஸ்துக்களைப் புசிக்கவிரும்புவாள்.

7-வது வாயினின்றும் வருகின்ற சுவாசம் மிகவும் பிணவாடை நாறும்.

8-வது படுக்கையிலே புரளும்போதாவது எழுந்திருக்கும் போதாவது சரயிறப்பக்கத்தில் பிண்டம் சுமைக்கட்டுபோலப் புரளுவதாகத் தோற்றும் இவ்விதக்குறிகளை யெல்லாம் மருத்துவச்சி ஜாக்கிரதையாகப் பார்த்தறிவது அவர்களுக்குரிய கடமையாயிருக்கின்றன.

## கர்ப்பந் தரித்தல்.

பாக்கியவான் வீட்டுப்பெண் பிள்ளைகள் செல்வமிகுதியால், உணவு முதலிய வைகளிற் குறைவின்றிச் சரீரத்தை வருத்தப்படுத்தாமலிருப்பதனால் அவர்களுக்குப் பிள்ளைகள் அரிதாயுண்டாமல்லது இல்லாமையுமுண்டாவதோடு சிலருக்கு அற்பாயுசாய்ப்போகிறதுமுண்டு வருத்தப்பட்டு வேலைசெய்கிற எளியவர் வீட்டுப் பெண்பிள்ளைகளுக்குச் சந்ததி அபிவிர்த்தியாய் ஆயுள்விர்த்தியாயிருக்கிறபடியாலும் சந்தான விருப்பமுள்ள மாதர்கள் சரீரத்தை வருத்தப்படுத்தாமலிருப்பது கர்ப்போற்பத்திக்கு விரோதமென்றறிய வேண்டும். வேலைசெய்து சரீரம் வருந்தினால்வேர்வையுண்டாகி அசைவு முதலிய தொழிற்குரியவசிவைகளையதிகரித்து ஜடராக்கினி உண்டுபண்ணிச் சரீரமும் அதின் அவயவங்களும் திடமுற்றுக் கர்ப்பமுண்டாகச் செய்யுந் தொழிலும் நன்றாக இயற்றப்படும் ஆதலால் எளிதாகச் சிறுகச்சிறுகக்கூடுமானவரையி லவர்களாலியன்றமட்டும் வேலைகளைச் செய்து சரீரத்தை வருத்துவதனாலும் அதிகபலனுண்டென்றறியவேண்டும்.



மற்றுங்கருத்தரித்தலைக்குறித்து ஸ்திரீகள் கர்ப்பந்தனை நோயின்றி வைத்திருக்கவேண்டும் ருதுசிராவம் சுபாவநிறம் பேதித்திருக்குமாயின் கெடுதியுற்றதாகையால் கர்ப்பந் தரியாது நிறம் பேதியாமலிருந்தால் கற்பந்தரித்தற்குரிய விருப்பம், அதிகமாகவிருக்கும் மாதாந்திர சிராவம் நின்றவுடனே முதல்நாளிலாவது இரண்டாம் நாளிலாவது புணர்ச்சியில் அவ்விருப்பம் விசேஷமாயிருக்கும்.

மிகப்புணர்ச்சி செய்யும் விலைமாதர்களுக்கு குழந்தைகளுண்டாவதரிதாயிருக்கிறதும் நெடுநாள் பிரிவுற்றகணவன் வந்தவுடனே புணர்ச்சியில் கெற்பந்தரிப்பதும் யாவருக்குந் திருஷ்டாந்தரமாக விளங்குமாதலால் மாதர்கள் அடிக்கடிபுணர்ச்சி செய்யலாகாது. அதிகபுணர்ச்சிசெய்வதால் கருவழிந்து அக்கருவை வளர்க்குஞ் சக்தியுமற்றுப்போ மென்றறிகவேண்டும்.

புணர்ச்சி செய்யுங்காலத்திற் பெண்பிள்ளைகளுக்குப்பயம், ஆச்சரியம், யிவைமுதலியசஞ்சலங்களிருந்தால் கருத்தரித்தலுக்கு விரோதமுண்டாகுமாதலால் புணருங்காலம் சந்தோஷமாயிருக்கவேண்டும். புணருஞ்சமையம் மனவிருப்புமுதலிய முயற்சியின்றி தற்செயலாயுண்டாக வேண்டும் புணர்ச்சியில் நாயகிக்குண்டாகும் விருப்பம் யெவ்வளவதிகமோ அவ்வளவதிகமாகக் கற்பந்தரிக்குந்தன்மையுண்டாயிருக்குமென்றறிக.

மாதர்கள் எவ்வித ஆபரணங்களிலாவது ஊசிகாந்தத்தைப்பதிப்பித்து எப்போதுந் தரித்திருப்பதனால் கற்பந்தரிக்குங் குணமுண்டாவதுமன்றிச் சதிபுருஷர்களுக்கு மனவொருமையுமுண்டாகுமென்றறிக.

அன்றியும் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி இந்நான்கு மாதங்களில் பக்ஷத்திற்கொருதரமும் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை இந்நான்குமாதங்களில் மூன்றுதினத்திற் கொருதரமும் மார்கழி, தை, மாசி, பங்குனி, இந்நான்குமாதங்களில் காமமூறும் போதெல்லாம் புணரலாம்.

இதுவன்றி புணர்ச்சியின்காலந்தவிர மற்றக்காலத்தில் பிரத்தியேகமாகச் சயனிக்கவேண்டும். ஏனெனின், நாயகியின் சுவாசம் நாயகனது தேகத்திற்பரிசிக்கின் நாயகன் பலயீனப்படுவன். என்றிவ்வாறுமகாகுணபாடமென்கிற வைத்தியசாஸ்திரத்திற் கூறியிருக்கின்றமையால் புணர்ச்சிகாலத்தில் சரீரத்திற்கு யாதாமொருவருத்

தழுண்டாயினும் பலவிதத்திருப்தியின்மையு மதற்குரியகாரணங்களையும் நீக்கவேண்டும். ஏனெனில், திருப்தியின்மை கருத்தரித்தலுக்கு விரோதமாகும். அதுவேயோமிருந்த விரோதமாயிராமற் போனாலும் திருப்தியாயிருத்தலும் சுவஸ்தசித்தமாயிருத்தலும் கருத்தரித்தலுக்கு அநுகூலமானகுணங்களாம். அவைகள் கர்ப்பக்குழலையும் ஸ்திரீ தாரமானவுதிரத்தைச் சரீரமுழுவதும் பரவச்செய்யும் ரத்தக்குழாய்களையுங் கெடுதியின்றிச்செவ்வைப்படுத்தும் இவைசெவ்வைப்படின் மனுஷ்யசுபாவத்திற்குரிய விருப்பம், சுகம், காமம், சந்தோஷம், உச்சாகமாகிய இக்குணங்கள் குறையாமல் விர்த்தியாவதுமன்றிச் சரீரமும் மனோவியாபாரமும் திடப்படும். தாயின்மனோவியாபாரமே பிள்ளையுண்டாவதற்கு உறுதியான காரணமென்று விவேகிகளியாவருங்கூறியிருக்கின்றார்கள். ஆதலால், மாதர்கள் தங்கள் மனோவியாபாரங்களை யெவ்வளவு தெளிவாயும் பரிசுத்தமாயும் செலுத்துகிறார்களோ அவ்வளவு சவுந்தரியமுள்ள பிள்ளைகளைப்பெறுவார்கள்.

இதுவுமன்றி க-வது.

உலகத்திலியங்குகின்ற வுயிர்களுள் மனிதர் அறிவுடைமையாற் சிறந்தவராயினர் அவரடையத்தக்க அறம், பொருள், இன்பம், வீ டென்னும் நான்குபுருஷார்த்தங்களையும் பிரமசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், துறவறமென்னும் நான்காசிரமத்திற்குரிய வொழுக்கத்தினின்றல்லது அடையக்கூடாது. இந்நான்கு ஆசிரமங்களும் பொதுவியல்பு நோக்கி இல்லறந் துறவறமென இரண்டாக்கக்கொள்ளப்படும்.

உ-வது அவற்றுள் துறவறமாவது அறம் பொருளின்பங்களை அநித்தியமெனத்துறந்து நித்தியமாகிய வீட்டையடையும்பொருட்டு யோகமுயற்சி செய்தலாம்.

௩-வது யோகமுயற்சி யாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி முதலியவற்றையநுசரித்து சலத்திலும், அக்கினியிலும், பனியிலும், மழையிலும், வெய்யிலிலும் வருந்திக்கத்தலைப் பலாதிகளைப் புசித்துத் தேகத்தை மெலிவித்துப் பிராண வாயுவை வருந்தி கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவைகளி லொன்றிற் சத்தஞ் சிந்தை யைவைத்து ஐம்புலனடக்கித் துன்பப்படுவதாம்.



௪-வது ஆயினு மிதனால்வீட்டை யடைதல் மிகவுங் கடினம் ஏனெனில், இவ்வரிய அநுஷ்டானத்தில் யாதொருகாரணத்தால் எவ்வளவேனும் மனோசஞ்சலமுண்டாயின் இதனாலடைவோமென்று நம்பியிருந்தவீட்டையுமிழப்பதன்றி பந்திக்கப்பட்ட பிராணவாயுவு நெறிமயங்கி வெளிப்படுகையில் சரீரத்தைச்சார்ந்தவ முகத்தி லெழுப்பித்தனாயில் மோதுவதும் கபாலம் வெடிப்பதும் கண்கள் பிதுங்குவதும் நாவின் வலிகுறைந்து குதலைச் சொல்லாவதும் வயிறு கிழிவதுமாகிய இழிவுகளையும் அடைவார்கள்.

ரு-வது இவ்வாறு வருத்தமுறுந் துறவறத்தைப் பார்க்கிலும் இல்லறத்தால் இகத்திலும் லோகாந்தரத்திலும் அறம், பொருள், இன்பங்களாலுண்டாகும் ஆனந்தத்தை யநுபவிப்பதுமன்றி வீடாகிய நித்தியானந்தத்தையும் எளிதிலடையலாமென்பது பற்றியே இல்ல[illegible] பிரமாணங்கள் பலவுண்டு.

குறள்.

அறத்தாற்றினில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப்பெறுவதெவ........................ன்.
அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை யஃது.....................ம்
பிறன்பழிப்ப தில்லாயினன்................................று.

௬-வது அன்றியுந் துறவறத்தா லடையக்கூடாத முத்தியையும் இல்லறத்தால் இன்மையி லெளிதி லடையலாமென்று கைவல்லிய முதலிய வேதாந்த சாஸ்திரங்களிலுஞ் சொல்லியிருக்கின்றது. ஆதலால் இல்லறம் இகபரசாதகமென்பது சகல சாஸ்திர சம்மதமாகவுஞ் சயுக்திகமாகவுங் கொள்ளப்படும்.

எ-வது இதுவன்றி ஒருவன் செல்வத்தாலெவ்வளவு பெருமையையுடையவனாயிருக்கினும் நற்குணநற்செய்கைகளையுடைய அநுகூல தாம்பத்தியமின்றி இல்லறமுடிவுபெறாது. அநுகூலதாம்பத்தியத்திற்குச் சதிபதிகளொருஞ்சவேண்டும். அதற்கு அங்காகமத்தைப் பார்க்கினுமுக்கிய சாதனமொன்றுமில்லை.

அ-வது உலகத்துள்ளுயிர்களை ஆண் பெண்ணென இருவகையாகப்படைத்து அவைகளின் உற்பத்திக்குரிய புணர்ச்சியின்பத்தை

இன்பத்தையுண்டாக்கி, நீவவாசகர்ப்பத்துக்கு மாறுதல் அறைந்தாற்போல் இன்பத்தை யிகழ்ந்தவடுறுவோர் அநேகமுற்றதவர்களல்லவென்று அவர்களுக்கே கல்வருத்தெரிந்திருக்குமல்லவா,

அவ்வது இச்சிற்றின்பம் சகலவுயிர்களுக்கும் இயற்கையாயினும், அறிவாற் சிறந்த மனிதர் இன்பப்பருப்புகளும், ஒழியும், உணர்ந்து புணராவிடின் இதற்கும் விலங்கின்புணர்ச்சிக்கு மென்னபேதம்? ஆதலின் அதனையும் பொருளையும் தெளியப்பொருட்டே, மனுஷகலியமுனிவர்ற் கூறிய தர்மசாஸ்திரங்கள் முதலியவைகளை யாவரும் எற்றுக்கொள்வதுபோல, அப்புருஷார்த்தங்களி லொன்றுமாய இன்பத்தையும், விதிவிலக்குகளறிந்து அனுபவிக்கும்பொருட்டு பலவிதிகளாற்கூறிய இந்நூலையும் ஏற்றுக்கொள்ளுதல், இல்லறத்தாருக் கடமையாயிருக்கவேண்டுமல்லவோ?

மேலும் இவ்வகைக்கூறுதல் அதிவிரைவு [illegible] வானத்தால் மிகப்பபெருத்தமற் தெரிந்துகொள்ளாப் போகம்போம் காமத்தால் பலமாதர்களுக்குள்ளாகு மனதை விவேகத்தால் மிதப்பித்தாமல் அதிக்கிரமிக்குந் தேகபலத்தையுங் கைப்பொருளையுமிழந்து மனையாள்முதலியோர் கீர்த்திக்கத்தக்க ரோகியாகித் துன்பமுறும் பொருட்டன்று. ஆனால், இவ்வாகமத்திற்கூறியவற்றுள் இன்னவிபலவிளையுடையாளொன்றும், அவ்வியல்பிற்குத்தக்க தலைவி இன்னதென்றும், பகுத்தறிந்து ஸ்திரீயினிடத்து இன்பம்பயக்கின் இரண்டு கண்களின் பார்வை பொருபொருளினிடத்துப் பொருந்துவதுபோல் அவ்விருமனமொருமையாயும், உள்ளன்புள்ளவளாயும், நாயகன் குறிப்பின்வழியொன்றுபட்டும், திறபல் அதனால் பிறர்கள், தேவர்கள், அதிதிகள், சுற்றத்தார் தாங்களினும், இவர்களையாயும் நற்சிந்தை, நற்சொல், நற்செயல் என்பவைற்றோடு உபசரித்து மகிழ்வித்தல் முதலிய இகபரசாதகமான இல்லறத்தினை வழுவின்றி நடத்தும் பொருளைக்கொண்டு.

## அகஸ்தியமாமுனிவரருளிச்செய்த காவியம் ஆயிரத்தைத் தழுவிக் கூறிய மலட்டுத்திரிக்கைகளின் விபரமும் அதற்குச் சிகிச்சையாகிய மருந்துகளும்.

1-வது புணர்ச்சிகாலத்தில் நாயகிக்கு தலைநோய்கண்ணில் அய்யுக்கும் கருக்குழியிற்பாசிபற்றி யிளக்கமற்றிருக்குமென்றறிந்து அதற்கு கோழிப்பிச்சுப் பருத்திப்பருப்பும் சமஎடையாகச் சேர்த்து சுத்தஜலம்விட்டரைத்து அந்த ருதுஸ்நானதினம் முதல் மூன்றுதினம் வரையிலுங் கோழிமுட்டையளவு நாயகியும் மேலனுஞ் செய்துகொண்டு புணரில் கர்ப்பந்தரிக்கும். ஒருவேளை, பலியாவிடில் மூன்று ருது அளவும் இங்ஙனஞ்சொல்லியபடி செய்து புணரிற் பலனுண்டாகும்.

2-வது புணர்ச்சியில் நாயகிக்குச் சரீரமுழுவதும் வலிக்குமாயின் கருக்குழியில் வாய்வுநிறைந்திருக்குமெனக்கருதி அதற்கு என்னெண்ணெயில் இரண்டுவிருகனிடை காயத்தைச்சேர்த்து மத்தித்துச் சீலையிலூட்டி மூன்றுதிரியாகத் துணித்து முற்கூறியகாலத்தில் மூன்று தினமும் ஒவ்வொருதிரியாகமாற்றி கேம்பத்தில் புகுத்துவைப்பதுமன்றி இம்மருந்தை நாயகனும்லேபித்துக்கொண்டு புணரின் பலிதமாம்.

3-வது புணர்ச்சியில் நெஞ்சுவலிகாணுமாயின் கருக்குழியில் தசை வளர்ந்திருக்குமென்றறிந்து அதற்கு திப்பிலி வராகனெடை கூடம் விருகனெடை கோழிப்பிச்சு விராகனெடை இம்மூன்றையும் அரைத்து மேற்கூறியகாலத்தில் இருவரும் லேபித்துக்கொண்டு புணரில் நன்மைபயக்கும்.

4-வது புணர்ச்சியில் முதுகுநோய்காணில் கருக்குழியில் கிருமி நிறைந்திருக்கும் ஆதலாலதற்கு இந்துப்பு, அரிதாரம், பெருங்காயம் வகையொன்றிற்கு விராகனெடை ஒன்று இவைகளை வெள்ளிலரைத்து மேற்கூறியபடி மூன்றுதினமும் இருவரும் பூசிப்புணர்க சௌக்கியமாம்.

5-வது புணர்ச்சியில் [illegible] கருக்குழியில் வைவுமையதிகரித்ததென்றறிந்து இதற்கு கடுக்காய்த்தோல் வராகனெடை ரெண்டு வெள்ளைச்சர்க்கரை வராகனெடை நாலு புனுகு விருகனெடை வீசம் இவைகளை அரைத்து மூன்றுண்டையாக்கி நாயகிக்கு மாதந்திரம் மூன்றுகாலை உள்ளுக்குக்கொடுத்து பின்பு குங்குமப்பூவு, அதிமதுரம், நற்சீரகம் வகைக்கு வராகனெடை ஒன்றுஞ் சமமாகச் சேர்த்து பனிநீரிலரைத்து மேற்கூறியகாலத்தில் இருவரும்பூசிப் புணர்க.

6-வது புணர்ச்சியில் நாயகிக்கு வெப்பம் காணில் கருப்பந்தானம் அதிக குளிர்ச்சியுற்றதெனக்கருதி சடாமாஞ்சில் கடுக்காய்த்தோல் சவ்வர்க்காரம் இம்மூன்றுஞ் சமஎடையாகச் சேர்த்து அரைத்

குச் சிலயிலூட்டி மேற்கூறிய காலத்திற் கடிதடத்திற் புருஷர்களை யும் லேபித்துப் புணர்க.

7-வது ரோகதோஷத்தாலுந் தெய்வகுற்றங்களாலுங் கருத் தரியாமலிருக்குமாயின் அதற்கு இம்மருந்துகள் பயன் படாதாதலின் பெரியோரால் நிவர்த்தி செய்துக் கொள்ளும்படிக்கான வேற்பா டொன்றிருக்குமாதலா லம்மாதிரியாகச் செய்வித்து பயன்படுவார ன்றி அம்மாதிரியாக செய்வித்துக்கொள்ள யாதொரு தடையில்லை. மேற்கூறிய லேபன வகைகள் சதிபுருஷர்களிருவற்கு மாதலின் அக் காலங்களி லவர்களுக்கு கைப்பு, புளிப்பு, துவர்ப்புள்ள பதார்த்தங்க ளையுங் குளிர்ந்தஜலத்தையுஞ் சேர்க்கலாகாதென்றறிக.

மனிதர் நான்கு புருஷார்த்தங்களை யடைவதற்கு முயல வே ண்டும் அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையு மனுபவித்து முமூட்சுகளாகவேண்டும் நன்னெறியில் நிற்பதற்கு வித் தை புத்தி மனோதைரிய முதலிய பலகுணங்கள் வேண்டும். அவைக ளைப்பெற்றபின் தான் பொருளீட்டல் லட்சுமீகடாக்ஷத்தினாலுண் டாகவேண்டும் பின்பு கிரகஸ்தாசிரமம்பெற்றுக் காமத்தை யனு பவிக்கும்போது அனுகூலதாம்பத்திய மடைந்து சரவுதஸ்மார்த்தக ர்மங்கள்முதலிய பரலோக சாதகமான காரியங்களை நிறைவேற்றி முறையே மோட்ச மடையவேண்டும். ஆனால், கிரகஸ்தாச்சிரமத்திற் கு விதியின்றிப்பங்கம்வரின் வானப்பிரஸ்தத்தையாவது சன்னியா சத்தையாவது பெற்று அவ்வழி நின்று பரலோகத்தை யடையவே ண்டும். இந்தக்கிரமத்தப்பித்தருமநூல் அர்த்தநூல் முதலிய வேதப்பி ரமாண அனுஷ்டானங்களையும் பழித்து நிற்பவர்கள் எவ்வளவு அ சமர்த்தராயிருக்கிறார்களென்றதையும் எவ்வளவுகஷ்டத்தையடை கிறார்களென்பதையும் புத்திமான்கள் யோசிக்காமற் போகமாட்டா ர்கள். ஏனெனில், தர்மார்த்தகாம மோக்ஷமென்கிற நான்குபுருஷார் த்தங்களைப் புருஷர்களனுஷ்டித்தனுபவிக்க வேண்டுமென்பது கடவுளி னுள்ளத்திற்கும் சாஸ்திரங்களின் கருத்திற்கும் சம்மதமாயிருக்கின்ற தென்பதை ஒத்துக்கொண்டிருக்கிறயாவரும் அர்த்தந்தப் புருஷார்த்த த்தை அனுபவித்தற்கு, அகத்தியமானவிதிவிலக்குகளை உணர்த்துஞ்சா ஸ்திரம் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளாமற் போவார்களோ? ஆனால், இந்நூலின் சாம்பிரதாயங்களை தெரிந்துக்கொள்ளவேண் டுமென்று பிரயத்தனப்படுஞ் சனங்களுக்கு இவ்வளவு அல்பமாக்

இருக்கின்றவிஷயம் சாமான்னியமாக தெரிந்துக் கொள்ளக்கூட வில்லை. ஆதலால் இந்நூலை அகத்தியமாக அச்சிறப்பதிப்பித்து பிரசித்தப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தை யனுசரித்ததனால் சகலசனங்களுக்கு ம் இப்புத்தகமெத்த பிரயோஜனத்தையும் சந்தோஷத்தையும் உண் டாக்குமென்பதற்கு நான் எவ்வளவும் சந்தேகப்படவில்லை. மற்றுமிப் புஸ்தகம், [illegible] [illegible] முக்கியமாக [illegible] புத்திமான்களாகிய பண்டிதர்களுக்கு நன்றாய்த்தெரிந்தவைகளுமாகிய பலகாரணங்கள் பழுதிலிருக்குமாயின் சகலரு மங்கீகரித்தெழுத்துக் குற்றஞ் சொற்குற்றம் பொருட்குற்றம் இருக்கினு மங்கீகரிப்பர்.

இவ்வண்ணம் பதிப்பிக்கப்பட்டது.

இங்ஙனம்:

டி. இ. வெங்கடசாமி நாயுடு,

ஆயுர்வேதபாஷகர், வெலிங்டன்.

முற்றும் பெற்றது.

114824